...ed as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

..–05 திருவள்ளுவர் ஆண்டு 2045 கார்த்திகை 15 திங்கட்கிழமை (01.12.2014) பக்கங்கள் 20 ஓசை – 062

## ..வர் வந்தாலும் என்னை தோற்கடிக்க முடியாது

### ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

யார் வந்தாலும், என்னை தோற்கடிக்க முடியாது. ஒருசிலர் என்னை, போர்க்குற்ற நீதிமன்றத்துக்கு அனுப்ப முயற்சிக்கின்றனர். பவுண்களாலோ அல்லது டொலர்களாலோ விலை கொடுத்து வாங்கக்கூடியவர்கள் இனியும் என்னுடைய அமைச்சரவையில் இல்லை என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, அரசியலுக்கு பிரவேசித்து 25 வருட பூர்த்தியை ..ிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வொன்று மாத்தறையில் ..பெற்றது. இந்நிகழ்வில்

(19) ஆம் பக்கம் பார்க்க...

## ஜனாதிபதி மகிந்தவுக்கு எதிராக தேர்தலில் போட்டியிடவில்லை

### முதலாவது பிரசாரக் கூட்டத்தில் மைத்திரி



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிராகவோ அவரது தனிப்பட்ட குடும்பத்திற்கு எதிராகவோ தேர்தலில் போட்டியிடவில்லை என எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.


இலஞ்சம், ஊழல், வீண்விரயம் மற்றும் குடும்ப ஆட்சிக்கு எதிராகவே தான் இதனை மேற்கொண்டுள்ளதாகவும் பொது வேட்பாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் ஆட்சிக்கு வந்தால், நாட்டில் உள்ள சகல கட்சிகளையும் இல்லாமல் செய்துவிடுவார் எனவும் அவர் கூறியுளள்ளார்.

பொலன்நறுவையில் நேற்று

(19) ஆம் பக்கம் பார்க்க...

# மைத்திரியை நாடி பிடித்தறிய வருகிறார் அஜித் டோவல்



..ரணியின் பொது வேட்பா.. போட்டியிடவுள்ள மைத்..ல சிறிசேன மற்றும் முன்.. ஜ..திபதி சந்திரிகா குமா.. ஆகியோருடன், இலங்.. இன்று வருகை தரும் ..ின் தேசிய பாதுகாப்பு ..சகர் அஜித் டோவல் ..கா..வுள்ள சந்திப்பின் ..ரின் கவனமும் .. இந்தியன் எக்ஸ் ..வெளியிட்டுள்ளது.

இன்று மைத்திரிபால சிறிசேனவையும், சந்திரிகா குமாரதுங்கவையும், அஜித் டோவல் சந்திக்கவுள்ளார்.

இன்று மாலை ஐ.தே.க. தலைவர்களுடன் தனியான சந்திப்பு ஒன்றையும் அவர் மேற்கொள்ளவுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸையும் அவர் சந்திக்கவுள்ளார்.

அவர் மாலைதீவுக்குப் புறப்படுவதற்கு முன்னர், நாளைய தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும், பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷவையும் சந்தித்துப் பேசுவார்.

ஜனாதிபதிக்குச் சவாலாக தேர்தலில் போட்டியிடவுள்ள மைத்திரிபால சிறிசேனவுக்கும், அஜித் டோவலுக்கும் இடையில் நடக்கவுள்ள சந்திப்பே முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது.

சந்திரிகா குமாரதுங்க இந்தியாவுக்கு மிகவும் நெருக்கமா

(19) ஆம் பக்கம் பார்க்க...

## அன்னப்பறவை சின்னத்தில் போட்டியிடுகிறார் மைத்திரி?

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன புதிய ஜனநாயக முன்னணி (New Democratic Front) கட்சியின் கீழ் 'அன்னப் பறவை' சின்னத்தில் போட்டி யிடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புதிய ஜனநாயக முன்னணி என்ற கட்சி ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்காவின்

(19) ஆம் பக்கம் பார்க்க...

## வெள்ளம் பாதித்த பகுதிகளை பார்வையிட மறுத்த மாவை



வடமராட்சி பொலிகண்டி கிழக்கு கரையோரப் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்விடங்களைப் பார்வையிடுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா மறுத்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, தற்போது பெய்து வரும் மழை காரணமாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு பொலிகண்டி கரையோரப் பொதுநோக்கு மண்டபத்திற்கு நேற்று வாகனத்தில் சென்ற மாவை சேனாதிராசா அங்கிருந்தவர்களுக்கு சிறுதொகை உணவுகளை வழங்கியுள்ளார்.

இதன்போது வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தமது வாழ்விடங்களை வந்து பார்வையிடுமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்தனர். வெள்ளம் மூழ்கிக் காணப்படும் தமது இடங்களில் தாம் வாழ முடியாது இருப்பதாகவும், தமது சொந்த இடங்களில் தாம் குடியமர ஏற்பாடு செய்யு

(19) ஆம் பக்கம் பார்க்க...

## ..றைவேற்று அதிகாரம் கொண்ட ..மர் பதவி ஆபத்தில்லையா?

### கேட்கிறார் தயான் ஜயதிலக

.. முறைமையின் .. அதிகாரங் களை ..யிடம் குவிப்பது ..ால், அதனைப் ..வரிடம் ஒப்படை..படி ஆபத்தில்லாது ..என அரசியல் ஆய்.. இராஜதந்திரியுமான கலாநிதி தயான் ஜயதிலக கேள்வி எழுப்பியுள்ளார்.

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறைமையை நீக்கிவிட்டு பிரதமர் முறைமையைக் கொண்டுவருவது குறித்து நேற்றைய சிங்கள ஊடகமொன்றுக்கு அவர் வழங்கியுள்ள செவ்வியொன்றிலேயே இக்கருத்தை முன்வைத்துள்ளார்.

ஜனாதிபதி என்பவர் முழு நாட்டு மக்களினால் தனியான

(19) ஆம் பக்கம் பார்க்க...

## ..மைச்சர் பதவியை ..றந்தார் நவீன்



தேர்தலில் போட்டியிடும் எதிரணி வேட்பாள..ருக்கு ஆதரவு தெரிவித்து, பொதுமுகாமைத்துவ, மறுசீரமைப்பு அமைச்சர் நவீன் திசநாயக்க தனது பதவியில் இருந்து விலகியுள்ளார்.

நேற்று முன்தினம் தனது பதவிவிலகல் கடிதத்தை ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷவுக்கு அனுப்பிவிட்டதாக நவீன் திசநாயக்க தெரிவித்துள்ள்ளார்.

இன்று எதிர்க்கட்சித் தலைவரின் ..த்தில் மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து, ஊடகவி.. மாநாட்டில் தனது முடிவை அறிவிக்கப்போவதாக நவீன் ..க்..யுள்ளார்.

..சர பதவியில் இருந்தும், அரசாங்கத்தின் அனைத்துப் ..ளில் இருந்தும் தாம் கொள்கை

(19) ஆம் பக்கம் பார்க்க...

## புலமைப் பரிசில் பரீட்சை மாற்றம் எதுவும் இல்லை

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்கான பாடத்திட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்தப் போவதில்லையென தேசிய கல்வி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மாணவர்களுக்கு இலகுவான முறையில் ஒரு வினாத்தாளை மாத்திரம் வழங்கவுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் லக்ஷ்மன் ஜயதிலக குறிப்பிட்டுள்ளார்.

குறித்த வினாத்தாள் ஒரு

(19) ஆம் பக்கம் பார்க்க...



# இராமநாதன் கல்லூரியின் தேவைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்

## - அமைச்சர் டக்ளஸ் உறுதிமொழி -



இராமநாதன் கல்லூரியின் தேவைப்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்து அவற்றை கட்டம் கட்டமாக நிறைவேற்றும் அதே வேளை பாடசாலையின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் முழுமையான பங்களிப்பு வழங்கப்படுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் நேற்று பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இக்கல்லூரியின் முன்னேற்றம் தொடர்பில் அதிபரால் தெரிவிக்கப்பட்ட அதேவேளை, கல்லூரியின் தேவைப்பாடுகள் குறித்த கோரிக்கைகளும் இங்கு முன்வைக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் இக்கல்லூரியின் ஊடான கல்வி மற்றும் விளையாட்டுத்துறைகளின் மேம்பாட்டு செயற்றிட்டங்களை முன்னெடுக்கும் வகையில் கோரிக்கைகள் தொடர்பில் ஆராயப்பட்டு அவற்றை கட்டம் கட்டமாக நிறைவேற்றுவதற்கு உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

எனவே, பாடசாலையின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் எதிர்காலங்களில் பாடசாலை சமூகத்தினர் மட்டுமன்றி புலம்பெயர் சமூகம் உள்ளிட்ட அனைத்து துறைசார்ந்தவர்களும் தமது ஒன்றிணைந்த பங்களிப்புகளையும் ஒத்துழைப்புக்களையும் வழங்க வேண்டும்.

இப்பாடசாலையில் மத வேறுபாடின்றி ஏனைய மதங்களுக்கும் சமவுரிமை வழங்கப்பட வேண்டுமென்பதுடன் அதனூடாக பாடசாலையில் பாரிய மாற்றங்களையும், முன்னேற்றங்களையும் மேம்பாடுகளையும் காணமுடியும்.

இதனடிப்படையில் பாடசாலையின் முன்னேற்றத்திற்கு எதிர்காலத்தில் பௌதீக வளங்கள் உள்ளிட்ட ஏனைய அனைத்து தேவைகளையும் பெற்றுக் கொடுக்கப்பட்டு அதனூடாக முன்னேற்றத்தை எட்டுவதற்கும் எனது முழுமையான பங்களிப்பு எப்போதும் இருக்கும்.

ஆரம்ப நிகழ்வுகளை அடுத்து கல்லூரியின் அருணாசலம் கேட்போர் கூடத்தில் அதிபர் திருமதி கமலராணி கிருஸ்ணபிள்ளை தலைமையில் நடைபெற நிகழ்வில் 2014 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை, உயர் தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவ மணிகளும், பல்கலைக் கழகங்களுக்கு தெரிவாகிய மாணவிகளும் பதக்கம் அணிவிக்கப்பட்டு பரிசில்கள் வழங்கி அமைச்சரால் கௌரவிக்கப்பட்டனர்.

இதேபோன்று, விளையாட்டு மற்றும் ஏனைய துறைகளில் சாதித்தோரும் கௌரவிக்கப்பட்டனர்.

இதன்போது வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் சந்திரராசா, யாழ்.மாநகர முன்னாள் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, பொறியியலாளர் சூரியசேகரம், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆசிரியையும், பழைய மாணவியுமான திருமதி புனிதவதி சண்முகலிங்கம் உள்ளிட்ட பிரதி அதிபர், பகுதித் தலைவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் மற்றும் கல்விப் புலம் சார்ந்தோரும் கலந்து கொண்டனர்.

# கிட்டார் கலைஞர்கள் அமைச்சரை சந்திக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

இலங்கை கிட்டார் அசோஷியேசன் ஆதரவில் கிட்டார் பயிற்சி பெறுகின்ற யாழ். மாவட்ட கலைஞர்களுக்கான, நேர்முகத் தேர்வும் பதிவும் நேற்று முன்தினம் காலை யாழ். பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் கலைஞர்கள் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

மேற்படி பதிவு செய்யப்பட்டுள்ள கலைஞர்களின் கோரிக்கைகள் தொடர்பில் டிசம்பர் மாதம் முற்பகுதியில் விசேட கலந்துரையாடலொன்று பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னிலையில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது மேற்படி கலைஞர்கள் தங்களது பயிற்சிகளை மேற்கொள்ளுவதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதுடன், யாழ். கிட்டார் கலைஞர்களின் அரங்கு உருவாக்கப்பட்டு, அதற்குரிய நிர்வாகத் தெரிவும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேநேரம், எதிர்வரும் ஜனவரி மாதம் 31 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் தேசிய மற்றும் சர்வதேச கிட்டார் இசைக்கலைஞர்கள் கலந்து கொள்ளும் இசை நிகழ்வொன்றும் நடாத்தப்படவுள்ளது. இந்நிகழ்வில் யாழ். மாவட்ட கலைஞர்களது இசை நிகழ்வும் உள்வாங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2585 திகதி 29-11-2014

ஆங்கில எழுத்து: H

வெற்றி எண்கள்: 13 39 40 60

போனஸ் இல: 30

ஜக்பொட் பரிசு ரூ.20,695,925/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 197136 | 20/- | 3,942,720/- |
| 2 இல | 14105 | 100/- | 1,410,500/- |
| 3 இல | 286 | 1,000/- | 286,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7902 | 40/- | 316,080/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 543 | 1,000/- | 543,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 19 | 10,000/- | 190,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 20,695,925/- | - |
| 1 இல + போனஸ் இல | 9427 | 100/- | 942,700/- |
| 2 இல + போனஸ் இல | 457 | 500/- | 228,500/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 400 | 200/- | 80,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 12 | 1,500/- | 18,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 230293 | | 9,457,500/- |

ஊதா நிற டிக்கட்டுகள் 2014.12.03 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 21,233,650/-

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02
தொ.பே: 2333546/7

(C/3587)


# மன்னார் நகரில் கடையடைப்பு போராட்டம்

மன்னார் நகரில் உள்ள வர்த்தக நிலையங்களை நாளை மூடி எதிர்ப்பை வெளிப்படுத்தவுள்ளதாக மன்னார் நகர வர்த்தக சங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அறிவித்தல் கடிதம் அப்பகுதியில் உள்ள சகல வர்த்தக நிலையங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் பண்டிகைக்கால வியாபாரத்துக்காக மன்னார் நகர சபையால் மன்னாரில் வழங்கப்படவுள்ள தற்காலிக கடைகளுக்கான அனுமதியை நிறுத்துமாறு மன்னார் நகர சபை தலைவர், செயலாளர்களுக்கு மன்னார் நகர வர்த்தக சங்கத்தினால் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது.

குறித்த அறிவித்தல்களுக்கு சாதகமான பதில் கிடைக்கவில்லை. இந்த நிலையில் கடந்த 28 ஆம் திகதி மன்னார் நகர வர்த்தக சங்க நிர்வாகம் மேற்படி விடயம் தொடர்பில் கலந்துரையாடியது.

இதற்கமைவாக நாளை வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடி முழு அளவிலான கடை அடைப்பை மேற்கொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தவுள்ளதாக மன்னார் நகர வர்த்தக சங்கம் அறிவித்துள்ளது.

# லயன்ஸ் கழகத்தினால் பயன்தரு மரங்கள் நாட்டல்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலையின் பின்புறமாக மானிப்பாய் நகர லயன்ஸ் கழகத்தின் அனுசரணையில் பயன்தரு மரங்கள் அண்மையில் நாட்டி வைக்கப்பட்டன.

தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை நோயாளர்களுக்கு மானிப்பாய், இணுவில், உரும்பிராய், சுன்னாகம், மல்லாகம், தெல்லிப்பளை ஆகிய லயன்ஸ் கழகங்கள் இணைந்து பல்வேறு உதவிகளை அண்மையில் வழங்கியிருந்தன.

இந்நிகழ்வின் ஒரு கட்டமாகவே குறித்த மரம் நாட்டல் வைபவமும் இடம்பெற்றது. வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் யோ.திவாகர் மற்றும் லயன்ஸ் கழகங்களின் அங்கத்துவ மேம்பாட்டு இணைப்பாளர் கமில்ஸ் பெர்னாண்டோ ஆகியோர் கலந்து கொண்டு மரங்களைச் சம்பிரதாயபூர்வமாக நடுகை செய்து வைத்தனர். (63)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைத்த உணவுகள்



(வடமராட்சி)

வடமராட்சியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து வாழும் 100 வரையான பொதுமக்களுக்கு பொலிகண்டி கல்யாண வேலவர் அன்ன சபையினர் சமைத்த உணவுகளை வழங்கி வருகின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் தொடர்ச்சியாக 3 நாட்களாக இவர்களுக்கான சமைத்த உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இன்றைய தினமும் இவர்களுக்கான சமைத்த உணவுகள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பொலிகண்டி ஊறணி பகுதியில் தாழ் நிலங்களில் வாழும் பொதுமக்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

சமைத்த உணவுகள் வழங்குவதற்கான பொருள், பண உதவிகளை பொலிகண்டி மக்களும் புலம்பெயர்ந்த பொலிகண்டி உறவுகளும் வழங்கி வருகின்றனர். (116)

# சேதமடைந்துள்ள கழிவு வாய்க்காலை புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

(அச்சுவேலி)

அச்சுவேலி, தம்பாலை கிராமத்திலிருந்து தொண்டைமானாறு கடல் நீரேரியை சென்றடையும் வெள்ளம் பாயும் வெள்ளவாய்க்கால்கள் முற்றாக அழிவடைந்த நிலையில் காணப்படுகின்றன.

இதனால் தற்போது பெய்யும் பருவகால மழை காரணமாக வெள்ளநீர் வழிந்தோடி கடலில் கலக்க முடியாது தேங்கி நிற்பதால் பொதுமக்கள் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

விமான நிலைய வீதியில் உள்ள வெள்ள வாய்க்கால் முற்றாக மண் மூடி மேடாக காட்சியளிக்கின்றது. இவ்வீதியில் அமைந்துள்ள இரண்டு மதகுகள் இருந்த இடமே தெரியாது மூடப்பட்டுள்ள நிலையில் காணப்படுகின்றன.

மேலும் அச்சுவேலி தொண்டைமானாறு சந்நிதி வீதியில் உள்ள ஒரு பிரதான மதகும் முற்றாக மூடப்பட்டுள்ளது.

வெள்ளப்பெருக்கு ஏற்படும்போது வெள்ள நீர் பாய்ந்து கடலில் கலக்க முடியாதிருப்பதால் கிராமம் வெள்ளத்தில் மூழ்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த வெள்ள வாய்க்காலையும், மதகுகளையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் இப்பிரதேச சபை உறுப்பினர்களும் பார்வையிட்டு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென கிராம மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (85)


## சிறு விளம்பரம்

### டயானா பிளாஸ்ரிக் ரீசைக்கிள் (மீள்சுழற்சி)

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
(இலுப்பையடிச் சந்தி அருகாமை)
021 222 8680,
077 592 5088.

(C/3589)

### வீட்டுடன் காணி விற்பனை

பூதர்மட வீதி, நீர்வேலி தெற்கு, நீர்வேலி எனும் இடத்தில் 2 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0774104920
0774184703

(C/3602)

JSAC
யாழ். சமூக செயற்பாட்டு மையம்
பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
ஆற்றல் கொண்ட பெண்களே நல்லதோர் சமூகத்தின் ஆரோக்கியமாதலால், பெண்களின் ஆற்றல் வளர்த்து ஆச்சரியக் குறிகளாய் இவ் உலகம் ஆளச் செய்திடுவோம்.
16
2014

# அரச ஊழியர்கள் சேவையை மட்டுப்படுத்தாது மக்களைத் தேடிச் சென்று சேவையாற்றவேண்டும்

## ஓய்வுபெற்ற யாழ்.பிரதம தபாலதிபர் தெரிவிப்பு

(யாழ்.நிருபர்)

அரச ஊழியர்கள் அலுவலகங்களுடன் தமது சேவையைக் கட்டுப்படுத்தாது பொது மக்களைத் தேடிச் சென்று சேவையாற்ற முன்வர வேண்டும். நான் உபதபாலதிபராக இருந்த காலத்தில் இவ்வாறு நடந்து கொண்டமையால்தான் இத்தகைய உயர்ந்த பதவிக்கு வரமுடிந்தது.

இவ்வாறு ஓய்வுபெறும் யாழ். பிரதம தபாலதிபர் சி.குமாரவேலு தமக்களிக்கப்பட்ட சேவைநலன் பாராட்டு விழாவில் கலந்து கொண்டு உரைநிகழ்த்தும் போது தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பிரதம தபால் அலுவலகத்தில் பிரதம அஞ்சல் அதிபர் ரி.சௌந்தரராஜா தலைமையில் அண்மையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தபால் அதிபர் சி.குமாரவேலு தொடர்ந்து பேசுகையில்,

நான் காரைநகரைச் சேர்ந்தவன் காரைநகர் பல்வேறு சமூக மக்கள் அன்புடனும், ஒற்றுமையாகவும் வாழுகின்ற பிரதேசம் அந்த ஊர் மக்கள் காட்டிய ஒத்துழைப்பும் முன்னாள் வலந்தலை உபதபாலதிபர் திருமதி புனிதவதி தர்மாவின் ஆசியுமே என்னை இந்த உயர்நிலைக்கு உயர்த்தியது.

நான் தபாலதிபராக கடமையேற்குமுன் ஓர் ஆசிரியராகவே இருந்தேன் என்னிடம் கற்ற மாணவர்கள் பலரும் உயர் பதவிகளை வகித்து வருகின்றனர். வலந்தலை உபதபாலகத்தில் உப அஞ்சல் அதிபராக இணைந்து கொண்ட நான் கொட்டாஞ்சேனை, நீர்கொழும்பு, காரைநகர், யாழ்ப்பாணம் ஆகிய தபாலகங்களில் மக்களுக்குச் சிறந்த முறையில் சேவையாற்ற முடிந்தது. இக்காலத்தில் தனக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டார். (10)

# சிறப்புற நடைபெற்றது அதிபர் சிவலிங்கத்தின் மணிவிழா



(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் பிரதி அதிபராகவும் தமிழாசானாகவும் பணியாற்றிய சி.சிவலிங்கத்தின் மணிவிழா நேற்றுமுன்தினம் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி பிரதான மண்டபத்தில் அதிபர் ச.வேலழகன் தலைமையில் சிறப்புற இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி மற்றும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி ஆகியவற்றின் அதிபராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற த.முத்துக்குமாரசுவாமி, கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன், நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.அகிலதாஸ், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் ஓய்வு நிலை அதிபர் க.இ. இராசசேகரம், புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி அதிபர் இ.இராஜமகேந்திரன் ஆகியோர் வாழ்த்துரைகளையும் விழா நாயகரின் மாணவர்கள் சார்பாக ஆசிரியர்களான க.கிருபாகரன், பா.சசிகுமார், செ.செல்வச்சந்திரன் ஆகியோர் வாழ்த்துரைகளையும் வழங்கினர்.

# தொடர்ச்சியான கனமழையால் நலன்புரி நிலைய மக்கள் பாதிப்பு

தற்போது பெய்து வரும் கடும் மழையினால் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையத்தில் தங்கியிருக்கும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். சுன்னாகம் சபாபதி நலன்புரி நிலையத்தில் வசித்து வரும் மக்கள் வெள்ளத்தினால் தங்கள் இயல்பு வாழ்க்கையினை இழந்துள்ளனர். சமைக்க முடியாத நிலை, வீட்டிற்குள் ஒழுக்கு, வெள்ளம் போன்றவற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் நலன்புரி நிலைய மக்களின் கோரிக்கையினையடுத்து வீடுகள் ஒவ்வொன்றிற்கும் இரண்டு சாக்குகள் வீதம் 500 இற்கு மேற்பட்ட சாக்குகள் விவசாய அமைச்சரால் மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. எனினும் அங்குள்ள மக்களுக்கு கூடார விரிப்புக்கள், உணவுகள் என்பனவே தற்போது அவசியமாகவுள்ளன. எனவே மக்கள் மீது கருணையுள்ள அனைவரும் அவற்றை தாமாகவே முன் வந்து வழங்க வேண்டும் இதுபோல யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்து நலன்புரி நிலையமக்களும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (48)

# பதில் சொல்லக் கடமைப்பட்டோர் - 06

## (பகுதி - 2)




**தமிழ் ஊடகங்களை நோக்கியும் ஊடகவியலாளர்களை நோக்கியும் மேலும் சில கேள்விகள்**

1. ஆயிரக்கணக்கான இணையத்தளங்களும் நூற்றுக்கணக்கான பத்திரிகைகளும் இன்று தமிழில் உள்ளன. இவற்றைவிட ஏராளமான தமிழ் இலத்திரனியல் ஊடகங்களும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால், இவற்றில் எத்தனை ஊடகங்கள் உலக அங்கீகாரத்தைப் பெற்ற ஊடகமாக – ஊடகத்துறையின் பண்புகளையும் அடிப்படைகளையும் கொண்டதாக உள்ளன?

2. தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினை நீள்வதற்கும் தமிழ் மக்கள் அவலத்தைச் சந்தித்ததற்கும் ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் முக்கிய காரணம் என்று வைக்கப்பட்டிருக்கும் குற்றச்சாட்டை மறுக்க முடியுமா? இந்தக் குற்றங்களில் ஊடகங்களுக்குப் பெரும் பொறுப்புண்டு அல்லவா?

3. இதுவரையில் ஒரு புதிய வழியை ஊடகங்கள் தமிழ் அரசியலுக்கும் தமிழ்ப் பண்பாட்டுக்கும் காட்டியுள்ளனவா?

5. தமிழ் ஊடகங்கள் கறுப்பு வெள்ளை என்ற அமைப்புக்குள்தான் உள்ளன என்று சொல்லப்படுகிறது. இந்த அடையாளத்தில் இருந்து எப்பொழுது இவை வெளிவரும்?

8. போர் நடந்த இடங்களுக்கு இதுவரையில் எத்தனை தமிழ் ஊடகங்களின் ஆசிரியர்கள் சென்று, அங்குள்ள நிலைமைகளை நேரில் பார்த்திருக்கிறார்கள்? பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்குச் சென்று உண்மை நிலைமைகளைத் திரட்டி அறிக்கையிட்டிருக்கிறார்களா? அந்த அறிக்கைகளின் விவரம் என்ன? அந்த அறிக்கைகள் நடுநிலைமை உடையனவா? அதாவது உண்மைத்தன்மை உடையனவா?

11. இதுவரை நடந்த தமிழ் மக்களின் அரசியல் போராட்டங்களையும் ஆயுதப் போராட்டத்தையும் முறைப்படி காய்தல் உவத்தல் இல்லாமல் எந்த ஊடகமாவது மீள் பரிசீலனைக்குட்படுத்தியுள்ளதா? இப்பொழுதுகூட அதற்கு எந்த ஊடகமாவது தயாரா?

12. அரசியல், சமூக, பண்பாட்டு விடயங்களை விமர்சனத்துக்கு உட்படுத்தவும் சுய விசாரணைக்கு உட்படுத்தவும் எந்த ஊடகமாவது உள்ளதா?

14. மாற்று ஊடகங்கள் தமிழில் வெற்றியடைய முடியாமல் போனதற்கான பொறுப்பு யாருக்குண்டு?

16. எப்போதும் அதீதமான கனவுகளில் சஞ்சரிப்பதையே தமிழ் ஊடகங்கள் கொண்டிருக்கின்றன. இதனால்தான் தமிழ் பேசும் மக்களின் அரசியல் பிரச்சினையைத் தீர்க்கும் வகையை மக்கள் அறியாமல் இருக்கிறார்கள் என்று கூறப்படுவதைப் பற்றி தமிழ் ஊடகவியலாளர்களின் பதில் என்ன?

17. தமிழ் மக்களை சிந்திக்காத ஒரு கூட்டமாக அதாவது சிந்திக்கத் தெரியாத ஒரு மக்கள் குழுமமாகவே தமிழ் ஊடகங்கள் சிறைப்பிடித்து வைத்திருக்கின்றன என்ற விமர்சனத்துக்கான பதில் என்ன?

18. வடக்குக் கிழக்கில் வாழ்கின்ற தமிழ் முஸ்லிம் மக்களை இணைப்பதற்கும் மலையகச் சமூகத்தினரை ஒன்று திரட்டுவதற்கும் தமிழ் ஊடகங்கள் எத்தகைய வேலைகளைச் செய்து வருகின்றன?

19. போரினால் பாதிக்கப்பட்ட விதவைகள், சிறுவர்களின் மறுவாழ்வைப் பற்றி கவனம் எடுத்து எத்தனை ஊடகங்கள் செயற்பட்டிருக்கின்றன?

20. பாதிக்கப்பட்ட போராளிகளின் வாழ்க்கையை அக்கறையோடு எத்தனை ஊடகங்கள் அணுகிச் செயற்பட்டுள்ளன?

21. தமிழ்ச் சமூகத்தில் உள்ள பல உள் ஒடுக்குமுறைகளைத் தீர்ப்பதற்கான முறையில் தமிழ் ஊடகங்கள் செயற்பட்டிருக்கின்றனவா?

10. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்ய மறுத்துவரும் தமிழரசுக் கட்சியின் ஜனநாயக விரோதப் போக்கைப் பற்றிய ஊடகங்களின் நிலைப்பாடு என்ன?

11. வடமாகாண சபையின் திறனின்மை, சேவைமனப்பாங்கற்ற தன்மையைப் பற்றி அண்மையில் உதயன் பத்திரிகை கடுமையான விமர்சனத்தை வைத்திருந்தது. ஆனால் அந்த விமர்சனத்தை இப்பொழுது வாபஸ் வாங்குவதைப்போல மாகாணசபையைப் போற்றும் – தொடர் தவறுகளை மறைக்கும் நடவடிக்கைகள் மெல்ல மெல்ல நடக்கிறதே. இது சரியானதா?

13. பல்வேறு அரசியல் தலைவர்களையும் பல நாடுகளின் தூதவர்களையும் ராஜதந்திரிகளையும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புச் சந்தித்திருக்கிறது. அப்படிச் சந்தித்த பிறகு அறிக்கையையும் கூட்டமைப்பினர் விடுவர். அதெல்லாம் பத்திரிகைகளில் பெரிய தலைப்பில் வரும். அதில் தமிழ் மக்களின் பிரச்சினை தெளிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் கபடத்தனத்தைப் பற்றியும் தெளிவு படுத்தியிருக்கிறோம் என்றும் சொல்லப்பட்டிருக்கும். ஆனால், இப்படி ஆயிரம் பேரிடம் சொல்லிய பிறகும் ஒரு மாற்றத்தையும் தமிழ் மக்கள் காணக்கூடியதாக இல்லையே! இந்த நிலையிலே இன்னும் எத்தனை காலத்துக்கு இவர்கள் இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கப்போகிறார்கள்? இதை ஊடகவியலாளர்கள் என்ற வகையில் நீங்கள் இன்னும் எத்தனை காலத்துக்குத் தூக்கிப் பிடிக்கப் போகிறீர்கள்?

கலங்காத உள்ளம் படைத்தவர்களே இறுதி வெற்றிக்கு உரியவர்கள். சுபாஷ் சந்திரபோஸ்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## இன்னும் முப்பதே நாட்கள்தான்!

தமிழரசுக் கட்சித் தலவர் மாவை சேனாதிராஜா அவர்கள் உறுதிபட அறிவித்ததின்படி, அடுத்த ஆண்டு எப்டியும் தீர்வைக் கொண்டுவந்து விடுவதற்கான அகிம்சைப் போராட்டத்தை அவர் ஆரம்பிக்க இன்னும் ஒரே ஒரு மாதம்தான் பாக்கி.

சிலர் சொல்கிறார்கள், நீங்கள்தான் ஏதோ விளங்காத ஆட்கள் மாதிரி நாட்களை எண்ணிக் காத்திருக்கிறீர்கள்... 'தினமுரசுக் காறருக்கு பகிடியும் வெற்றியும் தெரியவில்லை' என்று சிரித்துவிட்டு அவர் தன்ர பாட்டில போகப் போகிறார் என்கிறார்கள்.

இப்படிச் சொல்கிறவர்களுக்குத்தான் மாவையண்ணரைத் தெரியவில்லை. அவர் மற்றவர்கள் மாதிரியில்லை. வலு சீரியஸான ஆள். பல போராட்ட அனுபவங்களுக்குள்ளால் வந்தவர்.

"உறுதியாக அகிம்சைப் போர் நடந்தே தீரும்" என்று அவர் பலமுறை மக்களுக்கு ஆணையிட்டு அறிவித்ததை அப்படியே பகிடியாக விட்டுவிடக் கூடியவரில்லை.

தவிரவும், போர் முடிந்து நான்காண்டுகளாக, சர்வதேசம் நமது பிரச்சினைத் தீர்வுக்கு ஏதாவது செய்யும் என்று மக்களுக்கு நம்பிக்கையூட்டி, அதற்காகக் காத்திருந்து, அது நடக்கக் கூடியதல்ல என்று அறிந்துகொண்டுவிட்ட பிறகுதான்...

அண்ணல் காந்தி காட்டிய வழியில் நாங்களே அகிம்சையாகப் போராடிப் பெறுவதுதான் வழி என்ற முடிவுக்கு வந்து அதை அறிவித்தவர் மாவை. அந்த முடிவின் தெளிவான வெளிப்பாடாகவே காந்தி குல்லாயைத் தன் தலையிலும் அணிந்துகொள்ள ஆரம்பித்தார்.

ஜனவரி முதலாம் திகதியிலிருந்து தொடர் உண்ணாவிரதம், ஒத்துழையாமை, பதவிகள் துறப்பு என்று அரசாங்கத்தை வழிக்குக் கொண்டுவரக் கூடிய சாத்வீகப் போராட்டங்களைத் தொடர்ச்சியாகச் செய்வதன் மூலம் சர்வதேசத்தின் கவனத்தையும் ஈர்த்து, தீர்வொன்றை வைக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை இலங்கை அரசுக்கு உருவாக்கிவிடலாம் என்ற அவரது திட்டம் அவரால் சாத்தியப்படுத்தக் கூடிய ஒன்றே.

வடக்கில் கடைசியாக நடந்த மாகாணசபைத் தேர்தல் முடிவுகளின்படி எழுபது வீதத்திற்கும் மேற்பட்ட வடக்குத் தமிழர்கள் தமிழரசுக் கட்சி சொல்வதைச் செய்வதற்குத் தயாரானவர்கள் என்று காட்டியிருக்கிறார்கள்.

மாவை அவர்கள் விரலசைத்தால், தேர்தலின்போது ஆவேசமுடன் அரசதரப்பைத் தோற்கடிப்பதற்காகச் செயற்பட்ட பெரும்பான்மை அரச அதிகாரிகள், ஆசிரியர்கள், புத்திஜீவிகள், பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர்கள், ஊடகங்களின் எழுத்துப் போராளிகள், தமிழரசுக் கட்சியின் செயற்படாமையைக் கண்டித்துவந்த கட்டுரையாளர்கள், முகப்புத்தகப் பிரச்சாரகர்கள் என்று பலரும் ஆதரவாகக் குதிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

மாவை அவர்களின் சாத்வீகப் போராட்டத் திட்டம் வெற்றியடைவதில் எந்தத் தடங்கல்களும் இல்லை.

ஆனால், மாவை அவர்கள் மக்களைத் திரட்டி வீதிக்கு இறக்கி தொடர் உண்ணாவிரதங்கள் மூலம் அரசை அசைக்கும் போராட்டங்களை கருதவில்லை என்றும், அவர் தொடர்ந்தும் அரசுக்கெதிரான வீராவேச அறிக்கைகளை விட்டுக்கொண்டிருப்பதைத்தான் சாத்வீகப் போராட்டம் என்று குறிப்பிடுகிறார் என்றும் சிலர் சொல்கிறார்கள்.

அரசுக்கு மூன்றுமாதக் காலக்கெடு விதித்து, ஜனவரி ஒன்று என்று திகதி குறிப்பிட்டுப் போராட்டம் வெடிக்கும் என்று அறிவித்தது வெறும் அறிக்கை முழக்கங்களுக்காக இருக்குமா என்ன?

ஜனாதிபதித் தேர்தல், மார்ச்சில் ஜெனீவா மாநாட்டு முடிவு, அதன்பின் அமெரிக்கப் பிரேரணையின்படி நடந்துகொள்ளாததற்காக அமெரிக்காவும் ஐநாவும் இலங்கையரசு மீது எடுக்கப் போகும் நடவடிக்கை... என்று சாத்வீகப் போராட்டத்தை காலவரையற்று தள்ளிப்போட்டு விடுவார் மாவையண்ணை என்றும் சிலர் சொல்கிறார்கள்.

இந்த அவநம்பிக்கைவாதிகளுக்கெல்லாம் ஜனவரி 1 பதில் சொல்லும். இன்னும் முப்பதே நாட்கள்தான்! - ஆசிரியர்

# மீனவர்கள் எல்லைதாண்டுவதை தடுக்க

# புதிய மென்பொருள் விரைவில்

(கொழும்பு)

தமிழக மீனவர்கள் எல்லை தாண்டி மீன் பிடிப்பதைத் தடுக்க நடுக்கடலில் சமிக்ஞை (சிக்னல்) அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என இந்திய மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் பிரகாஷ் ஜாவடேகர் கூறினார்.

சர்வதேசத் தமிழ் தாவர உணவாளர்கள் சங்கமத்தின் மாநாடு சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இரண்டு நாள் மாநாட்டைத் தொடங்கி வைத்த மத்திய அமைச்சர் பிரகாஷ் ஜாவடேகர், தொடக்க விழாவுக்குப் பின்னர் பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையில்.

தமிழக மீனவர் பிரச்சினையை மத்திய அரசு மிகவும் கவனமுடன் கையாண்டு வருகிறது. இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் முனைப்போடு செயற்பட்டு வருகிறது.

தமிழக மீனவர்கள் நடுக்கடலில் எல்லை தாண்டிச் சென்று விடுவதைத் தடுக்க நடுக்கடலில் சமிக்ஞை அமைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கென மொபைல் அப்ளிகேஷன் உருவாக்கப்பட்டு வருகிறது என்றார்

# 'ராவய' வெளியிட்ட செய்தி சுத்தமான பொய்

## தேசிய புலனாய்வுப் பிரிவு அறிவிப்பு

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அபகீர்த்தி ஏற்படும் வகையில் தேர்தல் சம்பந்தமான கருத்தை வெளியிட்ட தேசிய புலனாய்வு சேவைப் பிரிவின் பிரதானியான பிரதிப் பொலிஸ்மா அதிபர் சந்திரா வாகிஸ்த பணிநீக்கம் செய்யப்பட்டார் என்று வெளிவந்த செய்தி அப்பட்டமான பொய் என அப்பிரிவின் பணிப்பாளரான கபில யஹந்த்ரா விதாரண தெரிவித்துள்ளார்.

சிங்களப் பத்திரிகை ஒன்றில் வெளிவந்துள்ள இந்த உண்மைக்குப் புறம்பான செய்தி பாதுகாப்பு அமைச்சு வட்டாரத்தில் பெரும் சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளதாகவும் இது தொடர்பில பாதுகாப்பு அமைச்சு தீவிர கவனம் செலுத்தியுள்ளதாகவும் அவர் கூறினார். குறிப்பிட்ட பத்திரிகை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிரணி பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு 59 வீத வாக்குகள் கிடைக்குமெனவும் மகிந்த ராஜபக்ஷவுக்கு 41 வீத வாக்குகள் மட்டுமே கிடைக்குமெனவும் சந்திரா வாகிஸ்த கருத்துக் கணிப்பொன்றை வெளியிட்டுள்ளதாகவும், அதனால் கோபமடைந்த ஜனாதிபதி மகிந்த, சந்திரா வாகிஸ்தவை பணி நீக்கம் செய்தார் எனவும் செய்தி வெளியிட்டிருந்தது. அந்தச் செய்தி உண்மைக்குப் புறம்பானது எனவும் ஆதாரமற்றது எனவும் கபில யஹந்த்ரா விதாரண கூறினார்.

# நாம் வெளியிட்ட செய்தி கலப்படமற்ற உண்மை

## 'ராவய' ஆசிரியர் அறிவிப்ப

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ 41 சதவீத வாக்குகளையே பெறுவார் என்றும், மைத்திரிபால சிறிசேன 59 சதவீத வாக்குகளை பெறுவார் என்று அரச புலனாய்வுப் பிரிவினர் ஜனாதிபதிக்கு அறிக்கை அளித்திருப்பதாக வெளியிட்ட செய்திக்காக மன்னிப்பு கோரப் போவதில்லை என்று இலங்கையின் முன்னணி சிங்கள வாரஇதழான ராயவ அறிவித்துள்ளது. கடந்த வாரத்தில் ராவய வெளியிட்ட செய்தி தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக இலங்கையின் அரச புலனாய்வுப்பிரிவினர் எச்சரித்திருந்தனர்.

எனினும் தமது செய்தியின் நம்பகத்தன்மை துல்லியம் என்பவற்றில் தாம் உறுதியாக இருப்பதாக ராவய செய்தித்தாளின் ஆசிரியர் லசந்த ரணதுங்க தெரிவித்துள்ளார். இந்நிலையில் அரச புலனாய்வுப் பிரிவினர் வழக்குத் தாக்கல் செய்வதை எதிர்பார்த்திருப்பதாகவும் அவர் சவால் விடுத்துள்ளார்.

# இது தேர்தல் காலம் அதிக அவதானம் தேவை

## மனோ கணேசன் தெரிவிப்பு

ஜனாதிபதித் தேர்தலை சந்திக்க இந்த நாடு தயாராகிகொண்டிருக்கும் இந்த வேளையில், புலம் பெயர்ந்து வாழும் தமிழ் உடன்பிறப்புகளும், அவர்களது அமைப்புகளும் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும். அவர்கள் மட்டுமல்ல, உள்நாட்டிலே செயற்படும் தமிழ் தேசிய சிந்தனையாளர்களும் மிகவும் சாணக்கியத்துடன் பணியாற்றிட வேண்டுமென ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைமையகத்தில் நடைபெற்ற, இன்றைய அரசியல் நிலைமைகள் தொடர்பான ஜனநாயக இளைஞர் இணைய வாராந்த கலந்துரையாடலின் போது ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இங்கு மனோ கணேசன் தொடர்ந்து கூறியதாவது. இன்று நாங்கள் கத்தியின் மீது நடக்கின்றோம். நடக்கவும் வேண்டும். கால், கைகளை வெட்டிக் கொள்ளவும் கூடாது. இது கஷ்டமான காரியம்தான். இதிலுள்ள கஷ்டம் இந்தக் காரியத்தில் ஈடுபட்டுள்ள எங்களுக்குத் தான் தெரியும். ஆனாலும், முன்னெடுத்த காலை பின் வைக்கும் பழக்கம் எனக்கு கிடையாது. இன்று நாங்கள் கஷ்டப்பட்டு உருவாக்கும் இந்த மேடையில், இந்த கஷ்டங்களில் பங்குபெறாதவர்கள் வந்து நாற்காலி போட்டு நாளை உட்காரலாம். அதுபற்றி காலம்தான் முடிவு செய்யும். ஆனால் நான் என்ன செய்கிறேன், அவர் என்ன செய்கிறார், இவர் என்ன செய்கிறார் என மக்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். எல்லோரையும் வருக என்றுதான நான் அழைக்கின்றேன். அதேவேளை இன்று நாங்கள் செய்து வரும் காரியங்களை அழித்து விடாதீர்கள் என உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வாழும் அனைவரையும் கேட்கின்றேன்.

தமிழ், முஸ்லிம் மக்களின் மீதான ஒடுக்குமுறைக்கு எதிராக ஜனநாயக போராட்டங்களை நாங்கள் இன்று முன்னெடுக்கின்றோம். அதேவேளை மறுபுறம், இந்த ஆட்சிக்கு எதிராக பெரும்பான்மை இனமும் தங்கள் பிரச்சினைகளை முன்வைத்து கணிசமாக ஒன்றுகூட தொடங்கி விட்டது. அவர்கள் எங்கள் பிரச்சினைபற்றி அக்கறை கொண்டுள்ளார்கள் என்று நான் ஒருபோதும உண்மைக்கு புறம்பாக சொல்லவில்லையே. ஏனென்றால் எனக்கு உண்மையை மூடி மறைத்து பேசத் தெரியாது. ஆனால், நாங்களும், அவர்களும் ஒரு வரைவுக்குள் ஒன்றாக ஒரு கூட்டணியாக உருவாகி வருகிறோம். எமது உடனடி இலக்கு இந்த அரசை வீழ்த்தி, ஜனநாயக இடைவெளியை ஏற்படுத்துவதுதான். எமது அரசியல், சமூக, கலாசார, பொருளாதார பரப்புகளில் இன்று செருகப்பட்டுள்ள விலங்குகளை உடைத்து கௌரவமாக எங்களை ஆசுவாசப்படுத்தி கொள்வதுதான்.

எனக்கும், எங்களுடன் கரம் கோர்த்துள்ள அணியினருக்கும் சாணக்கியம் தெரியும். எந்த பிரச்சினைக்கு எப்போது முன்னுரிமை கொடுக்க வேண்டும் எனத் தெரியும். எனவே ஒன்றுபட்ட இலங்கை நாட்டிலே வாழும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கும், ஏனைய மத சிறுபான்மையினருக்கும் இன்றைய தினத்தை விட, நல்ல ஒரு நாளைய தினத்தை உருவாக்க விளையும் எங்கள் வேலைத்திட்டத்தை சிதைத்து விடாதீர்கள் என அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன். எங்கள் பிரசாரம் அதிகாரபூர்வமாக ஆரம்பித்த பிறகு நாடு முழுக்க வந்து நான் நமது மக்களை சந்தித்து மேலதிக விளக்கங்களை தருவேன் என்றும் அவர் தெரிவித்தார்

# பிரபாகரன்: ஓர் அவலத்தின் அடையாளம்

**தன்னளவில் ஒடுக்குமுறையைக் கொண்டிருக்கும் ஒரு சமூகத்தின் விடுதலை என்பது மிகக் கடுமையானது. அதாவது தன்னுள் வைத்திருக்கும் முழு வளங்களையும் சரிவரப் பயன்படுத்தும் பட்சத்தில்தான், ஒடுக்குமுறைக்குட்பட்டிருக்கும் ஒரு சிறுபான்மைச் சமூகத்தின் விடுதலை சாத்தியமாகும். ஆனால் பிரபாகரன் இச் சூத்திரத்தின் உள் அர்த்தத்தைப் புரிந்திருக்கவில்லை. புரிந்துகொள்ளத் தலைப்படவும் இல்லை.**



## யோகா-ராஜன் கட்டுரையிலிருந்து

எம்மைப் பொறுத்தவரை, ஈழத் தமிழர்கள் மத்தியில், ஈ.வெ.ரா பெரியாரை மீண்டும் பிறபிக்க வேண்டிய, மீளுயிர்ப்புச் செய்ய வேண்டிய காலமிது. தமிழர் சிந்தனை முறைமையில் ஓர் சம்மட்டி அடியைக் கொடுத்தவர் பெரியார். இச் சம்மட்டி அடி முறைமைதான் தமிழ் சமூகத்தை விழிக்க வைத்தது!

இன்று, 60 ஆண்டுகால தமிழ்த் தேசிய சிந்தனை முறைமை மீதும், 30 வருடங்கள் கோலோச்சிய புலிகளின் ஆளுமை மீதும் அதிர்ச்சியூட்டும் வகையில் மின் சாரத்தைப் பாய்ச்சவேண்டிய காலமிது. இதே 60 ஆண்டுகள் இலங்கைத் தீவு முழுமையும் கோலோச்சிய சிங்கள தேசியத்தின் ஆளுமையையும் கேள்விக்குள்ளாக்கப்பட வேண்டிய காலமும் இதுதான்.

போத்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோர் எமது நாடுகளுக்கு படையெடுத்துபோது, அவர்களது இயங்கு திறன் பற்றிய, முன்னனுமானத்தையோ அன்றி முன்னறிவையோ பெற்றிருக்காததன் தாற்பரியம்தான், பண்டார வன்னியன், சங்கிலியன், வீரபாண்டிய கட்டப்பொம்மன் போன்ற தமிழ் மன்னர்களின் வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்தது. இவர்கள் அடிப்படையாக் கொண்டிருந்ததெல்லாம் புறநாநூற்று வீரம் பற்றிய, மன்னர்களுக்கிடையிலான போர் பற்றிய கதைகளைத்தான்.

பிரபாகரன் இவற்றையும் மீறி புறநாநூற்று வீரத்துக்கு சற்று மேலாகச் சென்று, தற்கொலைப் போராளிகளைப் பயன்படுத்துவது பற்றியும், நவீன ஆயுதங்களை கையாளும் முறைமைகளையும் தெரிந்திருந்தார். கெரில்லா யுத்தம் பற்றிய பன்மை அறிவையும் வளர்த்திருந்தார்.

ஆனால் உலகம் பற்றிய நவீன கோட்பாடுகளை, அரசியல் நடைமுறைகளை, சமூகம் பற்றிய அறிவியலை, இயங்கியல் முறைமைகளை அறிந்திருக்கவில்லை. அறிந்துகொள்வதற்கு ஆர்வம் காட்டவும் இல்லை.

நவீன உலகம் பற்றிய புரிதல் இன்மை, இவரை மாபியா (Mafia) வழி அரசியலுக்கு இட்டுச் சென்றதுடன், இவரது அவலங்களுக்கான அடிப்படையாகவும் அமைந்தது. ஆனபோதும், அப்பாத்துரை அமிர்தலிங்கத்தின் சந்திப்பும் அவருடனான தொடர்புகளும்தான் பிரபாகரனின் அவலத்துக்கான ஆரம்பம் என்று கூறுவதில் தப்பேதுமில்லை!

யாழ்ப்பாணச் சமூகத்தைப் பொறுத்தவரை பதின்ம வயது என்பது படிப்புக்குரிய வயது. பிரபாகரன் பிஸ்ரலுடன் அமிர்தலிங்கத்தைச் சந்திக்கச் சென்றதும் இதே வயதில்தான். அப்போது, இதே வயதை ஒத்த அல்லது சற்றுக் கூட, குறைந்த வயதை உடைய வாலிபப் பையன்களுக்கு தந்தையாக இருந்தவர் அமிர்தலிங்கம் அவர்கள். அதே தந்தைக்குரிய பண்புகளுடன் படிப்பின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் வகையில் பிரபாகரனை அணுகியிருக்கவில்லை.

பதிலாக "தியாகி" - "துரோகி" எனும் பதப் பிரயோகங்கள் மூலம் உசுப்பேத்தி தனது அரசியல் எதிரிகளைத் தீர்த்துக் கட்டுவதற்கான பகடைக் காய்களாக பயன்படுத்திக்கொண்டார் பிரபாகரனையும் அவரது நண்பர்களையும்.

இந்த வாலிபர்கள் வெளியில் இருந்தால் தமக்குத் தொல்லை என்பதை உணர்ந்த அமிர்தலிங்கம், துரையப்பா கொலை மூலமாக தலைமறைவு வாழ்வுக்கும் அனுப்பிவைத்தார். தொடர்ந்து பல கொலைகளை மேற்கொள்வதற்கும் இதுவே சாதகமாக அமைந்தது.

1960களின் மத்தியில் இருந்து 1970களின் ஆரம்ப காலம் வரை தமிழ் வாலிபர்கள் மட்டுமன்றி சிங்கள வாலிபர்களும் கூட சண்முகதாசனின் அரசியற் கோட்பாடுகளினால் கவரப்பட்டனர். ஜே.வி.பி தலைவர் றோகன விஜயவீர இவரது கட்சியில் இருந்து பிரிந்து சென்ற பின்புதான் ஜே.வி.பி-யை உருவாக்கினார். தமிழ் மாணவர்கள், வாலிபர்கள், இளைஞர்கள் பலரும் மாக்சீய அறிவியல் மூலம் நவீன அரசியலைப் புரிந்துகொள்ள முனைப்பட்டதும் இதே காலகட்டத்தில்தான்.

பிரபாகரன் இத்தகைய நவீன அறிவியல் சார் அரசியலைப் புரிந்துகொள்ளும் வாய்ப்பை பெற்றிருக்கவில்லை. அதில் ஆர்வப்பட்டிருக்கவுமில்லை. அவரது அரசியல் வாழ்வு அவலத்தில் முடிந்ததற்கான முக்கிய காரணமும் இதுவே!

ஏனைய பல நாடுகளில் கெரில்லாத் தாக்குதல்கள் போராளிகளின் திறனை அடிப்படையாகக் கொண்டிருந்தபோது, தற்கொலைத் தாக்குதல்கள்தான் புலிகளின் போர்த் தந்திரமாக அமைந்தது. தற்கொலைப் போராளிகள், கரும்புலிப் போராளிகள் எனத் தொடர்ந்து கடற்படை, தரைப்படை என்று உயர் நிலையையும் எட்டியது. பிரேமதாசாவுடன் கூட்டுச் சேர்ந்து இந்தியப் படையை திருப்பி அனுப்புவதிலும் வெற்றி பெற்றது. ஆனையிறவுத் தாக்குதல்களிலும் வெற்றிவாகை சூடியது.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் உலக நாடுகள் விழித்துக் கொண்டன. ஆனால் வரப்போகும் ஆபத்தை உணர்ந்திராத தமிழ்த் தேசியத்தின் அறிவு மட்டம் பிரபாகரனை தேசியத் தலைவர் நிலைக்கு உயர்த்தியது!

பிரபாகரனின் அவலம், சர்வதேசம் விழித்துக் கொண்ட அபாயகரமான இந் நிலைமைகளில் கூட, சர்வதேசம் பற்றிய அரசியற் கோட்பாடுகளைப் புரிந்துகொள்வதற்கு முனைந்திருக்கவில்லை. பணம் சேர்ப்பதில் இருந்து, சிறுவர்களை படையில் சேர்ப்பது மற்றும் புத்திஜீவிகளை உள்வாங்குவது அல்லது போட்டுத்தள்ளுவது, மக்களை ஓர் அச்ச நிலைமையில் வைத்திருப்பது வரையிலான தொடர்ச்சியான தமது மாபியா வழியிலான அரசியலைக் கைவிட்டிருக்கவில்லை.

தன்னளவில் ஒடுக்குமுறையைக் கொண்டிருக்கும் ஒரு சமூகத்தின் விடுதலை என்பது மிகக் கடுமையானது. அதாவது தன்னுள் வைத்திருக்கும் முழு வளங்களையும் சரிவரப் பயன்படுத்தும் பட்சத்தில்தான், ஒடுக்குமுறைக்குட்பட்டிருக்கும் ஒரு சிறுபான்மைச் சமூகத்தின் விடுதலை சாத்தியமாகும்.

ஆனால் பிரபாகரன் இச் சூத்திரத்தின் உள் அர்த்தத்தைப் புரிந்திருக்கவில்லை. புரிந்துகொள்ளத் தலைப்படவும் இல்லை. தன்னார்வத்துடன் இயங்கி வந்த பல சமூக அமைப்புக்களுக்கு தடைவிதித்தார். சன சமூக நிலையங்களைக் கூட தமது கட்டுப்பாட்டுக்குள் மட்டுமே இயங்க வைத்தார்.

முஸ்லிம்களை ஒடுக்கினார். சமூக ஒடுக்குமுறைகளுக்கு எதிரான சாதிய அமைப்புக்களை இயங்க விடாமல் தடுத்தார். மற்றும் தமிழ்த் தேசியம் எனும் ஒரே நேர்கோட்டில் பயணித்த அனைத்து விடுதலை அமைப்புக்களுக்கும் சாவுமணியடித்தார்.

தனது அமைப்புக்குள் ஏற்பட்ட உட்கட்டுமான பிரச்சினைகளை புத்திபூர்வமான முறையில் கையாள்வதற்கு, எதையும் சந்தேகிக்கும் அவரது இயல்பான குணம் தடையாக இருந்தது. பாரிய தவறுகளைப் புரிவதற்கும் வழிகோலியது. மாத்தையாவைப் போட்டுத்தள்ளியதை தவிர்த்துப் பார்த்தாலும், பொட்டம்மானுக்கும் கருணாம்மானுக்கும் இடையிலான பிரச்சினையில் இவரது அணுகுமுறைத் தவறை நோக்கலாம்.

பிரிந்து சென்ற கிழக்கிலங்கைப் பெண் போராளிகள் சரணடைந்து மீளவும் இய்க்கத்தில் இணைய முற்பட்டபோது அவர்களைக் கொலைசெய்து (புலிப் போராளிகளால் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டனர் எனும் தகவலும் உண்டு) பழிவாங்கியதன் மூலம், கிழக்கு மக்களின் ஆண்டாண்டு காலப்பழிக்கு உள்ளானதும் பிரபாகரன் தனது இறுதிக் காலத்துக்கு முன்பு சுமந்துகொண்ட பேரவலம்!

ஒட்டுமொத்த தேசத்தின் உள்ளார்ந்த பிரச்சினைகளை அவரால் புரிந்துகொள்ள முடியாமல் போனதுடன் தேசத்துக்கும் சர்வதேசத்துக்கும் இடையிலான உறவுக்கும், முரணுக்கும் இடையிலான நுண்ணிய வேறுபாடுகளை இவரால் விளங்கிக்கொள்ள முடிந்திருக்கவில்லை.

சிங்களச் சமூகத்தில் தனியாளுமை பெற்றிருந்த பிரேமதாசவுடன் தொடர் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்குப் பதிலாக இந்திய ராணுவ வெளியேற்றத்துடன் அவரின் உயிரைப் பலியெடுப்பதை போர்வெற்றியாக நினைத்தார்.

சந்திரிகாவின் பேச்சுவார்த்தையில் பொறுமையிழந்தார். அமெரிக்கா முறை ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டிருந்த ரணில் விக்கிரமசிங்கவைத் தோற்கடித்து, மகிந்த ராஜபக்சவை ஆணையில் இருத்தியதன் மூலம் தனக்கான சவக்குழியை தாமாகவே அமைத்துக்கொண்டார்.

மேலும் சர்வதேசமும் எதிர்பார்த்திருந்த இவரது மாவீரர் உரைகளின் உள்ளடக்கம் வெறுமனே நடைமுறை அரசியல் பற்றி விளம்பியதே அன்றி, நவீன அரசியற் கோட்பாடுகள் பற்றி எடுத்தியம்பியதில்லை. இதன் மூலம் சர்வதேச அரங்கில் இவரது அரசியல் ஷஞானம்... வெள்ளிடைமலையாகியது.

அறிவை அறியமுடியாத ஒருவர் நவீன சிந்தனையை அறிந்துகொள்ள ஆர்வப்பட்டிருப்பார் என்று எண்ணிவிட முடியாது. அதனால்தான் எரிக் சொல்கைம் "சர்வதேச அரசியலில் இவர் ஒரு கத்துக்குட்டி" என்று பிரபாகரன் பற்றிய தனது புரிதலை வெளிப்படுத்தினார்.

புலிகளின் அரசியல் சித்தாந்தவாதியாக திகழ்ந்தவர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள். அரசியலில் இவர் ஓர் அறிவுபூர்வமான புத்திஜீவியாகத் தோன்றியவர்! ஆனால் மாற்றத்திற்கு உட்பட்டிருக்கும் நடைமுறை உலகின் நவீன கோட்பாடுகளையோ தத்துவங்களையோ இவர் புரிந்திருக்கவில்லை. அதற்கான கடும் உழைப்பைச் செலுத்துவதற்கு அடிமையாகிப் போன் இவரது மதுப்பழக்கம் தடையாக அமைந்தது. அதனால் இவர் அரசியல் ஆலோசகர் என்பதற்குப் பதிலாக, பிரபாகரனின் நடவடிக்கைகளுக்கு அரசியல் விளக்கமளிக்கும் ஒரு பொழிப்புரையாளராக (Interpretor) மாறினார்.

அடுத்து பிரபாகரனைச் சூழ்ந்திருந்த மிக முக்கியமானவர்களாக, பிரபாகரன் புகழ்பாடியாக விளங்கிய இரத்தின துரையையும், கட்டுண்டிருந்த பால-குமாரனையும் குறிப்பிடலாம். இவர்களது அரசியல் ஞானம் பற்றி ஆய்வதை விட, பிரபாகரனுக்கு சேவை செய்யும் வாய்ப்பை மட்டுமே பிரபாகரன் இவர்களுக்கு வழங்கியிருந்தார்.

ஏனைய தளபதிகளும் போராளிகளும் அரசியல் ஞானம் குன்றியவர்களாக இருந்தார்களோ இல்லையோ, பிரபாகரனுக்கு ஆலோசனை வழங்குவதற்கான துணிச்சலை அவர்கள் பெற்றிருக்கவில்லை. அந்தளவுக்குத்தான் உள்ளக ஜனநாயகத்தை வழங்கியிருந்தார் என்பதும் அவலத்தின் அடையாளமே!

விரிந்து பரந்த இவ் உலகில், பிரபாகரன் மிகச் சுருங்கிய தனது சொந்த அனுபவத்தை மட்டும் படிப்பினையாகக் கொண்டு, ஓர் இனத்தையே கையாளத் துணிந்தமைதான் அவரது தனிப்பட்ட அவலங்களுக்கு மட்டுமன்றி, முழு இனத்தினது அவலங்களுக்கும் கால்கோளாகியது!

# முஸ்லிம்களின் ஆதரவு யாருக்கு அது முடிந்த முடிவு



(கொழும்பு)

யாருக்கு ஆதரவளிப்பது என்பதனை ஏற்கவே முஸ்லிம் மக்கள் தீர்மானித்துள்ளனர் என ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய மாகாணசபை உறுப்பினர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவளிபபது என்பது குறித்து முஸ்லிம் மக்கள் ஏற்கனவே தீர்மானித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

லண்டனில் சர்வதேச ஊடகமொன்றுக்கு அளித்த செவ்வியின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். பொதுபலசேனா இயக்கம் ஜனாதிபதிக்கு ஆதரவளிப்பதாக அறிவித்துள்ளது.

பொதுபல சேனாவின் இந்த தீர்மானம் சிறுபான்மை மக்களை மட்டுமன்றி சிங்கள பௌத்த மக்களும் ஜனாதிபதி மகிந்தவிற்கு வாக்களிக்கும் சந்தர்ப்பத்தை முடக்கியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திடம் நான்கு பிரசார சொற்கள் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

புலம்பெயர் தமிழர், தன்னார்வுத் தொண்டு நிறுவனங்கள், சர்வதேச சதி மற்றும் ஒப்பந்தக்காரர்கள் என்ற நான்கு சொற்களைப் பயன்படுத்தியே பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதே பிரதான இலக்கு என அசாத் சாலி சுட்டிக்காட்டியுள்ளார்.

# காலி மாநாடு இன்று ஆரம்பம்

## பிரதம அதிதி கோத்தா

(கொழும்பு)

பிராந்திய கடல் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக விரிவாக ஆராயும் 'கோல் டயலொக் -2014' உயர் மட்ட பாதுகாப்பு மாநாடு 2014 இன்று டிசம்பர் 01 ஆம் திகதியும்,02 ஆம் திகதியும் நடைபெறவுள்ளது.

கடற்படையின் ஏற்பாட்டில் காலி துறைமுக நகரில் ஆரம்பமாகவுள்ள இந்த உயர் மட்ட பாதுகாப்பு மாநாட்டை



பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ பிரதம அதிதியாக கலந்து கொண்டு ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பிரதிநிதிகளின் பங்குபற்றலுடன் இடம் பெறவுள்ளது.'கடல்சார் சுபீட்சத்துக்கான ஒத்துழைப்பு' என்ற தொனிப்பொருளில் பிராந்திய கடல் பாதுகாப்பு, மேம்படுத்தல், பிராந்திய கடல் வழி பாதுகாப்பு போன்றவைகள் தொடர்பாக பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சும் இலங்கை கடற்படையும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த உயர் மட்டபாதுகாப்பு மாநாட்டில் கடந்த 11 மாதங்களாக இடம் பெற்ற நிகழ்வுகள் சம்பந்தமாக கலந்துரையாடப்படவுள்ளன.

40 நாடுகளின் கடல்சார் நிபுணர்கள் கடற்படை உயர் அதிகாரிகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு புத்திஜீவிகள் கலந்து கொள்ளும் இந்த உயர் மட்ட நாட்டில் கடல்சார் பிரச்சனைகள் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளது.

# மைத்திரியின் வெற்றியே எனது இலக்கு

(கொழும்பு)

13எந்த சவால் வந்தாலும் தேர்தல் செயற்பாடுகளை கைவிடாமல் எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் வெற்றிக்காக உழைப்பேன் என்று அவரது இளைய சகோதரரான டட்லி சிறிசேன தெரிவித்தார்.

என்னுடைய அரிசி லொறி மீது தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. சாரதி மற்றும் நடத்துனர் அச்சுறுத்தப்பட் டுள்ளனர். அவற்றுக்கெல்லாம் நான் அஞ்ச மாட்டேன் என்றும் அவர் தெரிவித்தார்.

மரதகஹாமுல்லையில் வைத்து தன்னுடைய அரசி லொறிமீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் தெரிவிக்கும போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்


# மகிந்தவின் பக்கம் சாய்கிறார் சரத்

(கொழும்பு)

மூன்றாம் தடவை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப் போவதாக எச்சரித்து வந்த முன்னாள் பிரதம நீதியரசர் தற்போது அந்த திட்டத்தை கைவிட்டுள்ளார்.

"ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, மூன்றாம் முறையாக போட்டியிடுவது குறித்த உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்றுக்கொள்ளவில்லை. எனினும் தாம் அதற்கு எதிராக மீண்டும் வழக்குத் தாக்கல் செய்தால் குறித்த நீதிமன்றமே அதனை விசாரித்து தீர்ப்பு வழங்கும். எனவே அதில் தமக்கு சாதகமான தீர்ப்பு கிடைக்கும் என்று நம்பவில்லை" என்று தற்போது சரத் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் மாதுலுவே சோபித தேரர் மற்றும் அத்துரலியே ரத்தன தேரர் ஆகியோரின் வழிகாட்டலில் நியாயமான தேர்தல் நடாத்தப்படும் என்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாக சரத் என் சில்வா குறிப்பிட்டுள்ளார். இதேவேளை தமது உறவினர் ஒருவருடன்



தாம் காங்கேசன்துறையில் உள்ள கடற்படை விடுதியில் அரசாங்கத்தின் ஏற்பாட்டில் தங்கியிருந்ததாக வெளியான செய்தியை அவர் முற்றாக மறுத்துள்ளார்.

# மைத்திரியின் மகள் பிரசாரக்களத்தில்

பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் மகள் பத்திரிக்கா சிறிசேன நேற்று முன்தினம் பொலநறுவையில் மகளிர் அமைப்புடன் இணைந்து தனது தந்தைக்காக முதலாவது அரசியல் பிரசார நடவடிக்கையை ஆரம்பித்தார்.

எனது வாழ்க்கையில் எனது அம்மாவோ நானோ எனது தந்தையின் அமைச்சுகளுக்கோ கால் வைத்ததே கிடையாது. ஏனைய அமைச்சர்களது பிள்ளைகளைப்போன்று நாங்கள் தந்தையின் அதிகாரத்தை பாவித்தது கிடையாது.

எனது அம்மாவுக்கு தனது தந்தையின் அமைச்சு மற்றும் வேறு வரப்பிரசாரங்களோ தெரியாது. ஆனால் எனது தநதை ஒரு கறைபடியாத கைகள் கொண்டவர்அவர் ஒருபோதும் எங்களை அரச சொத்துக்களை சுரண்டி சொத்துக்களை சேர்த தவர் அல்ல.

எனது வாழ்நாளில் இன்று தான் எனது தந்தை எடுத்துக்கொண்ட சவாலுக்கு மகளாகிய நான் என்னாள் செய்ய வேண்டிய கடமைக்காக தங்கள் முன் உரையாற்றுகின்றேன்.

# அதிசொகுசு பஸ்வண்டிகள் சீனாவிடமிருந்து இறக்குமதி



(கொழும்பு)

சீனாவிலிருந்து அதிசொகுசு வாய்ந்த பஸ்கள் இறக்குமதி செய்வதற்கு இலங்கை போக்குவரத்துச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கான அமைச்சரவை அங்கீகாரமும் கிடைத்துள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் அத்தியட்சகர் எச்.எம்.சந்திரசிறி தெரிவித்தார்.

இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் பஸ்களில் 300 பஸ்கள் கொழும்பு நகரில் சேவைக்கமர்த்தப்படும்.ஏனைய பஸ்கள் கொழும்பை சூழவுள்ள பகுதிகளில் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

இதேவேளை, இந்தியாவிலிருந்து 2200 பஸ்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளன. அவற்றில் 1200 பஸ்கள் தற்சமயம் இலங்கைக்கு வரவழைக்கப்பட்டுள்ளன.

இவற்றுள் 900 பஸ்கள் தற்சமயம் நாடுமுழுவதிலும் சேவையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவிக்கின்றது.

# அரசின் இரகசிய கோப்புக்கள் எனது கைவசம் உள்ளன

## சம்பிக்க சொல்கிறார்

(கொழும்பு)

அரசாங்கத்தின் இரகசிய கோப்புகள் பல கைவசம் உள்ளன அந்த கோப்புகளை வெளியிடவிருப்பதாக ஜாதிக்க ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

அந்தக் கட்சியின் பொது செயலாளரும், முன்னாள் அமைச்சருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற மக்கள சந்திப்பு ஒன்றில் வைத்து அவர் இதனைக்கூறியுள்ளார்.



அரசாங்கத்தில் இருந்து விலகுகின்றவர்களின் இரகசிய கோப்புகளை கொண்டிருப்பதாகவும், எனினும் அதனை அவர்களுக்கு எதிராக பயன்படுத்தப் போவதில்லை என்றும் ஜனாதிபதி அண்மையில் தெரிவித்திருந்தார்.

# பொலிஸாருக்கு தண்ணிகாட்டிய மட்டு.வாசி வலையில் சிக்கினார்

ஆட்கொலை செய்ய எத்தனித்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு ஆள்பிணையில் வெளிவந்து 18 வருடங்களாகத் தலைமறைவாகியிருந்த நபரைத் தாம் கைது செய்திருப்பதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

தலைமறைவாகி, மட்டக்களப்பு மாவட்டத்தின் மட்டிக்களிப் பிரதேசத்தில் வைத்து வீட்டில் மறைந்திருந்த போது கடந்த சனிக்கிழமை பிற்பகல் சுப்பிரமணியம் சுதேஷ் குமார் என்ற இந்த நபர் கைது செய்யப்பட்டதாக ஏறாவூர் பொலி ஸார் கூறினர்.

ஆட்கொலை செய்ய எத்தனித்த வழக்கில் இவர் குற்றவாளியாகக் காணப்பட்டு 4 வருட ஒத்திவைக்கப்பட்ட கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட நிலையில் 1996 ஆம் ஆண்டு ஆட்பிணையில் வெளிவந்து தலைமறைவாகியிருந்துள்ளார் என்று ஏறாவூர் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். இவருக்கு உயர் நீதிமன்றத்தினால் பகிரங்கப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் தலைமறைவு நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# யாழ்.தளபதியின் இடமாற்றம் விசேட காரணம் எதுவுமில்லை

## ருவான் வணிகசூரிய தெரிவிப்பு

யாழ். மாவட்ட இராணுவ தளபதியாக பணியாற்றிய உதய பெரேரா கொழும்பிற்கு இடம் மாற்றம் செய்யப்பட்ட விடயம் வழமையான ஒன்று என இராணுவம் தெரிவித்துள்ளது.

இராணுவ பேச்சாளர் ருவான் வணிகசூர்ய இதனைக் குறிப்பிட்டுள்ளதுடன் உதய பெரோரா அவரது அனுபவத்தின் அடிப்படையிலேயே கொழும்பிற்கு இடமாற்றம் செய்யப்பட்டார். அவரது அனுபவம் மற்றும் பயிற்சியிலிருந்து நன்மைகளை அனுபவிப்பதே இதன் நோக்கம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# மலையக அபிவிருத்தி செயற்றிட்டம் விரைவில்

(கொழும்பு)

கிராமிய அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கான செயற்றிட்டத்துக்கான ஐரோப்பிய சங்கங்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று கடந்த வாரம் நுவரெலிய மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

ஐரோப்பிய சங்க தலைவர் டேவிட் டேலி தலைமையில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில், நுவரெலிய மேலதிக மாவட்ட செயலாளர் அமர சேகர உட்பட மாவட்டத் தின் பிரதேச செயலாளர்கள் அனை வரும் கலந்து கொண்டனர்.

நுவரெலியா மட்டுமன்றி பதுளை, மொனராகலை ஆகிய மாவட்டங்களிலும் கிராமிய அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கு ஐரோப்பிய சங்கங் கள் ஒத்துழைப்பு வழங்கு வதாக இக்கலந்துரையாடலின் போது தெரிவிக்கப்பட்டது



கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மாணவர்களுக்கான சின்னஞ்சுட்டும் விழா அண்மையில் இடம்பெற்றது. இதில் அதிபர் எம்.கனகலிங்கம் மங்கள விளக் கேற்றி ஆரம்பித்து வைப்பதையும், பிரதம விருந்தினரான பருத்தித்துறை மக்கள் வங்கி கிளை முகாமையாளர் கலைவாணி குணசீலன் உரையாற்றுவதையும் காணலாம். (01)

## அதிபர் இராசதுரையின் ஞாபகார்த்த நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரியின் ஏற்பாட்டில் முன்னாள் அதிபர் க.இராசதுரை ஞாபகார்த்த நிகழ்வு இன்று முற்பகல் 11.30 முதல் யாழ்.மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் அதிபர் க.எழில்வேந்தன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்ளவுள்ளார்.

மண்டப பெயர்ப்பலகை திரை நீக்கம் செய்து வைக்கப்படவுள்ளதுடன், நினைவுச் சுடரேற்றல், மலரஞ்சலி ஆகியவையும் இடம் பெறவுள்ளன. (48)

## வன்முறைக்கு எதிரான செயற்றிட்டம் முதற்கட்டமாக விழிப்புணர்வு

பால்நிலை வன்முறைக்கு எதிரான 16 நாள் செயற்பாட்டின் ஐந்தாம் நாள் நிகழ்வுகள் யாழ். சமூக செயற்பாட்டு மையத்தினால நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டன. இதன்படி அன்றைய தினம் தனியார் பேருந்து நடத்துநர்களுக்கு நாவலர் கலாசார மண்டபத்திலும் முச்சக்கர வண்டி ஓட்டுநர்களுக்கு சங்கானையிலும் விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடைபெற்றன.

போக்குவரத்தின் போது பல்வேறு பிரச்சினைகளைப் பெண்கள் எதிர்கொள்வதனால், இவ் விடயங்கள் தொடர்பாக நடத்துநர்களுக்கும் சாரதிகளுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும். தனியார் பேருந்து நடத்துநர்களுக்கான கருத்தரங்கில் சுகிர்தராஜும், முச்சக்கர வண்டி ஓட்டுநர்களுக்கான கருத்தரங்கில் கஜானனனும் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர் என யாழ்.சமூக செயற்பாட்டுமையம் தெரிவித்துள்ளது. (48)

## பட்டப்பின் கல்வி வாய்ப்பு

இலங்கையில் சமூக சேவைகள் தொடர்பாக கல்வியினை வழங்கும் ஒரே நிறுவனமாக சமூக அபிவிருத்தி நிறுவனம் விளங்குகிறது. சமூக சேவைகள் அமைச்சின் கீழ் இயங்கும் சமூக அபிவிருத்தி நிறுவனத்தில இவ் வருடம் இது வரையில் 1473 பேர் பட்ட பின் படிப்பு, டிப்புளோமா, உயர் டிப்ளோமா கற்கை நெறிகளை முடித்துள்ளனர்.

பல்கலைக்கழக மானியங்கள ஆணைக்குழுவின் கீழ் பட்டத்தை வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இது காணப்படுகிறது. இந்த நிறுவனத்தில் சமூக சேவைகள், ஆலோசனைகள், மூத்த பிரஜைகள் பராமரிப்பு, சமூக பராமரிப்பு, பெண்கள் அரசியலில் ஈடுபடுதல் தொடர்பாவே கற்கை நெறிகள் நடாத்துபட்டு வருகின்றன. சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பிராந்திய நிலையங்கள் யாழ்ப்பாணம கிளிநொச்சி உட்பட பல இடங்களிலும் இயங்குகின்றன. (90)

# ஆளுமை, ஆற்றல்களை வெளிப்படுத்த இளைஞர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும்

## சந்திரகுமார் எம்.பி.தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

அரசியல் ஆதாயங்களுக்காக இளைஞர்களைப் பலியிடும் அரசியல்வாதிகளிடமிருந்து எமது இளைஞர்கள் பாதுகாக்கப்படவேண்டும். அதேவேளை தள்ளாத வயதிலும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கும் அரசியல் வாதிகள் இளம் தலைமுறையினருக்கு சந்தர்ப்பங்களை வழங்குவதில்லை என நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வலி.மேற்கில் இளைஞர் அணித் தெரிவு நிகழ்வில் முதன்மைவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார் அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்.

இளைஞர்களே இந்த நாட்டின தூண்கள் இளம் தலைமுறையினரின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் நோக்குடனேயே அபிவிருத்தி செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. எனவே இளைஞர்கள் அபிவிருத்தியின் பங்காளிகளாகவும் நாட்டின் தலைமைததுவத்தைக் கொடுக்கும் சக்திகளாகவும் மாற்றம் பெறவேண்டும் அப்போதுதான் நாட்டில் தலைசிறந்த சமூகம் ஒன்றை உருவாக்க முடியும். எமது இனத்தின இளைஞர்களின் ஆளுமையை வெளிப்படுத்துவதற்கு நீண்ட வரலாறு உண்டு.

அதேவேளை கிராமங்கள் தொடர்ந்தும் கிராமங்களாகவே இருக்க வேண்டும் என்ற கொள்கையும் மேட்டுக்குடிகளாகக் கருதப்படுபவர்களுக்கே எல்லா வாய்ப்புக்களும் கிடைக்கப்பெற வேண்டும் என்ற நோக்கமும் அந்த அரசியல் வாதிகளிடம் மேலோங்கி நிற்கும்.

அதனடிப்படையிலேயே முன்னெப் போதும் அறிமுகமில்லாத வசதி படைத்தவர்களை வேட்பாளர்களாக நியமித்து விட்டு அவர்களின் வெற்றிக்காக உழைப்பதற்கு ஏழை இளைஞர்களை பயன்படுத்திக்கொண்டார்கள். ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியினராகிய நாம் அவ்வாறல்ல. கிராமங்களை பிரதிநிதித்துவப்படுத்துபவர்களுக்கே முன்னுரிமை வழங்குகின்றோம். அந்த செயற்பாட்டுக்கு வழிகாட்டியாக அமைந்திருப்பதும் எமது கட்சி மட்டுமே எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் பாலகிருஸ்ணன் (ஜீவன்) மற்றும் செல்வகுமார் ஆகியோரும் சங்கானைபட்டினசபையின் ஆலோசகர் தட்சணாமூர்த்தி றெமிங்டன் கல்விநிறுவனத்தின் நிறுவுனர் மனோகரன் மற்றும் நூற்றுக்கணக்கான இளைஞர்களும் கலந்துகொண்டனர்.

# பிரதேச ரீதியாக 50 பேருக்கு அங்கவீனமுற்றோர் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

மகிந்த சிந்தனை வேலைத் திட்டத்தின் ஓர் அங்கமாக சமூக சேவைகள் அமைச்சின் அங்கவீனமுற்றோர் தேசிய செயலகத்தினால் இவ் வருடத்தில் இதுவரை அங்கவீனமுற்ற நபர்களுக்கு மாதாந்தம் 3000 ரூபா வழங்கும் திட்டத்தின் கீழ் 448 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

பிரதேச செயலக பிரிவுகள் தோறும் தலா 50 பேர் வீதமாக நாடெங்கும் 16,603 பேர் இவ் விதமாக 3000 ரூபா உதவு தொகையை மாதாந்தம் பெற்றுவருகின்றனர்.

இதன் மூலமாக வறிய நிலையிலுள்ள அங்கவீனமுற்ற குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த முடிகிறது. 2005 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வழங்கப்பட்ட வாக்குறுதிக்கமைய 2006 ஆம் ஆண்டு முதல் இந்த மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகிறது.

பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள அங்கவீனமுற்றோர் தொகையைக் கணக்கெடுக்காது பிரதேச செயலகப் பிரிவு ஒன்றிற்கு 50 பேர் வீதம் வழங்கப்பட்டு வருவது இத் திட்டத்தின் குறைபாடாக இருப்பதாக சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் 110 அங்கவீனரைக் கொண்டுள்ள நெடுந்தீவு பிரதேச செயலகப் பிரிவில் 50 பேருக்கு வழங்கப்படும் அதே வேளையில் 1200 பேரைக் கொண்டுள்ள தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவிலும் 50 பேருக்கு வழங்கப்படுவதால் அதிக அங்கவீனமுற்றோரைக் கொணடுள்ள பிரதேச செயலகப் பிரிவு பாதிக்கப்படுவதாக விமர்சனம் தெரிவிக்கின்றனர். (90)

## முரசின் இன்றைய பலன்

(01.12.2014 திங்கட்கிழமை)

ஜய வருஷம் கார்த்திகை மாதம் 15 ஆம் திகதி.
தசமி / சித்தம் / மரணயோகம்.
உத்திர நட்சத்திரம் பின்னிரவு 02.29 வரை. பின் ரேவதி.
இராகு காலம 07.44 - 09.14 வரை. சுபநேரம 12.14 - 01.44 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
தொழிலில் கவனம் செலுத்துதல், முதலீடுகள் அளவு டன் இருப்பது நன்று.

**ரிஷபம்**
பழைய பிரச்சினை மீண்டும் முளைவிட ஆரம்பித்தல், நிகழ்வுகளில் கலந்து சிறப்பித்தல் தம்பதியர் சகிதம்.

**மிதுனம்**
குத்தகைக்கு காணி எடுக்க முஸ்தீபு, விபத்திலிருந்து தப்பித்தல்.

**கடகம்**
நியாயத்தை நிலைநாட்டியதால் பிரச்சினை கைவி டல், கொடுத்த கடனை வசூலிக்க முடியாது முறையிட முயலுதல்.

**சிம்மம்**
சட்ட விரோதமின்பாவனை தண்டம் செலுத்தல், டெங்கு ஒழிப்பிற்காக சுற்றாடலை தூய்மையாக்குதல்.

**கன்னி**
காரியம் அனுகூலமடைய அலைசசல் ஏற்படும், பிறரிடம் ஒப்படைத்த வேலைகளில் கண்ணோட்டம் அவசியம்.

**துலாம்**
பொறுப்பின்றி பிறருக்கு உதவ வேண்டாம், பிள்ளைகளின் சாதனையை முன்னிட்டு பெருமை கொள்ளுதல்.

**விருச்சிகம்**
பொறுமை, சகிப்புத்தன்மையினால பிரச்சினை விலகிவிடும், புதிய முயற்சிகளை ஆரம்பிக்க வேண்டாம்.

**தனுசு**
கிடைத்த சந்தர்ப்பத்தை தவறவிட வேண்டாம், வெற்றி கிடைத்ததை எண்ணி ஆனநதமடைதல்.

**மகரம்**
நினைத்தகாரியம் சாதகமான முடிவினைத்தருதல், அதிர்ஷ்ட இலாபச்சீட்டுக்களினால் பணம் கைக்கெட்டலாம்.

**கும்பம்**
வெளியூர்பயணத்தை மேற்கொளஎல், உறவு கெட்டிருந்த மாமன்மாரின் உறவில் சுமுக நிலை ஏற்படல்.

**மீனம்**
தேகநலத்தை மேம்படுத்த பயிற்சிகளில் ஈடுபட விரும்புதல், தானதர்ம கைங்கரியங்களில் ஈடுபடல்.

# இஸ்ரேலின் நடுவர் மரணம்




அவுஸ்ரேலிய வீரர் ஹியூக்ஸ் பவுன்சர் பந்து தலையில் தாக்கி மரணம் அடைந்த சம்பவம் ஒட்டு மொத்த கிரிக் கெட் இரசிகர்களையும், வீரர்களையும் பெரும அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இந்தச் சம்பவம் நடைபெற்று நான்கு நாட்களே ஆன நிலையில், இஸ்ரேலில் லீக் போட்டியில் அம்பயராக (நடுவராக) பணியாற்றிய ஹில்லல் ஆச்கர் என்ற நடுவர் பந்து தாக்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் பற்றிய விவரம் வருமாறு, இஸ்ரேல் நாட்டில் உள்ள அஸ்டோட் நகரில் தேசிய கிரிக்கெட் 'லீக்' போட்டி நடந்தது. இந்தப் போட்டி ஒன்றில் 55 வயதான ஹில்லல் ஆஸ்கர் நடுவராக பணியாற்றினார். பேட்ஸ்மேன் அடித்த பந்து அவரை நோக்கி வந்தது. அதில் இருந்து அவர் தப்பிக்க முயன்றார். ஆனால் முடியவில்லை. பந்து அவரது தாடையை தாக்கியது. இதில் பலத்த காயத்துடன் அவர் நிலைகுலைந்து கீழே விழுந்தார். உடனடியாக அவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். ஆனால் சிகிச்சை பலன் அளிக்காமல் அவர் இறந்தார்.

மரணம் அடைந்த ஹில்லல் ஆஸ்கர் சர்வதேச நடுவர் ஆவார். ஐரோப்பிய சாம்பியன் போட்டிகளில் நடுவராக பணி யாற்றி இருக்கிறார்.

இஸ்ரேல் அணிக்கு கப்டனாக இருந்துள்ளார். ஆஸ்கரின் மரணத்துக்கு இஸ்ரேல் கிரிக்கெட் சங்கம அனுதாபம் தெரிவித்துள்ளது.

## விளையாட்டுச் செய்திகள்

# ஏலத்தில் யுவராஜ் கெய்ல்



ஐ.பி.எல்., தொடரில் அதிக விலை கொடுத்து வாங்கப்பட்ட வீரர்கள், சரியான திறமையினை வெளிப்படுத்தாததை அடுத்து, யுவராஜ், பீட்டர்சன், தினேஷ் கார்த்திக், கெய்ல் உள்ளிட்ட பலர், அணியில் இருந்து இந்த வாரம் கழற்றி விடப்படவுள்ளனர்.

கடந்த 2008 இல் ஆரம்பிக்கப்பட்ட இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.,) 'ருவென்ரி20' தொடர், பல்வேறு சர்ச்சைகளை கடந்து வெற்றிகரமாக நடக்கிறது.


எட்டாவது ஐ.பி.எல்., தொடர் 2015, ஏப்., 8 முதல் மே 25 வரை நடக்கவுள்ளது. இதற்கான வீரர்கள் ஏலம் அடுத்த ஆண்டு ஜனவரியில் நடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கு முன், ஐ.பி.எல்., அணிகள் தங்களுக்குள் வீரர்களை மாற்றிக் கொள்வது, அணியில் இருந்து விடுவிப்பது போன்ற வேலைகளில் ஈடுபட்டுள்ளன. இதற்கான கடைசித் திகதி எதிர் வரும் டிச., 5.ஆகும்

இதனிடையே; அதிக விலை கொடுத்து வாங்கியும், அணிக்காக போதிய திறமையை வெளிப்படுத்தாத வீரர்களை கழற்றி விட்டு, புதிய வீரர்களை தேர்வு செய்யும் வேலைகளும் நடந்து வருகின்றன.

இதன்படி, யுவராஜ் சிங், தினேஷ் கார்த்திக், பீட்டர்சன், அமிஸ் மிஸ்ரா போன்றவர்கள், அடுத்த ஆண்டு அணியில் இருந்து விடுவிக்கப்பட்டு, ஏலத்துக்கு வருவர் என்று தெரிகிறது. அதாவது, பெங்களூரு வீரர் யுவராஜ் சிங், ரூ. 14 கோடிக்கு வாங்கப்பட்டார். இவர், 14 போட்டிகளில் 376 ரன்கள் மட்டும் தான் எடுத்தார்.

# கூக் விலக வேண்டும் பீட்டர்சன் வலியுறுத்து



இலங்கை அணிக்கு எதிரான 2ஆவது ஒருநாள் போட்டியிலும் இங்கிலாந்து அணி தோல்வியை தழுவியது. இந்த தோல்வியை தொடர்ந்து இங்கிலாந்து அணி கப்டன் பதவியில் இருந்து கூக் விலக வேண்டும் என்று முன்னாள் கேப்டன் பீட்டர்சன் வலியுறுத்தி உள்ளார்.

டெஸ்ட் போட்டியில் மட்டும் கவனம் செலுத்துங்கள் என்று அவர் ட்விட்டர் மூலம தனது கருத்தை தெரிவித்துள்ளார்.

# இந்திய சுப்பர் லீக் டில்லி அபார வெற்றி

(புதுடில்லி)

8 அணிகள் பங்கேற்றுள்ள முதலாவது இந்தியன் சூப்பர் லீக் (ஐ.எஸ்.எல்) கால்பந்து போட்டி இந்தியாவின் பல்வேறு இடங்களில் நடைபெற்று வருகிறது. இந்தப் போட்டியின் 43 ஆவது லீக் ஆட்டம் டில்லி நேரு மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு நடந்தது. இதில் டில்லி டைனமோஸ் எப்.சி.மும்பை சிட்டி எப்.சி. அணிகள் பலப்பரீட்சை நடாத்தின.

இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய டில்லி அணி 44ஆவது நிமிடத்தில் முதல் கோல் போட்டது. அந்த அணியின் ஹன்ஸ் முல்டெர் இந்த கோலை அடித்தார். பின் பாதி ஆட்டத்தில் டில்லி அணி தாக்குதல் ஆட்டத்தை தொடுத்தது. மும்பை அணியின் தடுப்பு ஆட்டத்தில் ஏற்பட்ட தடுமாற்றத்தை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தி கொண்ட டில்லி அணி பிற்பாதியில் அடுத்தடுத்து கோல்கள் அடித்தது. 50ஆவது நிமிடத்தில் டில்லி அணி 2ஆவது கோலை திணித்தது. டாஸ் சான்டோஸ் கடத்தி கொடுத்த பந்தை ஜூன்கெர் கோலுக்குள் திருப்பினார். 60 ஆவது நிமிடத்தில் டில்லி அணி 3ஆவது கோலை பதிவு செய்தது. பிரான்சிஸ் கோலை நோக்கி அடித்த பந்தை சக வீரர் டாஸ் சான்டோஸ் தலையால் முட்டி கோலாக்கினார்.




90 ஆவது நிமிடத்தில் டில்லி அணி 4ஆவது கோலை போட்டது. மன்தீப்சிங் கடத்தி கொடுத்த பந்தை மனிஷ பார்கவ் கோலுக்குள் திணித்தார். முன்னதாக மும்பை அணி 86 ஆவது நிமிடத்தில் ஆறுதல் பதில் கோல் திருப்பியது. அந்த அணியின் அறிமுக வீரர் அபிஷேக் இந்த கோலை அடித்தார். முடிவில் டில்லி அணி 4-1 என்ற கோல் கணக்கில் மும்பை அணியை வீழ்த்தி 3 ஆவது வெற்றியை பெற்றது. மும்பை அணி சந்தித்த 5ஆவது தோல்வி இதுவாகும். முந்தைய லீக் ஆட்டத்தில் மும்பையிடம் கண்ட தோல்விக்கு டில்லி அணி பழிதீர்த்தது.

# ஹோலி-டோனி அணித்தலைவர் யார்?

முதல் டெஸ்ட் போட்டியில் டோனி விளையாடினால், அணித் தலைவராக களமிறங்க காத்திருக்கும் ஹோலியின் வாய்ப்பு பறிபோகும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தியா- அவுஸ்ரேலியா அணிகள் இடையேயான 4 டெஸ்ட் போட்டித்தொடரில் முதல் டெஸ்ட் எதிர்வரும் 4ஆம் திகதி பிரிஸ் பேனில் தொடங்குவதாக இருந்தது.

ஆனால் அவுஸ்ரேலிய வீரர் ஹியூக்ஸ் உள்ளூர் போட்டியின் போது பந்து தலையில் தாக்கி மரணம் அடைந்தார். அவரது இறுதிச்சடங்கு நாளைமறுதினம் நடைபெறவுள்ளது. இதைத் தொடர்ந்து இந்தியா-அவுஸ்ரேலியா மோதும் முதல் டெஸ்ட் போட்டி தள்ளி வைக்கப்பட்டுள்ளது. போட்டி எப்போது நடைபெறும் என்ற விவரம் அறிவிக்கப்படவில்லை.

முதல் டெஸ்ட் தள்ளி வைக்கப் பட்டதால் இந்திய அணித்தலைவர் டோனி 4 டெஸ்ட் போட்டியிலும் ஆடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

காயம் காரணமாக முதல் டெஸ்டில் டோனி ஆடமாட்டார் என்று ஏற்கனவே அறிவிக்கப் பட்டு இருந்தது. 2 ஆவது டெஸ்டில் இருந்து அணியில் இணைந்து கொள்வார் என்றும் தெரிவிக்கப் பட்டது. இந்நிலையில் பிரிஸ்பேன் டெஸ்டை டிசம்பர் 19 - 23 ஆம் திகதி நடாத்தினால் டோனி தொடர் முழுவதும் ஆட வாய்ப்புள்ளது. இது அவுஸரேலிய கிரிக்கெட் சபையின் முடிவை பொறுத்து இருக்கிறது.

டோனி 4 டெஸ்டிலும் விளையாடினால் விராட் ஹோலி முதல் முறையாக டெஸ்டில் அணித் தலைவர் பொறுப்பை ஏற்கும் வாய்ப்பு பறிபோகும்.

இதேபோல விர்த்திமான் சகாவுக்கும் வாய்ப்பு இல்லாமல் போகும். அவர் பயிற்சி ஆட்டத்தில் அரைச்சதம் அடித்து இருந்தார். முதல் டெஸ்ட் போட்டி 5 ஆம் திகதி தொடங்க வாய்ப்பு இருப்பதாக இந்திய அணியின் செய்தி தொடர்பாளர் டாக்டர் ஆர்.என்.பாபா தெரிவித்துள்ளார்.




# சம்பியன்ஸ் ஹோக்கி ஜேர்மனிக்கு கடும் சவால்

சம்பியன்ஸ் டிராபி ஹோக்கிப் போட்டியின் முதல் ஆட்டத்தில் எங்களை சந்திக்கும் ஜேர்மனி கடும் சவாலை சந்திக்க வேண்டியிருக்கும் என இந்திய வீரர் லலித் உபாத்யாய் தெரிவித்துள்ளார்.

எப் ஐ எச் சம்பியன்ஸ் டிராபி ஹோக்கிப் போட்டி எதிர்வரும் 6 முதல் 14 வரை ஒடிஸா தலைநகர் புவனேசுவரத்தில் நடைபெறவுள்ளது.

முதல் ஆட்டத்தில் ஜேர்மனியை சந்திக்கவுள்ள இந்திய அணி, அதில் வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கையில் உள்ளது.




இது தொடர்பாக இந்திய வீரர் லலித் உபாத்யாய் கூறுகையில், 'சாம்பியன்ஸ் டிராபியில் சிறப்பாக ஆட முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆரம்பம் முதலே நன்றாக ஆடி அணியின் வெற்றியில் முக்கியப் பங்கு வகிக்க வேண்டும் என்பதில் தீவிரமாக உள்ளேன். களத்தில் எத்தகைய சவாலையும் எதிர்கொள்ள தயாராக இருக்கும் இந்திய அணியில் நானும் இடம்பெற்றிருப்பதை பெருமையாகக் கருதுகிறேன் என்றார்.

# ஏ-பி தரம் கொண்ட ச.ச. நிலையங்களுக்கு மூன்றாண்டுகளாக நன்கொடை வழங்கவில்லை

## வடக்கு உள்ளூராட்சி அமைச்சர் கருத்தில் எடுக்க வேண்டும் பதில் தவிசாளர் மகேந்திரன்

(யாழ்ப்பாணம்)

ஏ-தரம், பி- தரம் என இரு பகுதிகளில் வழங்கப்பட்ட சனசமூக நிலையங்களுக்கான நன்கொடை ஏன் வட மாகாண சபை வந்தும் வழங்கப்படாதுள்ளது.

கடந்த மூன்றாண்டு நிதியை முழுமையாக தொகுத்து வழங்க வடக்கு முதல்வர் - நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன் முன்வரவேண்டும்.

இவ்வாறு வலி. தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை பதில் தவிசாளர் சின்னத்துரை மகேந்திரன் கேட்டுள்ளார்.

மானிப்பாய் பிரதேச சபைக்கான சனசமூக நிலையங்களின் நிதி ஒதுக்கீடு மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்த பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

சனசமூக நிலையங்களின் முன்னேற்றத்திற்கு என அரசினால் வழங்கப்பட்டு வந்த சிறு நிதியே சனசமூக நிலைய நன்கொடையாகும்.

இந்த நிதி கடந்த மூன்றாண்டு காலமாக வழங்கப்படவில்லை. இதனால் சனசமூக நிலையங்கள் உற்சாகமிழந்துள்ளன. இந்த சிறு நிதியை வடமாகாண உள்ளூராட்சி அமைச்சராக உள்ள க.வி. விக்னேஸ்வரன் பெற்று வழங்க முன்வரவேண்டும்.

அத்துடன் தாய்சேய் நன்கொடை, மலசல கூட நன்கொடை என்பனவும் கடந்த காலங்களில் வழங்கப்பட்டன.

ஆனால், மேற்படி நன்கொடைகளும் கடந்த 3 ஆண்டு காலமாக வழங்கப்படவில்லை.

எனவே, ஏ-பி தரம் கொண்ட சனசமூக நிலையங்களுக்கான நன்கொடை, தாய்சேய் நல நிதி நன்கொடை, மலசலகூட நன்கொடை நிதி என மூன்று வகையான நன்கொடை நிதிகளை வடக்கு முதல்வர் ஒதுக்கீடு செய்து வழங்க முன்வரவேண்டும்.

இல்லாவிடில் விரைவில் வடக்கில் உள்ள சனசமூக நிலையங்கள் படிப்படியாக வீழ்ச்சியடைந்து இல்லாதுபோகும் சந்தர்ப்பங்கள் உருவாகும் எனத் தெரிவித்துள்ளார்.

# பஸ் தரிப்பு நிலையங்கள் கிளி.யில் அமையவேண்டும்

## சமூக ஆர்வலர் சபாரத்தினம் வேண்டுகோள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அக்கராயன் பிரதேசத்திற்கு உட்பட்ட மக்கள் மீளக் குடியமர்ந்து ஆறு ஆண்டுகள் ஆகிறது.

எனினும் கிளிநொச்சியின் முக்கிய இடங்களில் பஸ்தரிப்பு நிலையங்கள் இல்லாதது பெருங்குறையாக உள்ளது.

இவ்வாறு சமூக ஆர்வலர் ஈ. சபாரத்தினம் தெரிவித்துள்ளார். அதாவது, கிளிநொச்சியில் தனி யார் மற்றும் அரச பேருந்துகள் செல்லும் போது அவ்விடங்களில் கர்ப்பிணிகள், வயோதிபர்கள், சிறுவர்கள், பாடசாலை மாணவர்கள் தரித்து நின்று செல்வதற்கான தரிப்பு நிலையங்கள் எதுவும் இல்லை.

எனவே, அரச அதிபர், டிப்போ முகாமையாளர்கள் இவ்விடயத்தில் கூடிய கவனமெடுத்து பஸ்தரிப்பு நிலையங்கள் அமைக்க வேண்டுமென சமூக ஆர்வலர் சபாரத்தினம் கேட்டுள்ளார்.

# தொடர் திருட்டுச் சம்பவங்களால் பீதியில் அச்சுவேலி மக்கள்

சத்தமிட்டால் சிறுகுழந்தையை கொன்றுவிடுவோமென பெற்றோரை மிரட்டி வீட்டிலிருந்த பெறுமதிமிக்க பொருட்களையும், பணத்தினையும் திருடர்கள் சூறையாடிச் சென்ற சம்பவமொன்று கடந்த வெள்ளிக்கிழமை இரவு அச்சுவேலி தெற்குப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

சம்பவதினத்தன்று அச்சுவேலி தெற்குப் பகுதியில் யாழ்ப்பாணம் பருத்தித்துறை பிரதான வீதிக்கு அண்மையிலுள்ள வீடொன்றில் நள்ளிரவை அண்டிய வேளையில் கொட்டும் மழையினையும் பொருட்படுத்தாது சமையலறையின் புகைபோக்கி வழியாக உள்நுழைந்த இரண்டு திருடர்கள் நித்திரையிலிருந்த சுமார் இரண்டு வயது மதிக்கத்தக்க குழந்தையை தூக்கிய பின்னர் வீட்டினுள் ஆராய்ந்து திரிந்து திருட்டு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது பிள்ளையின் பெற்றோர் விழித்து சத்தமிட முற்பட்டவேளை சத்தமிட்டால் பிள்ளையை கொன்றுவிடுவோம் என மிரட்டி அவர்களை சத்தமிடாதவாறு அச்சுறுத்தி விட்டு வீட்டிலிருந்த கைத்தொலைபேசி, பணம் உள்ளிட்ட பல்வேறு பெறுமதியான பொருட்களை திருடிக் கொண்டு தப்பியோடியுள்ளனர்.

மேலும் அன்றைய தினம் மேற்படி திருட்டுச் சம்பவம் இடம்பெற்ற வீட்டிற்கு எதிர்ப்புறம் அமைந்திருந்த வீட்டினுள் உள்நுழைந்த திருடர்கள் அவ்வீட்டிலிருந்தும் பணம் மற்றும் பொருட்களை சூறையாடிக் கொண்டிருந்த போது சத்தம் கேட்டு வீட்டிலுள்ளோர் விழித்தெழுந்து சத்தமிட்டனர். இதன்போது கையில் அகப்பட்ட பொருட்களையும் எடுத்துக் கொண்டு திருடர்கள் தப்பியோடியுள்ளனர்.

இதேவேளை கடந்த ஒரு வாரத்திற்கு முன்னர் அச்சுவேலி நகர்ப்பகுதியில் பிரதான வீதியோரமாக அமைந்துள்ள பலருக்கு வியாபார நிலையமொன்றிலிருந்தும் சுமார் பத்து இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் இரவு வேளையில் திருட்டுப்போயுள்ளது. மேற்படி சம்பவங்கள் தொடர்பாக அச்சுவேலி பொலிஸ நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (03)



புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மாணவர்கள் அதிபர், ஆசிரியர்களுடன்... (93)

# சனிப் பெயர்ச்சி உங்களுக்கு எப்படி?

**மேடம்- (அசுவினி பரணி, கார்த்திகை 1பாதம்)**

**தன் பலம் பலவீனம் அறிந்து, தன்னை தயார்ப்படுத்திக் கொள்ளும் மேடராசிக்காரர்களே!**

இதுவரை உங்கள் ராசிக்கு 7ஆம் வீட்டில் அமர்ந்து அடுக்கடுக்காக பல கஷ்டங்களையும், நஷ்டங்களையும் தந்தாலும் ஓரளவு நிம்மதியையும் தந்த சனிபகவான் இப்போது 16.12.2014 முதல் 17.12.2017 வரை உள்ள காலகட்டங்களில் 8ஆம் வீட்டில் அட்டமத்துச் சனியாக இருந்து செயற்படப் போகிறார். எனவே நீங்கள் எதிலும் கொஞ்சம் நிதானித்து செயற்படுவது நல்லது.

உங்கள் குடும்ப விடயங்களில் மற்றவர்களை அனுமதிக்காதீர்கள். எடுத்தோம், கவிழ்ந்தோம் என்று பேசுவதெல்லாம் இனி சரி வராது. கணவன்-மனைவிக்குள் சிலர் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சி செய்வார்கள். அவர்களின் பேச்சைக் கேட்டு வீணாக சந்தேகப்பட்டுக் கொண்டிருக்காதீர்கள். உஷாராக இருங்கள். சில நேரங்களில் எங்கே நிம்மதி என்று தேட வேண்டி வரும். மற்றவர்கள் ஏதேனும் ஆலோசனை கூறினாலோ அல்லது உங்களது தவறுகளை சுட்டிக்காட்டினாலோ, அல்லது உங்களை விமர்சித்துப் பேசினாலோ அதை பொறுமையாக ஏற்றுக் கொள்வது நல்லது.

**சனிபகவான் நட்சத்திர சஞ்சாரப் பலன்கள்:**

16.12.2014 முதல் 24.01.2015 வரை மற்றும் 30.04.2015 முதல் 13.6.2015 வரை மற்றும் 06.9.2015 முதல் 17.10.2015 வரை உங்கள் பாக்யாதிபதி குருவின் சாரத்தில் விசாக நட்சத்திரம் 4ஆம் பாதத்தில் 8ஆம் வீட்டில் சனி செல்வதால் கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். மகளுக்கு நல்ல வரன் அமையும். மகனுக்கு எதிர்பார்த்த நிறுவனத்தில் வேலை கிடைக்கும். ஆனால் அஷ்டமத்துச் சனியாக இருப்பதால் வெளி வட்டாரத்தில் அலைச்சல் அதிகமாகும்.

14.6.2015 முதல் 5.9.2015 வரை உங்கள் ராசிக்கு கண்டகச் சனியாக 7ஆம் வீடான துலாம் ராசி விசாக நட்சத்திரம் 3ஆம் பாதத்தில் சனி செல்வதால் நோய்கள் வந்து போகும். பிள்ளைகள் பிடிவாதமாக இருப்பார்கள்.

30.04.2015 முதல் 01.08.2015 வரை குரு பகவானின் விசாக நட்சத்திரத்திலேயே சனி வக்கரித்து செல்வதால் புது முதலீடுகளை தவிர்ப்பது நல்லது. பங்குதாரர்களுடன் பனிப் போர் வெடிக்கும். பணம் வாங்கித் தருவதில் குறுக்கே நிற்க வேண்டாம். சிலர் உங்களுக்கு உதவு வதாக சொல்லி உபத்திரவத்தில் சிக்க வைப்பார்கள்.

உங்கள் பாதகாதிபதியான சனிபகவான் தன் சுய நட்சத்திரமான அனுஷம் நட்சத்திரத்தில் 25.01.2015 முதல் 29.04.2015 வரை மற்றும் 18.10.2015 முதல் 15.11.2016 வரை செல்வதால் இக காலகட்டத்தில் மனஉளைச்சல், திடீர் பயணங்கள் அதிகரிக்கும். உங்கள் மீது சிலர் வீண் பழி சுமத்த முயற்சி செய்வார்கள். பழைய கடன் பிரச்சினையால் சேர்த்து வைத்த கௌரவத்திற்கு பங்கம் வந்துவிடுமோ என்று பயம் வரும்.

15.03.2015 முதல் 29.04.2015 வரை மற்றும் 19.5.2016 முதல் 12.08.2016 வரை உள்ள கால கட்டங்களில் சனிபகவான் அனுஷ நட்சத்திரத்திலேயே வக்ரமாவதால் ஆரோக்கிய குறைவு ஏற்படும். அவ்வப்போது சலிப்பு, சோர்வுடன் காணப்படுவீர்கள். வாயுக் கோளாறால் நெஞ்சு வலி, செரிமானக் கோளாறு வந்து நீங்கும். ஆனால் திடீர் பணவரவு உண்டு. வாகனம் வாங்குவீர்கள்.

16.11.2016 முதல் 17.12.2017 வரை உங்கள் திருதியாதிபதியும்-சஷ்டமாதிபதியுமான புதனின் கேட்டை நட்சத்திரத்தில் சனிபகவான் செல்வதால் இளைய சகோதரருக்கு உடல் நிலை பாதிக்கும். அவருடன் கருத்து மோதல்கள் வரும். தைரியம் குறையும். வழக்கு, கடனை நினைத்து அவ்வப்போது பயம் வந்து நீங்கும்.

வியாபாரத்தில் போட்டிகள் அதிகமாகும். இழப்புகள் ஏற்படும் வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பழகுங்கள். பங்குதாரர்களில் சிலர் தங்கள் பங்கு பணத்தை கேட்டு தொந்தரவு தருவார்கள்.

கன்னிப் பெண்கள் காதல் விவகாரத்தை தள்ளி வைத்துவிட்டு உயர்கல்வியில் கவனம் செலுத்துங்கள். புதிய நண்பர்களை தவிர்ப்பது நல்லது. பெற்றோரின் முடிவுகளை ஏற்றுக் கொள்ளப்பாருங்கள் இந்த சனி மாற்றம் விபத்துக்களையும், சிக்கல்களையும் ஒருபக்கம் தந்தாலும் மற்றொரு கடினஉழைப்பால் முன்னேற வைப்பதாகவும் அமையும்.

**பரிகாரம்:** சனீஸ்வரனை பூசம் நட்சத்திரம் நடைபெறும் நாளில் அல்லது பிரதோஷ நாளில் சென்று பூசணிக்காய் தீபமேற்றி வணங்குங்கள்.

(நாளை இடபம்)

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதித் தேர்தலின் பொது வேட்பாளர் என்கிற ஆச்சரியமான

# பொது வேட்பாளர் விடயத்தில், வண்டி அல்லது குதிரை எந்தப் பக்கம் செல்கிறது என்பது யாருக்குமே தெரியாது!


**- தமரா குணநாயகம் கட்டுரையிலிருந்து.**

அறிவிப்பின் மூலம் வரப்போகும் தேர்தல்களில் அவர் தற்போது ஆட்சியிலுள்ளவரை எதிர்கொள்ள உள்ளார். நிறைவேற்று ஜனாதிபதி முறையை நூறு நாட்களுக்குள் ஒழித்துவிடுவதாக அவர் வழங்கியுள்ள வாக்குறுதி நம்பிக்கைகளை ஏற்படுத்தினாலும் அதற்கான மாற்றீடு இறுதியில் நிச்சயமற்ற ஒன்றாகவே உள்ளது.

அரசியலமைப்பு மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை என்பது உட்பட ஏராளமான நிபந்தனைகள் வழியில் காத்திருக்கும்போது, ஒரு பொதுத் தேர்தலை நடத்துவுதற்கு முன்னர் ஐதேக தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்குவேன் என்கிற சிறிசேனவின் அறிவிப்பு கவலை தருவதாக உள்ளது.

"சிறிசேன - ரணில்" ஒப்பந்த அணுகுமுறையை பின்பற்றுவதன் மூலம் பொதுவேட்பாளருக்கான சிற்பிகள் - ஐதேக மற்றும் ஸ்ரீ.ல.சு.க வின் ஒரு பகுதி - வாக்காளருக்கு ஜனாதிபதி பதவிக்கும் மற்றும் பிரதமருக்கும் ஒரு ஒற்றை தேர்தல் தெரிவினையே தருகிறார்கள், ரணிலின் பிரதமர் பதவி மூலம் முன்னெப்போதுமில்லாத ஒரு ஜனநாயக விரோத முறைக்கு மக்களை அகப்பட வைக்கிறார்கள்.

சிறிசேனவுக்கு வாக்களிப்பதாக மக்களை நம்பச் செய்து ஆனால் அதற்குப் பதிலாக ரணிலுக்கு வாக்களிக்க வைக்கிறார்கள், இங்கு



சிறிசேனவின் நிலை என்னவென்று ஊகிப்பது கடினமாக உள்ளது.

இத்தகைய தவறான வழியில் செயற்படுவது அல்லது சிந்திப்பதில் உள்ள கெடுதல் என்னவென்றால் இது குறைந்தது இரண்டு வழியில் மக்களை கடந்து செல்கிறது. முதலாவதாக நிறைவேற்று அதிகாரங்களுடன் அரசாங்கத்தின் தலைவராக வருபவர் நூறு நாட்களுக்குள் ஐதேக மற்றும் ஸ்ரீ.ல.சு.க ஆகிய இரண்டு பிரதான அரசியல் கட்சிகளில் இருந்தும் கூட்டாக ஆளும் சில தலைவர்களை தெரிவு செய்வார் என்பது.

இரண்டாவதும் மற்றும் முக்கியமானதும், மாற்றீடு என்று சொல்லப்படுவது வெறும் சொல்லப்படுவது மட்டும்தான், ஏனென்றால் ஒரு புதிய முகம் மற்றும் ஒரு புதிய தேர்தல் முறை என்பனவற்றைத் தவிர, இலங்கை மக்களுக்கு அதாவது சிங்கள, தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ மற்றுமுள்ள சிறுபான்மை இன மக்களுக்கு இறுதியாகவும் மற்றும் நீதியானதுமான தீர்வை வழங்கக் கூடிய கொள்கைகளிலோ மற்றும் திட்டங்களிலோ - உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு - எந்த வித அடிப்படை மாற்றங்களும் ஏற்படுத்தப்படவில்லை.

கட்டமைப்புகளும் மற்றும் நிறுவனங்களும் மக்களுக்கு சேவை செய்யவேண்டுமே தவிர மக்கள் அவற்றுக்கு சேவை செய்ய வேண்டியதில்லை. அது ஒரு விமான நிலையத்தை, துறைமுகத்தை அல்லது ஒரு நெடுஞ்சாலையை யாருக்காக மற்றும் என்ன தேவைக்காக அமைக்கிறோம் என்பதை அறியாமல் உருவாக்குவதைப் போன்றது.

பொது வேட்பாளர் விடயத்திலும் என்ன நோக்கத்துக்காக அந்த நபரோ அல்லது அந்த கட்டமைப்போ சேவையாற்றப் போகிறது என்பது சொல்லப்படாமலே மக்களை அந்த நபருக்கு அல்லது அந்தக் கட்டமைப்புக்கு ஆதரவு தரும்படி கேட்கப்பட்டுள்ளது. அதாவது வண்டியை குதிரைக்கு முன்னால் பூட்டியுள்ளார்கள், வண்டியோ அல்லது குதிரையோ எந்தப் பக்கம் போகப்போகிறது என்பது யாருக்கும் தெரியாது.

ராஜபக்ஸக்களை அதிகாரத்தில் இருந்து வெளியேற்றுவது நல்லதுதான், ஆனால் ஏற்றத்தாழ்வுகள், பிரிவினை, மோதல் மற்றும் வறுமை என்பனவற்றை தனியார்மயமாக்கல் மற்றும் தாராளமயமாக்கல் எனும் ஒரு திட்டத்தின் மூலம் உருவாக்கும் நியாயமற்ற மற்றும் சுரண்டல் அமைப்பை உடைக்காவிட்டால், இந்த மாற்றம் உழைக்கும் வர்க்கத்தின் நாளாந்த வாழ்க்கையினை எப்படி மாற்றும்?

அந்த அமைப்பை உடைப்பது பொருளாதாரத்தின் ஒரு மீள் நோக்கினைக் குறிக்கிறது, சலுகையுள்ள ஒரு சிலருக்கு மட்டுமே சேவையாற்றுவதிலிருந்து உழைக்கும் வர்க்கத்தினருக்கு சேவையாற்றுவதாக, வெளிச் சந்தைக்கு மட்டும் சேவையாற்றுவதிலிருந்து பெரும்பான்மையான மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தில் தங்கியுள்ள உள்நாட்டு பொருளாதாரத்தின் தேவைக்கு சேவையாற்றுவதாக, தனியார் லாபத்துக்காக சேவையாற்றுவதிலிருந்து பொதுநலன்களுக்கு சேவையாற்றுவதாக மாற்றம் பெறும்.

மக்களை முதன்மையாக கொண்ட ஒரு உள்நாட்டு கொள்கை, மக்களின் செலவில் முதுகுக்குப் பின்புறமாக தனியார் கொடுக்கல் வாங்கல்களை நிர்ணயிக்கும் தற்போதைய நடைமுறையை நிராகரிக்கும் கோட்பாட்டின் அடிப்படையிலான ஒரு வெளிநாட்டுக் கொள்கை என்பன தவிர்க்கமுடியாத ஒரு தேவையாக உள்ளது.

மாற்றம் என்பது சாதரண மக்களுக்கு அர்த்தமுள்ள ஒன்றாக இருக்கவேண்டும் என்றால், சாதாரண பொருட்கள் அல்லது ஏனைய இடங்களில் மற்றவர்களுக்காக வேறு சிலர் பீரங்கித் தீவனமாக மாற்றப்பட்டது போன்ற வரலாறு நிறுத்தப்பட வேண்டும், மற்றும் அவை தங்கள் சொந்த வரலாறு, சொந்த தலைவிதியின் சிருஷ்டிகர்த்தாக்களாக மாறவேண்டும்.

---

# கே.வி. மகாதேவன்



**35**

**- பி.ஜி.எஸ்.மணியன் -**

கே.எஸ்.கோபாலகிருஷ்ணனின் கதை வசனம் இயக்கத்தில் வெளிவந்த படம் "ஆயிரம் ரூபாய்". ஜெமினி கணேசன், சாவித்திரி, எம்.ஆர்.ராதா, ராகினி ஆகியோர் நடித்திருந்தனர்.

"மெட்ராஸ்" பாஷையில் புகுந்து விளயாடி இருந்தார் சாவித்திரி.

கண்ணதாசனின் பாடல்களும் மகாதேவனின் மெட்டும் இன்றளவும் பாடல்களை நிலைத்திருக்க வைத்து விட்டன.

"ஆனாக்க அந்த மடம். ஆவாட்டி சொந்த மடம்" - சென்னைத் தமிழில் (உண்மையில் அப்படி ஒரு தமிழ் இருக்கிறதா என்ன?!) கவிஞர் எழுதிய இந்தப் பாடலை பி.சுசீலாவை நடிகையர் திலகம் ஏற்றிருந்த கதாபாத்திரத்துக்கு பொருத்தமாகப் பாட வைத்திருக்கிறார் கே.வி. மகாதேவன்.

"மரத்தே படிச்சவன்தான் மனுசாளைப் படைச்சிருக்கான்.

வாறதை எதுக்கத்தான் மனசைக் கொடுத்திருக்கான்."

"துட்டும் கைலே இல்லே. தூக்கத்துக்கும் பஞ்சமில்லே.

பெட்டியும் தேவை இல்லே. பூட்டுக்கும் வேலை இல்லே."

எளிமையான வரிகளில் வறுமையைக்கூட மலர்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளும் ஒரு நாடோடிப் பெண்ணின் கதாபாத்திரத்தை பாடலில் கவியரசர் கொடுக்க தன் இசையால் கே.வி. மகாதேவன் உயிரூட்ட பி.சுசீலாவின் குரலில் பாடலைக் கேட்கும்போதே காட்சி அமைப்பு படத்தைப் பார்க்காமலே யூகிக்க முடியும்.

கண்ணதாசன் - கே.வி.மகாதேவன் - பி.சுசீலா - நடிகையர் திலகம் சாவித்திரி ஆகியோரின் கூட்டணி பாடலை வெற்றிப்பாடலாக்கி விட்டது.

"பார்த்தாலும் பார்த்தேன் நான் உன்னைப்போல பார்க்கலே.

கேட்டாலும் கேட்டேன் உன் பேச்சைப் போல கேட்கலே". - கதாநாயகன் (ஜெமினி கணேஷ்) இலக்கியத்தமிழிலும் நாயகி (நடிகையர் திலகம்) பேச்சுத் தமிழிலும் பாடி இருக்கும் ஒரு அருமையான டூயட் பாடல். பி.பி. ஸ்ரீனிவாஸ் - பி.சுசீலாவைப் பாடவைத்து வெற்றிப்பாடலாக்கி விட்டிருக்கிறார் மகாதேவன். பாடலுக்கான முகப்பிசையில் வயலின்களை உச்சத்தில் ஏற்றி நிறுத்தி பல்லவியை மத்யம ஸ்ருதியில் துவக்கி இருக்கும் அழகே தனி.

"நிலவுக்கும் நிழலுண்டு" - பி. சுசீலா.

"அம்மா இல்லே அப்பா இல்லே" - முதல் முதலில் எஸ்.ஜானகி பாடிய குழந்தைப் பாடல்.

இப்படி மறக்கமுடியாத பாடல்களை "ஆயிரம் ரூபாய்" படத்துக்காக கொடுத்திருந்தார் கே.வி.மகாதேவன். படமும் வெற்றிபெற்றது.

ஆயிரம் ரூபாயில் இப்படி பாமரத்தனமான பாடல்களைக் கொடுத்து மெல்லிசையின் உச்சத்துக்கு சென்றவர் மரபார்ந்த இசையைத் தொட்டு விளையாடிய படம் "வீர அபிமன்யு".

படத்தின் பெயரைச் சொன்னதுமே "பார்த்தேன் சிரித்தேன்" என்று பி.பி.ஸ்ரீனிவாஸ் - பி.சுசீலா பாடும் "சஹானா" ராகப் பாடல் கட்டாயம் நினைவுக்கு வருமே. சஹானா ராகத்தில் எத்தனையோ பாடல்கள் வந்திருக்கலாம். ஆனால் ராகத்தின் பெயரைச் சொன்னதுமே பளிச்சென்று நினைவுக்கு வரும் திரைப்படப் பாடல் இந்தப் பாடல் மட்டும்தான். இது ஒன்றே போதுமே கே.வி.மகாதேவனின் திறமையைப் பறைசாற்ற.!



சிவாஜி கணேசனை முற்றிலும் மாறுபட்ட வேடங்களில் நடிக்க வைப்பதற்காக தனது அடுத்த கதையை தயார் செய்தார் இயக்குனர் ஏ.பி. நாகராஜன்.

அதுவே நடிகர் திலகத்தின் நூறாவது படமாகவும் அமைந்தது.

ஒன்பது மாறுபட்ட வேடங்களில் நடிகர் திலகம் அசத்திய "நவராத்திரி" படம் கே.வி. மகாதேவனின் இசையில் வெளிவந்தது.

"நவராத்திரி சுபராத்திரி" - பி.சுசீலா பாடும் இந்தப் பாடலை பீம்ப்ளாஸ் ராகத்தைப் பயன்ப[illegible] அமைத்திருந்தார்.

"சொல்லவா கதை சொல்லவா" - பி.சுசீலா.

"இரவினில் ஆட்டம் பகலினில் தூக்கம்" - டி.எம்.எஸ்.

மனநோய் மருத்துவமனையில் ஒரு கதம்பப் பாட்டு - பி.சுசீலா, எல்.ஆர். ஈஸ்வரி, சூலமங்கலம் ராஜலக்ஷ்மி.

"போட்டது மொளைச்சுதடி கண்ணம்மா" - டி.எம்.எஸ்.

நாடகத்தந்தை சங்கரதாஸ் ஸ்வாமிகளின் சத்தியவான்-சாவித்திரி பாடல்களை தொகுத்து அமைத்த தெருக்கூத்துக்கான பாட்டு. டி.எம்.எஸ். - பி.சுசீலா - எஸ்.சி. கிருஷ்ணன் ஆகியோருடன் வசனப் பகுத்திக்கு நடிகர் திலகமும், நடிகையர் திலகமும். இந்தப் பாடல் முழுக்க ஹார்மோனியத்தையும் தபேலாவையும் மட்டுமே பயன்படுத்தி அமைத்திருக்கிறார் கே.வி. மகாதேவன்.

படமும் மாபெரும் வரவேற்பைப் பெற்றது. அதற்கு பாடல்களும் உறுதுணையாக இருந்தாலும் ஆக்கிரமித்ததென்னவோ நடிகர் திலகத்தின் நடிப்புத்தான்.

அடுத்து வந்த ஆண்டான 1965இல் ஏ.வி.எம். நிறுவனம் முதல் முதலாக தன் இரு கதவுகளையும் திறந்துவைத்து கே.வி. மகாதேவனை வரவேற்றது.

படம்: காக்கும் கரங்கள்.

எஸ்.எஸ்.ஆர். - விஜயகுமாரி, எஸ்.வி. சுப்பையா ஆகியோர் நடித்த இந்தப் படம் ஏ.வி.எம். நிறுவனத்துடன் கே.வி.மகாதேவனுக்கு மட்டும் முதல் படம் அல்ல.

ஒரு நடிகராக கலையுலகில் முதல் முதலாக நடிகர் சிவகுமார் அவர்கள் அறிமுகமானதும் இந்தப் படத்தில் தான்.

"திருநாள் வந்தது தேர் வந்தது." பி. சு[illegible]

"ஞாயிறு என்பது கண்ணாக திங்கள் என்பது பெண்ணாக" - டி.எம்.எஸ். - பி.சுசீலா.

"அல்லித்தண்டு காலெடுத்து அடிமேல் அடி வைத்து" - டி. எம்.எஸ். - பி. சுசீலா.

- என்று கேட்கக் கேட்கத் தெவிட்டாத பாடல்களாகக் கொடுத்திருந்தார் கே.வி. மகாதேவன்.

**(தொடரும்)**

# நவீன இலக்கியம் ஏன் புரிவதில்லை?

ஜெயமோகன்

நம்முடைய கற்பனையை தூண்டி விடக்கூடிய இயல்பே இலக்கியப் படைப்பை ஆழம் மிக்கதாக ஆக்குகிறது. இதையும் நாம் நம் அனுபவத்தில் இருந்தே உணரலாம். ஓர் அனுபவத்தில் நம்மால் புரிந்துகொள்ளமுடியாத ஒரு புதிர் இருந்தால், அதை நாம் வகுத்துக்கொள்ள முடியவில்லை என்றால், நாம் அதைப்பற்றியே சிந்திப்போம் இல்லையா? நம் மனம் அதைநோக்கியே சுழன்றுகொண்டிருக்கிறது இல்லையா?

ஆகவேதான் முக்கியமான இலக்கிய ஆக்கங்கள் முழுமையாக எல்லாவற்றையும் சொல்வதில்லை. எவ்வளவு குறைவாகச் சொல்ல முடியுமோ அவ்வளவு குறைவாகச் சொல்லி மிச்சத்தை வாசகக் கற்பனைக்கே விட்டுவிடுகின்றன. அதிகமாக கற்பனைசெய்ய வைக்கும் இலக்கியம் அதிகநேரம் நம்முடன் இருக்கிறது. நம்மை அதிகமாக பயணம் செய்ய வைக்கிறது.



ஆகவே பொருள்மயக்கம் என்பது இலக்கியத்தின் முக்கியமான அழகியல் உத்தி. தெள்ளத்தெளிவாக இருப்பது இலக்கியத்தின் பலவீனம். நீதிநூல்கள் தெளிவாக இருக்கலாம். ஆனால் அதை இலக்கியத்தில் எதிர்பார்க்கக் கூடாது. கொன்றை வேந்தன் வாசிப்பது போல பிரமிள் புதுக்கவிதையை வாசித்தால் "என்ன இது ஒன்றுமே புரியவில்லை, என்னதான் சொல்லவாறார்?" என்ற குழப்பமே எஞ்சும்.

வில்லியம் எம்ப்சன் என்ற விமர்சகர் ஏழுவகை பொருள்மயக்கங்களைப் பற்றி எழுதியிருக்கிறார். அந்த பொருள்மயக்கங்கள் இலக்கியத்துக்கு ஆழத்தையும் அழகையும் அளிப்பவை.

பொருள்மயக்கம் என்பது இன்றுள்ள ஓர் இயல்பு அல்ல, எல்லாக் காலத்திலும் இலக்கியத்தின் அழகியலாகவே உள்ளது. குறுந்தொகை நற்றிணை பாடல்கள் குறள்பாடல்கள் பல அற்புதமான பொருள்மயக்கங்களுடன் உள்ளன. பல நூறு ஆண்டுகளாக அவற்றுக்கு மீண்டும் மீண்டும் உரைகள் எழுதப்படுகின்றன. எவ்வளவு உரைகள் எழுதப்பட்ட பின்னரும் அவற்றின் பொருள்மயக்கம் புதிய சிந்தனைகளை உருவாக்கியபடி நீடிக்கத்தான் செய்கிறது

**'அறத்தாறிதுவென வேண்டா சிவிகை**
**பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை'**

இந்த ஒரு குறளுக்கு மட்டும் எத்தனை வகையாக பொருள் கொள்ளப்பட்டுள்ளது என்று நோக்கினால் எம்ப்சன் என்ன சொல்கிறார் என்று புரியும். "பல்லக்கில் செல்பவன் சுமப்பவன் இருவரையும் வைத்து அறத்தின் வழி இதுவே என நினைக்க வேண்டாம்" இவ்வளவுதான் குறள். இது முற்பிறப்பின் வினைப்பயனைச் சொல்வது என்பது பரிமேலழகர் கூற்று. சமண ஊழ்வினையைச் சொல்கிறது என்பது நச்சினார்க்கினியர் உரை

இப்போதுள்ள இதுவே அறத்தின் எப்போதுமுள்ள வழி என்று நினைக்காதே வண்டியும் ஓர்நாள் ஓடத்தில் ஏறும் என்றுதான் வள்ளுவர் சொல்கிறார் என்றே நான் வாசிக்கிறேன். இன்னும் பல வாசிப்புகளுக்கு இதிலே இடமுள்ளது. இன்னும் இன்னும் சிந்திக்கச் செய்கிறது இந்தக் குறள்.

ஆகவே பொருள்மயக்கம் எப்போதும் இலக்கியத்தில் உள்ளது. அதுவே அதன் வழி. ஆனால் மரபிலக்கியம் உரைகள் உரைகள்மீது உரைகள் என எழுதப்பட்டு விளக்கப்பட்டுள்ளது. ஆகவே பலர் பொருள்மயக்கம் பற்றி யோசிக்காமலேயே மரபிலக்கியத்தை வாசித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நவீன இலக்கியம் சிக்கலாக இருக்கிறது, காரணம் இங்கே உரை இல்லை. பொருள்மயக்கம் முகத்தில் அறைகிறது.

ஒரு கதை. ஒரு ரோமாபுரி இளவரசியை அடிமை காதலித்தான். மன்னர் அதை அறிந்துவிட்டார். மன்னர் ஒரு குரூர நகைச்சுவைக்கு ஏற்பாடு செய்தார். கொலோசியத்திலே அந்த அடிமையை விட்டார். அவன் முன்னால் இரு வாசல்கள். ஒன்றுக்குள் பசித்த புலி. அதைத் திறந்தால் மரணம். இன்னொன்றுக்குள் ஒரு பேரழகி. அதை தேர்வுசெய்தால் விடுதலையும் இன்பவாழ்வும். அதில் எதை வேண்டுமானாலும் அந்த அடிமை திறக்கச் சொல்லலாம். அவன் விதி அவனாலேயே தீர்மானிக்கப்படும்.

அடிமை ஓரக்கண்ணால் இளவரசியை பார்த்தான். அவளுக்கு உண்மை தெரியும். அவள் உதவுவாள் என நினைத்தான். அவள் கண்களால் சுட்டிக்காட்டினாள். அவன் தேர்வுசெய்தான்-அவ்வளவுதான், கதை முடிந்தது.

கடைசிவரை இளவரசி என்ன சொன்னாள் என ஆசிரியர் சொல்ல முன்வரவில்லை. இன்றுவரை முடிவிலாது விவாதிக்கப்படுகிரது இக்கதை. ஒரு பெண்ணுள் ஓங்கியுள்ளது தாய்மையே என நீங்கள் எண்ணினால் அவள் அந்த பெண் இருந்த அறையைச் சுட்டிக்காட்டியிருப்பாள் என்பீர்கள். பெண்ணுக்குள் இருப்பது காதலிதான் காமம்தான் என்றீர்கள் என்றால் அவள் ஒருபோதும் தன் காதலனை இன்னொரு பேரழகிக்கு விட்டுக்கொடுக்க மாட்டாள்.

இந்த பொருள்மயக்கம் மூலமே இந்தக்கதை முடிவிலாத கற்பனைச் சாத்தியங்களை திறந்து வைக்கிறது. அடுக்கடுக்கான சிந்தனைகளை உருவாக்குகிறது. நவீன இலக்கியங்கள் அனைத்தும் இந்த வழியையே தேர்வுசெய்கின்றன.

ஆகவே நவீன இலக்கியத்தை அறிந்துகொள்ள இரு அடிப்படை புரிதல் தேவை என்று சொல்லிக்கொள்கிறேன். ஒன்று, நவீன இலக்கியம் உலகளாவிய ஒரு மீமொழியில் உள்ளது. அந்த மீமொழியை பயிலவேண்டும். இரண்டு, நவீன இலக்கியம் தெளிவுபடுத்துவதன் மூலம் நம்மிடம் தொடர்புகொள்ளவில்லை. மாறாக பொருள்மயக்கங்கள் மூலம் நம் கற்பனையை விரியச்செய்து நம்மை சிந்திக்க வைக்கிறது. அது எதைச் சொல்லவருகிறது என்று பார்க்கக் கூடாது. அந்தப் படைப்பு அளிக்கும் அனுபவத்தை நம் சொந்த கற்பனைமூலம் விரியச்செய்ய வேண்டும்


இவ்விரு அடிப்படைத்தெளிவும் இருந்தால் நவீன இலக்கியத்துக்குள் நுழைவது மிக எளிது.

## தெரியுமா?

✧ நம் பற்கள் எலும்பு ரகத்தைச் சேர்ந்தவை அல்ல. "டென்டின்" என்னும் பொருளால் ஆனவை.

✧ பற்களில் உள்ள எனாமல்தான் நம் உடலிலேயே எளிதில் தேயாத பொருள். இது தேய்ந்துவிடும்போது பல் கூச்சம் ஏற்படுகிறது.

✧ மனித முகத்தின் இரு பக்கங்களும் ஒரே மாதிரியாக இருக்காது. ஒரு கண் மற்றதை விட பலமாக இருக்கும். கன்னங்கள் ஒன்றுடன் ஒன்று வித்தியாசமாக இருக்கும். அதே போல சாதாரணமாக வலது காது, இடது காதைவிட சற்று உயரமாக இருக்குமாம்.



✧ மனித உடலின் மிகச் சிறிய எலும்பு - காது எலும்பு.

✧ மனிதர்களுக்கு மூக்கு, காது வளர்ச்சி அடையும். ஆனால் கண்கள் மட்டும் ஒரே அளவே இருக்கும்.

✧ ரத்த அழுத்தம்போலக் கண்களிலும் அழுத்தம் உள்ளது. அது சரியான அளவு இருக்கும் வரையில் சிரமம் இல்லை. அது அதிகமாகும்போது கண் நரம்புகளை அழுத்தி அதனால் கண்கள் பலவீனமாகிறது.

✧ ஒவ்வொரு முறை நாம் காலடி எடுத்து வைக்கும்போதும் 54 தசைகள் இயங்குகின்றன.

✧ ஒரு மனிதன் தன் வாழ்நாளில் சராசரி முப்பதாயிரம் கிலோ உணவு சாப்பிடுகிறான்.

✧ மொத்த விரல்களின் பலத்தில் 40 வீதத்தை கட்டைவிரல் பெற்றுள்ளது.

✧ பெண்ணை விட ஆண்களால் சிறிய எழுத்துக்களைப் படிக்க முடியும். ஆணைவிடப் பெண்ணுக்குக் கேட்கும் திறன் அதிகம்.

✧ சிரிப்பு பற்றி அமெரிக்கப் பல்கலைக்கழகம் ஒன்று செய்த ஆராய்ச்சியிலிருந்து தெரியவந்தது: ஒரு பெண் தெரிந்தவர்களைவிட, தெரியாதவர்களிடம் இருக்கும்போதுதான் அதிகம் சத்தம் போட்டுச் சிரிக்கிறாளாம். அறிமுகம் இல்லாதவர்களிடம் பயம் காரணமாகவே பெண்கள் சத்தம் போட்டுச் சிரிக்கின்றனர்!

## காய்கள் கெடாமல் பாதுகாக்க...



✗ வாழைக்காயை தண்ணீரில் போட்டு வைத்திருந்தால் ஒரு வாரம் வரை கெடாமல் இருக்கும்.

✗ சின்ன வெங்காயத்தை வாங்கி கூடையில் வைக்காமல் தரையில் வைத்தால் வெங்காயம் கெடாமல் இருக்கும்.

✗ பச்சை மிளகாய் காம்புகளை நீக்கி விட்டு ஒரு பாத்திரத்தில் மூடிவைத்தால் பச்சைமிளகாய் கெடாமல் இருக்கும்.

✗ கத்தரிக்காயை ஹொட் பொக்ஸில் வைத்து மூடினால் காய் வாடாமல் நன்றாகவும், நிறம் மாறாமலும் இருக்கும்.

✗ ஊறுகாய் கெடாமல் இருக்க சிறிது எண்ணெய்யைச் சூடாக்கி ஊறுகாய் மேல்விட்டால் கெடாது.

✗ வெண்ணெய்யில் உப்பைத் தூவி விட்டால் அது கெடாது.

✗ கருவேப்பிலை, கீரைகளை வாங்கிய உடன் வாழைப்பட்டையில் சுற்றி வைத்தால் வாடாது; கெடாது.

## கவனியுங்கள்

மழை, பனிக்காலத்தில் அஸ்மா நோயாளிகள் கவனிக்க வேண்டியவை, கடைப்பிடிக்க வேண்டியவை :

- அத்திப்பழம் தொடர்ந்து சாப்பிட அஸ்மா குணமாகும்.
- தூதுவளை, துளசி இரண்டும் இந்நோயாளிகளுக்கு இரண்டு கண்போன்றது. அவசியம் வாரம் ஒரு முறையாவது சேர்க்க வேண்டும்.
- வில்வப்பொடி, கடுக்காய்ப்பொடி சாப்பிடலாம். ஆடாதொடை இலையை ஏதாவது ஒரு விதத்தில் சேர்த்துக் கொண்டே இருக்கலாம்.
- சந்தோஷமான குடும்ப சூழல் அவசியமானது.


தவிர்க்க வேண்டியவை:

- குளிர்பானங்கள், ஐஸ்கிறிம் சாப்பிடக் கூடாது. அடிக்கடி உணர்ச்சி வசப்படுவது, கோபப்படுவது எப்பொழுதும் பரபரப்போடு காணப்படுவது ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும்.
- அசைவ உணவை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.

செய்ய வேண்டியவை:

- ஃப்ரிஜ் நீர் பருகாமல் கொதித்த வெந்நீரை ஆறவைத்து பருக வேண்டும்.
- தலை, காது, கழுத்தை சுற்றி மப்ளர் கட்டிக் கொள்ள வேண்டும். கம்பளிச் சட்டை அணிவது நல்லது.






சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையை சேர்ந்த 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்குமேல் புள்ளிகள் பெற்ற 92 மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் திருமதி. சியாமளா கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கௌரவிக்கப்பட்ட மாணவர்களையும் மாவட்டத்தில் முதலிடத்தை பெற்ற வனோ[illegible]விற்கு நினைவுச் சின்னம் வழங்கப்படுவதையும் காணலாம். (11)





சுன்னாகம் பொலிஸாரின் ஏற்பாட்டில் ஏழாலை சந்தியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட நடமாடும் பொலிஸ் நிலைய ஆரம்ப நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதில் பொலிஸ் பரிசோதகர் ஏச்.எல். துஸ்மந்த உரையாற்றுவதையும், முன்பள்ளி சிறுமிக்கு கிராம அலுவலர் திருமதி தி. சசிகலா பரிசில் வழங்குவதையும், கலந்து கொண்ட மக்களையும் காணலாம். (54)




# நிகழ்வுகளின் பதிவுகள்....

நெல்லியடி பொலிஸாரின் ஏற்பாட்டில் பொலிஸ் நடமாடும் சேவை நிலையம் நெல்லியடி கலிகைச் சந்தி முருகன் கோவிலுக்கு அருகாமையில் அமைந்துள்ள கலாசார மண்டபத்தில் அண்மையில் ஆரம்பித்துவைக்கப்பட்டது இதில் பொலிஸ் அதிகாரி மங்கள விளக்கேற்றுவதையும் கரவெட்டி பிரதேச செயலர் எஸ். சிவஸ்ரீ கொடியேற்றிவைப்பதையும் காணலாம். (18)





வடமராட்சி ரவின்ஸ் ஆங்கில கல்வி நிலையத்தின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது இதில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் கரவெட்டி பிரதேச செயலரினால் பரிசில் வழங்கப்படுவதையும் மாணவர்கள் சந்தியப்பிரமாணம் செய்வதையும், காணலாம். (01)




தேசிய கலை இலக்கிய பேரவையால் ஷெல்லிதாசனின் 'நகரவீதிகளில் நதிப்பிரவாகம்' நூல் அறிமுக விழா அண்மையில் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோது... (90)



அதிபர் அமரர் அ.பொ. செல்லையா நினைவாக மீசாலை புத்தூர் சந்தியில் அமைக்கப்பட்டுவரும் பேருந்து தரிப்பிடம். (48)

## விண்ணப்பங்கோரல்

ஆசிரியர் கலாசாலைகளில் 2015 - 2016 கல்வியாண்டில் பாட நெறிகளைப் பயில்வதற்காக தகுதியான ஆசிரியர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை மூன்று மாத ஆசிரியர் சேவை யைப் பூர்த்தி செய்த அரச பாட சாலை ஆசிரியர்கள் மற்றும் ஆசி ரிய உதவியாளர்கள், தனியார் பாடசாலையில் கல்வி அமைச் சின் அனுமதியுடன் பணியாற்றும் ஆசிரியர்கள் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கத் தகைமையுடைய வர்களாவர்.

எனவே விண்ணப்பப் படிவங் களை எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் அனுப பிவைக்க வேண்டும். மேலதிக விபரங்களை கடந்த வெள்ளிக் கிழமை வர்த்தமானியில் பார் வையிடமுடியும் எனவும் அறிவிக கப்பட்டுள்ளது. (48)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தொடர்ந்தும் நலன்புரி நிலையங்களில்

வவுனியாவில் பெய்துவரும் கடும்மழை வெள்ளத்தால் பாதிப் படைந்த குடும்பங்கள் தொடர்ந்தும் நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக, அனர்த்த முகாமைத்துவ நிலையம் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

காலநிலை சீரின்மையால் வீடுகள் பாதிப்படைந்த 277பேர் தொடர்ந் தும் புதிய வேலர் சின்னக்குளம், விளக்கு வைத்தகுளம், சமளங் குளம், மகிழங்குளம், பூந்தோட்டம் நலன்புரி நிலையம் உட்பட5 நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை நலன்புரி நிலையங்களில் போதுமான வசதிகள் இல்லாததுடன் சிறுவர்கள் உட்பட அனைவரும் பெரும் பாதிப்புக ளுக்கு முகம் கொடுத்து வருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

844 குடும்பங்களைச் சேர்ந்த 2,865 பேர் வவுனியா மாவட்டத்தில் மழையின் காரணமாக பாதிப்படைந்துள்ளதுடன் 17 வீடுகள் முற்றாக சேதமடைந்தும் 617 வீடுகள் பகுதியளவில் பாதிப்படைந்தும் உள்ளன.

இந் நிலையில் பாவக்குளம் வான் பாய்து வரும் நிலையில் தொடர்ந்தும் நீர் வரத்து அதிகரிக்கும் பட்சத்தில் வான் கதவுகள் திறக்கப்படும் என்பதனால் கிறிஸ்தவகுளம், மெனிக்பாம், கந்த சாமிநகர், பாவக்குளம் படிவம் 2, 4, வீடியாபாம் ஆகிய கிராமங்கள் பாதிப்படையும் என்பதனால் அப்பகுதி மக்களை அவதானத்துடன் இருக்குமாறு அனர்த்த முகாமைத்துவ நிலையம் கோரியுள்ளது.

# அறிவுநூல்களை வாசிக்கும் பழக்கத்தை மாணவர்கள் கடைப்பிடிக்கவேண்டும்

## இந்துகலாசார திணைக்கள பணிப்பாளர் தெரிவிப்பு



(யாழ்.நிருபர்)

இன்றைய இளைய தலை முறையினர் சிறு பிராயத்திலி ருந்தே அறிவுநூல்களை வாசிக் கும் பழக்கத்தைக் கைக்கொள்ள வேண்டும் நூல்களை கற்க கற்க எமது அறிவு விசாலமடைகின் றது. வாசகர்களுக்காகவே எமது திணைக்களம் வருடந்தோறும் மிகவும் சிறப்பான நூல்கள் பல வற்றை வெளியிட்டுவருகிறது.


இவ்வாறு இந்துசமய கலா சார அலுவல்கள் திணைக்களத் தினால் தமிழ் நூலகங்களுக்கு இலவசமாக நூற்பொதி வழங் கும் நிகழ்விற்கு தலைமை தாங்கி உரை நிகழ்த்திய திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் குறிப்பிட்டார்.

கொழும்பு பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள இந்துசமய கலா சார அலுவல்கள் திணைக்கள கேட்போர் கூடத்தில் அண்மை யில் நடைபெற்ற இந்நிகழ்வில் திருமதி சாந்தி நாவுக்கரசன் தொடர்ந்து பேசுகையில், எமது திணைக்களத்தினால் வெளியிடப் படும் நூல்களுள் இந்துக் கலைக் களஞ்சியத்தொகுதிகள் மிகவும் முக்கியமானவை அது போன்று இன்று கிடைத்தற்கரிய நூல்கள் பலவற்றைத் தேடிப்பெற்று அவற்றை மீளப் பதிப்பித்து வழங் குகின்றோம். அதன் ஓரம்சமா கவே இன்று ஆறுமுகநாவலர் பெருமான் உரை எழுதிய திரு முருகாற்றுப்படை என்னும் நூல் வெளியிடப்படுகிறது.

நாம் பதிப்பிக்கும் நூல்களை நாட்டின் பல்வேறு பாகங்களிலும் அமைந்துள்ள நூலகங்கள் பயன் படுத்தும் வகையில் இலவசமாக வழங்கி வருகிறோம்.

இந்நூல்களைப் பெறும் நூல கப் பொறுப்பாளர்கள், வாசகர் கள் பலரும் பயன்படுத்தத் தக்க வகையில் இவற்றை அறிமுகப் படுத்தவேண்டும் எனவும் கேட் டுக் கொண்டார். (10)

# கற்றல் உபகரணங்கள் மாணவர்களுக்கு அன்பளிப்பு



(மானிப்பாய்)

மானிப்பாய் மேற்கு இளைஞர் கழகத்தினால் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அன்ப ளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

புலம்பெயர் அன்பர் சண்முகநாதன் சுகிர்தா தம்பதிகளின் புதல்வன் எஸ்.தருணின் பிறந்த நாளில் பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப் பினர் க.உஷாந்தனின் ஏற்பாட்டில் மானிப்பாய் மேற்கு இளைஞர் கழகத்தினூடாக ஒரு தொகுதி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப் பட்டுள்ளன.

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய அற நெறிப் பாடசாலை மண்டபத்தில் வைத்து இக் கற் றல் உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

மானிப்பாய் மேற்கு இளைஞர் கழகத்தின் தலைவர் செ.கீர்த்தனா தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் அ.பரஞ்சோதி கலந்து கொண்டார்.

அத்துடன் இந் நிகழ்வில் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் க.உதயசூரியர், செயலாளர் ந.விவேகானந்தராஜா, வலி. தென் மேற்கு பிரதேச இளைஞர் கழக சம் மேளனத்தின் தலைவர் ச.செந்தில்குமரன், பிர தேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் க.உஷாந் தன், வலி. தென் மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் உபதலைவர் எஸ்.றொபின் ஷன், பொருளாளர் அ.ஜெபநேசன், பிரதேச இளை ஞர் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.சுகிர்தா ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தனர். (48)




## பொது மக்கள் தொடர்புகள் மற்றும் மக்கள் விவகார அமைச்சு

பொதுமக்கள் தொடர்புகள் மற்றும் மக்கள் விவகார அமைச்சி னால் பின்வரும் பதவி நிலைகளுக்கு இலங்கைப் பிரஜை களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

**விடுமுறை விடுதி நிர்வாகிகள்**
**(முகாமைத்துவ உதவியாளர்கள்)**

விண்ணப்பதாரிகள் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழி, கணிதம் மற்றும் ஏனைய இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

கல்விப் பொது தராதர உயர்தரப் பரீட்சையில் ஆகக் குறைந்தது மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் தொழில் தகைமைகளைக் கொண்டிருப்பின் அது மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.

இப்பதவிக்கான வயதெல்லை 18 இற்கு குறையாமலும், 30 இற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சமையற்காரர்கள்**

விண்ணப்பதாரிகள் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆகக்குறைந்தது திறமைச் சித்திகள் இரண்டுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் தொழில் தகைமைகளைக் கொண்டிருப்பின் அது மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.

இப்பதவிக்கான வயதெல்லை 18இற்கு குறையாமலும், 45 இற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**தொழிலாளர்கள்**

விண்ணப்பதாரிகள் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் ஆகக்குறைந்தது திறமைச் சித்திகள் இரண்டுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந் திருத்தல் வேண்டும்.

அத்துடன் துறை சார்ந்த அனுபவம் மற்றும் தொழில் தகைமை களைக் கொண்டிருப்பின் அது மேலதிக தகைமையாகக் கொள் ளப்படும்.

விண்ணப்பதாரிகள் தங்களது சுயவிபரங்கள் அடங்கிய விண் ணப்பத்தினை நாளை மறுதினத்திற்கு முன்னர் செயலாளர், பொதுமக்கள் தொடர்புகள் மற்றும் விவகார அமைச்சு, இல.302, காலி வீதி, கொழும்பு - 04 என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப் பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தம்மால் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.

## ஆசிரியர் கல்லூரிகளுக்கான அனுமதி - 2015/2016

ஆசிரியர் கல்லூரிகளில் இரண்டு ஆண்டுகள் ஆசிரியப் பயிற்சி நெறியை மேற்கொள்வதற்கு ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பாடநெறிகள் பின்வருமாறு :

சிங்களம், ஆரம்பக் கல்வி, சமூகவியல், விஞ்ஞானம், கணிதம், விவசாயம், மனையியல், ஆங்கிலம், புத்த சமயம், கிறிஸ்தவம்/ ரோமன் கத்தோலிக்க சமயம், இந்து சமயம், இஸ்லாம், சித்திரம், சங்கீதம், நடனம், அரபு, விசேட கல்வி, கைப்பணியும், தொழில், நுட்பமும், வணிகம், தமிழ், உடற்கல்வி, இரண்டாம் மொழி (சிங்களம் / தமிழ்) போன்ற பாடங்களுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கும் படியாக கல்விப் பணிப்பாளர், ஆசிரியர் கல்வி நிர்வாக கிளை, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்லை என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலை யில் "ஆசிரியர் கல்லூரிகளில் ஆசிரியர் கல்விப் பாடநெறிக்கு ஆசிரியர்களைத் தெரிவு செய்தல் 2015/2016 எனக் குறிப்பிட்டு பயிற்சி நெறி, மொழி மூலம், மாவட்டம் என்பனவற்றைக் குறிப் பிடுதல் வேண்டும்.

இதற்கான தகைமைகள் மற்றும் விபரங்களை கடந்த 28.11.2014 ஆம் திகதி வெளியாகிய அரச வர்த்தமானியில் பார்வையிட முடியும்.

## போட்டிப் பரீட்சை மற்றும் தடை தாண்டல் பரீட்சைகள்

CIM Examination - December 2014 - நாளையும் நாளை மறு தினமும் கொழும்பு மற்றும் கண்டியில் மட்டும் நடைபெறவுள்ளது.

□□□□□□□

இலங்கை மக்கள் வங்கிக்கு முகாமைத்துவ பயிலுநர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகுதிகாண் பரீட்சை (பகுதி II) - 2014 எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் மட் டும் நடைபெறவுள்ளது.

□□□□□□□

I ஆம் தர சுங்க பரிசோதகர்களுக்காக நடைபெறும் இரண்டா வது வினைத்திறண் காண் தடைப் பரீட்சை (புதிய பாடத்திட்டம்) - 2014 (II) எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பில் மட்டும் நடைபெறவுள்ளது.

தொகுப்பு:- சி.என்.எச். சாலிஸ்

# தேர்தலுக்கு முன் அடையாள அட்டை வழங்குவதற்கு நடவடிக்கை

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக தேசிய அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு தேசிய அடையாள அட்டையை வழங்குவதற்கு ஆட்பதிவுத் திணைக்களம் நடவடிக்கைகளை எடுத்து வருவதாக தேசிய ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் ஆர்.எம்.எஸ்.சரத்குமார் தெரிவித்துள்ளார்.

கண்டி, பதுளை, இரத்தினபுரி, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் நடமாடும் சேவைகள் அடுத்தவாரம் தொடக்கம் சனி,ஞாயிறு நாட்களில் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நடமாடும் சேவை நடாத்துவது தொடர்பாக பப்ரல் அமைப்புடனும் மனித உரிமைகள் நடவடிக்கைச் செயலகத்துடனும் பேச்சுவாரத்தை நடாத்தி திகதியைத் தீர்மானிப்பதாகவும் ஏனைய மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் விண்ணப்பப் படிவங்களைக் காலம் தாழ்த்தாது தமது திணைக்களத்திற்கு உடனடியாக அனுப்பி வைக்குமாறும் சகல பிரதேச செயலகங்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளதாக ஆணையாளர் தெரிவித்தார். (10)

# அறக்கொடை நிறுவனத்தின் பன்னிரண்டாவது ஆண்டுவிழா

வசதி குறைந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான சமூக நலப் பணிகளை ஆற்றிவரும் யாழ்ப்பாணம் நாவலர் வீதி நல்லூரில் அமைந்துள்ள தியாகி அறக்கொடை நிறுவனத்தின் பன்னிரண்டு ஆண்டுகள் நிறைவும் அதன் நிறுவுனர் வாமதேவன் தியாகேதிரனின் பிறந்தநாள் விழாவும் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி முதல் அறக்கொடை நிறுவனத்தின் சொர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிறுவனத்தின் பணிப்பாளர் செ.கமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் ப.சிவ நாதன் பிரதம விருந்தினராகவும் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் திருமதி இ.அன்ரன் யோகநாயகம், யாழ்ப்பாணம் உதவிப் பிரதேச செயலர் செல்வி தனிஷ்கா வசந்தராசா, சமா தானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுச்செயலாளர் எஸ்.பரம நாதன், யாழ்.பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மாணிக்கராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வார்கள். (10)



# பரமர் சங்கமம்

'குட்டையைக் குழப்பித்தான் மீன்பிழக்க வேணுமென்பினம்'. மீனினங்கள் கற்பாறைகளிலும் பாசிப்படுக்கைகளிலும் ஓய்வெடுத்து பசியாற்றிக் கொண்டிருக்கும். அதுகளுக்குக் கலைவு காட்டினாலே மீனவர் வைத்திருக்கும் வலை கண்ணிகளில் பட்டுப் பிழபடும்

அப்பழ இல்லாமல் கூட்டம் கூட்டமாய் வருகையில் சுத்தி வளைத்துப் பிழப்பதும் நடக்கும் மீன்களை வேட்டையாட அந்தக் காலத்தைவிட இந்தக் காலத்தில் நவீன யுக்திகள் முறைகள் தொழில் உபகரணங்களெண்டு அதிகம் வந்திட்டுது.

அதிற்கூட சில வலைகள், உபகரணங்கள் பாவிப்பதற்குத் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. பரமர் இண்டைக்கென்ன குட்டையைக் குழப்பப் போறாரெண்டு யோசிக்கிறியளே அதுதான் உங்களுக்கு நல்லாத்தெரிஞ்ச விசயமாச்சே!

ஜனாதிபதித் தேர்தலை அறிவிச்சதும் எதிரணிப் பொது வேட்பாளராக உள்ளுக்கை இருந்த ஒருவரே வருவாரெண்டு ஜனாதிபதி கூடக் கனவிலும் நினைக்காமல் இருக்க மற்றவைக்கென்னெண்டு தெரியப்போகுது?

மைத்திரிபால சிறிசேனவை களமிறக்க திரைமறைவில் நடந்த நாடகம் கற்சிதமாகவே நடந்து முழந்துள்ளது. மைத்திரிபால தான் பொதுவேட்பாளரென்பதைத் திசைதிருப்ப சந்திரிக்கா, ரணில், கருஜெயசூரிய, முன்னாள் பிரதம நீதிபதி ஷிராணி பண்டாரநாயக்க போன்றவர்களின் நிழல்களைப் பூச்சாகாட்டி நடந்த எந்தக் காட்சியும் பதியப்படாத நாடகத்தை வெற்றிகரமாக முன்னாள் ஜனாதிபதி அரங்கேற்றியுள்ளார்.

செய்மதித் தொலைபேசிப் பாவனை, இலக்கத்தகடுகள் மாற்றப்பட்ட வாகனங்கள் என்று ஒருத்திரில் நாடகத்தையே தயாரித்து இருந்ததை ஊடகங்களில் வாசிக்கும் போது அடுத்து என்ன நடக்கும் என்ற ஆவலைத்தூண்டும் மர்மக் கதையைப் பழக்கும் அனுபவமே வந்தது.

குட்டையைக் குளப்புறேண்டா இப்பழத்தான் இருக்கும் எதிரணியின் மையத்துக்கே சென்று அதிரழத் தாக்குதல் நடாத்தப்பட்ட பல செய்திகளை 2009 ஆம் ஆண்டு முன்னாள் கழிந்த ஏறத்தாள 25 வருடங்களிலும் பலதடவைகள் செய்திப் பத்திரிகைகளில் பார்த்த அனுபவம் எங்கடை ஆக்களுக்குண்டு

எத்தனையோ ஜனாதிபதிகளால் பல வருடங்களாக வெல்ல முழயாமல் இருந்த புலிகளுடனான போரை வென்றெடுத்த மகிந்தரின் கோட்டைக்குள்ளே நுழைந்து நடத்திய குழப்பத்தால் வெற்றித் தராசு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பக்கமே காட்டி நிற்கிறது.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பைத் தொடர்ந்து குட்டை குழப்பலில் மீனவர் மட்டுமெண்டில்லாமல் அனைவருமே மீன்பிழக்க முழஞ்சிருக்கு. அதனால ஒலி, ஒளி இலத்திரனியல் ஊடகங்களை நாளாந்தம் மக்கள் மொய்க்கத் தொடங்கியுள்ளனர். இல்லையே பின்னை....

# நிறைவேற்று அதிகாரமுறைமை இலங்கைக்கு பொருத்தமற்றது

## அமைச்சர் மில்ரோய் தெரிவிப்பு



(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை இலங்கைக்கு எந்த வகையிலும் பொருந்தாத ஒன்று என சிரேஷ்ட அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

புத்தளம் மாவட்ட ஸ்ரீ.ல.சு.க.வின் தொழிற்சங்க நிகழ்வில் கலந்துகொண்டுவிட்டு சர்வதேச ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த ஜனாதிபதிப் பதவி நல்ல ஒருவரிடம் கிடைத்தால் அது சிறந்தது. கெட்ட ஒரு மனிதரிடம் கிடைக்கப் பெற்றால் அது மிகவும் மோசமானது.

இலங்கையைப் போன்ற ஒரு நாட்டிற்கு இந்த முறைமை கொஞ்சமும் பொருத்தமற்றது. இதனை நீக்க வேண்டும் என்பதில் நூற்றுக்கு நூறு வீதம் நான் உடன்படுகின்றேன்.

தமது கட்சியினராலேயே எமது கட்சிக்கு சிக்கல் நிலை உருவாகியுள்ளது.

எந்தப் பிரச்சினை இருந்தாலும் தான் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் வெற்றிக்கு உழைக்கப் போவதாகவும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

# சுவிஸ் பிரஜைகள் மீது தாக்குதல் தலைநகரில் இது தொடர் கதை

கொழும்பு, சினமன் கார்டன் ஹோட்டலில் அமைந்துள்ள இரவு விடுதியொன்றில் வைத்து தாக்கப்பட்டார்கள் என்று கூறப்படும் சுவிஸ் நாட்டைச் சேர்ந்த ஜோடியொன்று, மிரிஹானை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளது.

சினமன் கார்டன் ஹோட்டலில் உள்ள இரவுவிடுதிக்கு சென்றிருந்த போது அங்கிருந்த ஒரு குழுவினரால் தாம் தாக்கப்பட்டதாக, அம்முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இம்முறைப்பாட்டை பதிவு செய்துகொண்ட பொலிஸார், படுகாயமடைந்திருந்த குறித்த ஜோடிகளை களுபோவில வைத்தியசாலைக்கு சிகிச்சைகளுக்காக அனுப்பி வைத்துள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# வெற்றி நிச்சயம் இது சோதிட கணிப்பு

ஜனாதிபதி மகிந்த ராஜபகஷ இரண்டாவது முறை பெற்ற வெற்றியை விட இம்முறை மிக இலகுவாக வெற்றி பெறுவார் என ஜனாதிபதியின் ஆஸ்தான சோதிடர் சுமணதாச அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ மூன்று தடவைகள் அல்ல நான்கு தடவைகள் இலங்கையை ஆட்சி செய்வார் எனவும் அவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதியே அடுத்த ஆட்சியை அமைப்பார். பொது வேட்பாளராக போட்டியிடும் மைத்திரிபால பொலன்நறுவை தொகுதியை மாத்திரமல்ல, பொலன்நறுவை மாவட்டத்திலோ, வடமத்திய மாகாணத்திலோ எந்தத் தொகுதியிலும் வெற்றி பெற மாட்டார் எனவும் சுமணதாச அபேகுணவர்தன கூறியுள்ளார்.

# சட்ட ஆட்சியை பாதுகாப்பதே இலக்கு சட்டத்தரணிகள் சங்கம் அறிவிப்பு




(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலின் போது சட்ட ஆட்சியை பாதுகாப்பதற்காக செயற்பாட்டு தலையீட்டை மேற்கொள்ளவுள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற நிறை வேற்று சட்டத்தரணிகள் சங்க நிறைவேற்றுக் குழு கூட்டத்தின் போது இது தொடர்பில் தீர்மானிக்கப்பட்டதாக அந்த சங்கத்தின் தலைவர் உபுல் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

தேர்தல் கண்காணிப்பாளர்களின் கோரிக்கைகளுக்கு அமைய எதிர்காலத்தில், தேர்தல் சட்டங்களை மீறுகின்றமை தொடர்பில் நீதிமன்ற செயற்பாடுகளை முன் எடுக்கும் நோக்கிலே இந்த ஒத்துழைப்பு வழங்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, இலஞ்ச மற்றும் மோசடி ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பில் பிரச்சினை ஏற்பட்டுள்ளதாகவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்க தலைவர் உபுல் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

# அடுத்த கல்வி ஆண்டுக்கான பாடசாலை நாட்கள் எவை

## வெளியாகியது நாட்காட்டி




(கொழும்பு)

2015ஆம் ஆண்டு கல்வியாண்டுக்கான பாடசாலை தவணை அட்டவணையை கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது. இதன்படி தமிழ் சிங்கள பாடசாலைகள் முதலாம் தவணைக்காக ஜனவரி 5ஆம் திகதி முதல் ஏப்ரல் 8ஆம் திகதி வரை இயங்கும்.

இரண்டாம் தவணைக்காக ஏப்ரல் 21ஆம் திகதி முதல் ஜூலை 30ஆம் திகதி வரையும் மூன்றாம் தவணைக்காக ஆகஸ்ட 31ஆம் திகதி முதல் டிசம்பர் 4ஆம் திகதி வரை தமிழ் சிங்கள பாடசாலைகள் இயங்கும்

இதேவேளை, முஸ்லிம் பாடசாலைகள் 2015ஆம் ஆண்டு கல்வியாண்டின் முதலாம் தவணைக்காக ஜனவரி 5ஆம் திகதி முதல் ஏப்ரல் 10ஆம் திகதி வரை இயங்கும். இரண்டாம் தவணைக்காக இரண்டு கட்டங்களாக ஏப்ரல் 20ஆம் திகதி முதல் ஜுன் 18ஆம் திகதி வரையும், ஜுலை 21ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 26ஆம் திகதி வரையும் இயங்கும்.

அவ்வாறே, மூன்றாம் தவணைக்காக ஆகஸ்ட் 31ஆம் திகதி முதல் டிசம்பர் 4ஆம் திகதி வரை முஸ்லிம் பாடசாலைகள் இயங்கும் என கல்வி அமைச்சு மேலும் தெரிவிக்கின்றது.

# நீதிமன்ற பதிவாளரின் திருகுதாளம் அம்பலம்

எட்டு கிலோகிராம் நிறையுடைய கஞ்சாவை கடத்திச் சென்றார் என்ற குற்றச்சாட்டில் பண்டாரவளை நீதவான் நீதிமன்ற பதிவாளரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளதாக பொலிஸ் தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது.

பண்டாரவளை, வெலிமடை வீதியில் கஹத்தேவெல விகாரைக்கு அருகில் வைத்து சந்தேகத்துக்கிடமான முச்சக்கரவண்டியை சோதனைக்கு உட்படுத்தியபோதே அவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை 4.45இற்கு இடம்பெற்றுள்ளது. அத்துடன் முச்சக்கரவண்டி சாரதி மற்றும் பதிவாளருடன் சென்ற மற்றுமொருவரையும் கைது செய்துள்ளதாக தெரிவித்த பொலிஸ் தலைமை அலுவலகம் சம்பவம் தொடர்பில் பண்டாரவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளது.

**(19) பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக**

ஆரம்பகாலத்தில் மனிதன் முரசு, தீ போன்றவற்றைப் பயன்படுத்தித் தொலைவில் உள்ளவர்களுக்குத் தகவல் அனுப்பினான். அதன் பின்பு புறா மூலம் தகவல்களைப் பரிமாறினான். அதனைத் தொடர்ந்து கடிதம் மூலமும் தொடர்புகொள்ள ஆரம்பித்தான். அதன் பின்னர் தொலைபேசி வழியாகத் தொடர்புகொண்டான். இன்று நம் வாழ்வோடு கணனியும் இணைந்துவிட்டது

01. புதிதாக மனிதனோடு இணைந்தது எது? ........................................
02. ஆதிகால மனிதன் தகவல் அனுப்புவதற்காக பயன்படுத்தியவைகள் எவை? ........................
03. புறா என்ற சொல்லுக்கான பன்மைச் சொல்லை எழுதுக? ........................................
04. ஆரம்பித்தான் என்ற சொல்லின் எதிர்ச்சொல்லைத் தருக? ........................................
05. நெருப்பு என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லைத் தருக? ........................................

**(20) பின்வரும் சொற்களை வைத்து இடைவெளி நிரப்புக**

(தேங்காய்கள், மரக்கன்றுகள், கிழக்குப், நிறையத், இருவரும் )

01. அமீர், மோகன் .............................. நண்பர்கள்
02. கிணற்றுக்குக் .............................. பக்கம் பார்
03. தோட்டத்தில் நிறைய .............................. உள்ளன
04. .............................. பழுத்து விட்டன
05. கோடையில் மரங்களுக்கு .............................. தண்ணீர் ஊற்ற வேண்டும்

**(21) சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்க**

01. நீர் / செய்ய / விவசாயம் / தேவை
..................................................
02. தொழிலுக்கும் / வந்தனை / உழவுக்கும் / செய்வோம்
..................................................
03. மாடுகளைப் / வயலை / கலப்பையில் / உழுவார்கள் / பூட்டி
..................................................
04. வெட்டுவார்கள் / விளைந்த / நெல் / பின் / அரிவி
..................................................
05. மாரிகாலத்தில் / வேலையை / ஆரம்பிப்பார்கள் / உழவர்கள்
..................................................

**30.11.2014 பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்**

(1) 1. உடல் 2. செம்பொற்குடம் போல 3. சின்னஞ்சிறிய 4. சந்திரன் 5. இது + ஓர்
(02) 1. வாதி 2. குயவன்
(03) 1. வீண்பெருமை 2. முயற்சி பலன் அளிக்கும்
(04) 1. முச்சாணும் ஓடாது 2. படாது படுவர்
(05) 1. திருடி மறைதல் 2. மிகச்சிறப்பு 3. சொல் தவறுதல்
(06) 1. குண்டு 2. கலை
(07) 1. கடவுள் 2. நன்றி 3. துரோணர்
(08) 1. பந்தின் நிறம் என்ன
2. தயவுசெய்து சுத்தமாக இருப்பதற்கு முயற்சிக்கவும்
(09) 1. Let's go to play ground 2. chalk
(10) 1. எனக்கு இப்பாடத்தை சொல்லித்தரவும்
(11) 1.12 2. ஓாபிபால்டர் 3. சிகிரியா

(12) 1.2 2.4 3.1 4.4
5.1 6.3 7.2 8.3 9.3
10.4 11.2 12.1 13.4 14.மத்தள
15.4 16.3 17.2 18.2 19.1 20.1 21.4
(13) ( ------------- )
(14) 1
(15) 9 சதுர cm
(16)
1. சிறியோர் ஆகிய நாம் முதியோரை மதிக்க வேண்டும்.
2. காடுகளை அழிப்பதனால் மழை வீழ்ச்சி குறைவு அடைகின்றது.
(17) 2
(18) 2

பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்



**தரம் - 3 பரீட்சை முன்னோடி- 2014**

பகுதி - I
1 மணி 15 நிமி



# கல்வி முரசு

**(01) பயில்வோம் என்ற பாடத்தினை அடிப்படையாகக் கொண்டு ஒத்தகருத்துச்சொற்களை எழுதுக.**

01. தேன்.............................. 02. பள்ளம் ..............................
03. மக்கள் .............................. 04. நாட்டிலே ..............................

**(02) பின்வரும் சொற்களுக்கான எதிர்கருத்துச் சொற்களை எழுதுக**

01. நாடு .............................. 02. நல்ல ..............................
03. பள்ளம் .............................. 04. போவோம் ..............................

**(03) பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான கருத்தினை தொடர்புபடுத்துக**

| | |
|---|---|
| 01. ஒலி | வெளிச்சம் |
| 02. ஒளி | சத்தம் |
| 03. ஒழி | ஓர் உறுப்பு |
| 04. வால் | மறை |
| 05. வாள் | சீவித்தல் |
| 06. வாழ் | ஓர் ஆயுதம் |

**(04) பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்க**

01. பல / தமிழ்மொழியில் / உள்ளன / சிறந்த / நூல்கள்
..................................................
02. இந்தியாவில் / வாழ்ந்தார் / திருவள்ளுவர் / தமிழ்நாட்டில் / உள்ள
..................................................
03. இளமையிலேயே / நாம் / வேண்டும் / கற்க / கல்வி
..................................................

**(05) பின்வரும் சொற்களை பிரித்து எழுதுக**

01. பாட்டியிடம் .............................. 02. குடியிருக்கும் ..............................
03. வேண்டுமானால் .............................. 04. வைத்திருப்பதை ..............................

**(06) பின்வரும் கதையில் வரும் இடைவெளிகளை நிரப்புக .**

காக்கையாரே! நீ மிகவும் அழகான .............................. உனது கருமையான மேனி .............................. உனது பார்வையும் பிரகாசமானது. நீ பாடினாலும் இனிமைதான். பாடலைக் கேட்க எனக்கு ஆசையாக இருக்கிறது. .............................. பாடுவாயா? என்று கேட்டது காகத்திற்கு நரியின் .............................. புரிந்து விட்டது அது தனது கூட்டில் .............................. யை வைத்து விட்டு வந்தது

**(07) வினாக்களுக்கு விடை தருக**

01. உலகப் பொதுமறை என போற்றப்படும் நூல் எது?
..................................................
02. திருவள்ளுவர் எழுதிய நூல் எது?
..................................................
03. திருக்குறளில் உள்ள குறட்பாக்கள் எத்தனை வரிகளைக் கொண்டவை?
..................................................

04. நாம் இளமையிலே கல்வி கற்க வேண்டும் என போதித்த நூல் எது?

..........................................................................

05. தெய்வப் புலவர் என பெயர் பெற்றவர் யார்?

..........................................................................

(08) பின்வரும் வாக்கியங்களில் இடம்பெறும் எழுவாய் சொற்களை தெரிவு செய்து எழுதுக

01. ஆலமரம் சரிந்து விழுந்தது ....................................................

02. கிளிகள் பழங்களை கொறித்தன ....................................................

03. அதிபர் பாடசாலைக்கு விரைந்தார் ....................................................

04. புனிதா வீட்டுவேலைகளை மெதுவாக முடித்தாள் ....................................................

05. சூரியன் மாலையில் மேற்கில் மறைந்தது ....................................................

(09) பின்வரும் வாக்கியங்கள் சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் அடையாளமிடுக

01. நாய்கள் சத்திமிட்டு குரைத்தது ( )

02. மரம் காற்றில் அசைந்து ஆடின ( )


03. அக்கா ஓடி விளையாடினான் ( )

04. நான் நாளை வந்தேன் ( )

05. முயல்கள் வேகமாக ஓடியது ( )

06. காற்று மெல்ல வீசின ( )

(10) சக்கரங்களில் உள்ள எழுத்தைக் கொண்டு சொல்லாக்கி எழுதுக




01.......................................................

02.......................................................

03.......................................................

04.......................................................

05.......................................................

06.......................................................

07.......................................................

08.......................................................

(11) கீழ்வரும் வாக்கியத்தை பார்த்து உருப்பமைய எழுதுக

01 அழுதபிள்ளை பால் குடிக்கும்

02 .......................................................

03.......................................................

04.......................................................

05.......................................................

(12) பின்வரும் சொற்களுக்கான எதிர்ப்பாற் சொற்களை எழுதுக

01. மாணவன் .............................. 02. தேவி ..............................

03. அரசன் .............................. 04. ஆசிரியை ..............................



05. சீமாட்டி .............................. 06. உத்தமி ..............................

(13) பின்வரும் படத்தை அவதானித்து பொருத்தமான வாக்கியங்களை அமைத்து எழுதுக



01.......................................................

02.......................................................

03.......................................................

04.......................................................

05.......................................................

(14) பின்வரும் சொற்களை சேர்த்து எழுதுக



01. பட்டு + துணி .............................. 02. கல் + பாறை ..............................

03. வயல்+ கரை .............................. 04. கண் + நீர் ..............................

05. மண் + அரிப்பு .............................. 06. பூ + செடி ..............................

07. பல் + உடைந்து.............................. 08. மரம் + வேர் ..............................

(15) பின்வரும் வீதிக்குறியீடுகளுக்குப் பொருத்தமான விளக்கத்தை தெரிவு செய்து எழுதுக

01. 
02. 
03. 
04 

.................... .................... .................... ....................

(பாதசாரிகடவை) , (சிறுவர்கடவை), (வைத்தியசாலை), (பேருந்துதரிப்பிடம்)

(16) அட்டவணையிலுள்ள எழுத்துக்களை ஒழுங்குபடுத்தி சொற்களாக்குக

| | | | | |
|---|---|---|---|---|
| ம் | று | ப | தி | ல் |
| ப | ப் | ரு | பு | ம |
| சா | க | ப் | ம் | லி |
| ல் | பு | பு | ன | கை |

01.......................................................

02.......................................................

03.......................................................

04.......................................................

05.......................................................

(17) காகமும் நரியும் என்ற பாடத்தை அடிப்படையாகக் கொண்டு சொற்களுக்கு ஒத்தகருத்துச் சொற்களை எழுதுக

01. ஊர் .............................. 02. ஆசை ..............................

03. பணம் .............................. 04. வாசம் ..............................

05. மகிழ்ச்சி .............................. 06. பறவை ..............................

07. மேனி .............................. 08. எண்ணியது ..............................

09. பாடல் .............................. 10. தந்திரம் ..............................

(18) எதிர்க்கருத்துச்சொற்களை தருக

01. ஆசை .............................. 02. நாற்றம் ..............................

03. சிரித்தார் .............................. 04. புகழ் ..............................

# தையல் இயந்திரம் கையளிப்பு

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் ஆகியோரினது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து பொது அமைப்புக்களாகிய மாதர் சங்கம் மற்றும் சனசமூக நிலையம், விளையாட்டுக் கழகம் ஆகியவற்றுக்கு தையல் இயந்திரம் விளையாட்டு உபகரணங்கள் உணவு பதனிடலுக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் வடமாகாண சபை எதிர்க்கட்சி தலைவர் சி. தவராஜா, நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சி தலைவர் அ. இரவீந்திரதாசன் ஆகியோரால் வழங்கப்பட்டது. இந் நிகழ்வில் பிரதேச செயலர் செந்தில்நந்தனன், திட்டமிடல் பணிப்பாளர் சுரேந்திரநாதன் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

# டிசம்பர் மாத பரீட்சை அட்டவணை

அரச பரீட்சைத் திணைக்களத்தால் இந்த மாதம் நடைபெறவுள்ள பரீட்சைகளின் விபரம் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளது விபரங்கள் வருமாறு,

| தொடர் இல. | பரீட்சையின் பெயர் | பரீட்சை திகதி/ திகதிகள் | பரீட்சை நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 01 | CIM Examination - December 2014 | 02, 03 | கொழும்பு/கண்டி |
| 02 | மக்கள் வங்கிக்கு முகாமைத்துவப் பயிலுநர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகுதிகாண் பரீட்சை (பகுதி II) – 2014 | 07 | கொழும்பு |
| 03 | I ஆம் தர சுங்க பரிசோதகர்களுக்காக நடைபெறும் இரண்டாவது வினைத் திறன் காண் தடைப் பரீட்சை (புதிய பாடத்திட்டம்) – 2014 (II) | 13 | கொழும்பு |
| 04 | தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளி விபரவியலாளர்களுக்கான முதலாவது வினைத்திறமை தடைகாண் பரீட்சை - 2012(2014) | 14 | கொழும்பு |
| 05 | II ஆம் தர சுங்க பரிசோதகர்களுக்காக நடைபெறும் முதலாவது வினைத் திறன் காண் தடைப் பரீட்சை (பழைய பாடத்திட்டம்) – 2014 (II) | 20 | கொழும்பு |
| 06 | இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2013(2014) | 20, 21 | கொழும்பு |
| 07 | II ஆம் தர உதவி சுங்க அத்தியட்சகர்கள் பதவிக்கு பதவி உயர்த்துவதற்காக நடைபெறும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2014 | 21 | கொழும்பு |
| 08 | II ஆம் தர சுங்க பரிசோதகர்களுக்காக நடைபெறும் இரண்டாவது வினைத திறன் காண் தடைப் பரீட்சை (பழைய பாடத்திட்டம்) – 2014 (II) | 21 | கொழும்பு |
| 09 | தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளி விபர உத்தியோகத்தர் தரம் I இற்கான இரண்டாவது வினைத்திறமை தடைகாண் பரீட்சை - 2012(2014) | 22 | கொழும்பு |
| 10 | ஆரம்ப பிரிவேனா இறுதிப் பரீட்சை - 2014 | 22, 23, 24, 26, 27, 28, 29, 30 | நாடு முழுவதும் |
| 11 | தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளி விபர உத்தியோகத்தர் தரம் II இற்கான முதலாவது வினைத்திறமை தடைகாண் பரீட்சை - 2012(2014) | 23 | கொழும்பு |
| 12 | இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 2 ஆம் வகுப்பின் II ஆம் தர உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடை தாண்டற் பரீட்சை - 2014 | 27 | கொழும்பு |
| 13 | மேல் மாகாண கல்வி அமைச்சின் கீழ் உள்ள பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான பட்டதாரி ஆசிரியர்களை ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை-2014 | 27 | கொழும்பு / கம்பஹா / களுத்துறை |
| 14 | இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை - 2013(2014) | 27, 28 | பேராதெனிய |
| 15 | இஸ்லாமிய சன்மார்க்க அஹதிய்யா, அல்குர்ஆன் பாடசாலை இறுதிச் சான்றிதழ்ப் பரீட்சை - 2013(2014) | 27, 28 | நாடு முழுவதும் |
| 16 | பெருந்தோட்ட தமிழ் மொழிமூல பாடசாலைகளில் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஆசிரிய உதவியாளர்களை ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை - 2014 | 28 | நாடு முழுவதும் |
| 17 | கணக்காய்வு பரீட்சகர் சேவையின் II ஆம் தர அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சை - 2014 | 30 | கொழும்பு |

# சிறப்பாக நடைபெற்றது கவிதை நூல் வெளியீட்டு விழா



(யாழ்ப்பாணம்)

யாழ். இலக்கியக் குவியத்தின் தலைவர் கவிஞர் வேலணையூர் தாஸின் "மழைக்கால குறிப்புக்கள்"கவிதை நூல் வெளியீட்டுவிழா நேற்று முன்தினம் சனிக்கிழமை பி.ப. 3 மணியளவில் யாழ்.திரு மறைக்கலா மன்ற கலைத்தூது கலையகத்தில் இடம்பெற்றது. நிலாந்தன் தலைமையில் நடை பெற்ற இந்நிகழ்வு மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து யாழ்.இலக்கியக் குவியக்கீதத்தை நெடுந்தீவு யோகேஸ் இசைத்தார். அதனைத் தொடர்ந்து கவிஞர் கருணாகரன் நூல் வெளியீட்டுரையை நிகழ்த்தி நூலை வெளியிட்டு வைத்தார். நூலின் முதற்பிரதியை வைத்தியர் க.நவரத்தினம் பெற்றுக்கொண்டார். நூல் மதிப்பீட்டுரையை தி.செல்வமனோகரன், கு.றஜீபன் ஆகியோர் வழங்கினர். தொடர்ந்து ஏற்புரையை நூலாசிரியர் வேலணையூர்தாஸ் வழங்கினார். நிகழ்வின் இறுதியாக யாழ் இலக்கியக் குவியத்தின் செயலாளர் ஜெ.வினோத் நன்றியுரை வழங்கினார்.

இந்நிகழ்வில் மூத்த, இளைய படைப்பாளிகள், இலக்கிய ஆர்வலர்கள், பத்திரிகை நண்பர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (48)

# எயிட்ஸ் (HIV) நோய் தொடர்பாக மாணவர்களுக்கான தகவல் பகிர்வு

யாழ். மாவட்டத்தில் எயிட்ஸ் நோயின் பரம்பலினைக் கருத்திற் கொண்டு உலக எயிட்ஸ் தினமான இன்றைய தினம் (டிசம்பர் 1ஆம்திகதி) ஒவ்வொரு பாடசாலைகளிலும் காலைக் கூட்டத்தின் போது எயிட்ஸ் நோய் தொடர்பான தகவல்களை வழங்கும் வகையில் எயிட்ஸ் நோய் தொடர்பான செய்தியொன்று யாழ்.மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் வழங்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் உலக எயிட்ஸ் தினமானது வருடாவருடம் டிசம்பர் மாதம் 1ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இத்தினத்தில் எயிட்ஸ் நோய் பற்றிய அறிவை மாணவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டிய கட்டாய நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

இதுவரைகாலமும் எயிட்ஸ் நோயாளி என இனங்காணப்பட்டவர்கள் HIV கிருமித் தொற்றினை வெளிநாட்டிலேயே பெற்றவர்களாகக் காணப்பட்டார்கள். ஆனால் தற்பொழுது அந் நிலைமை மாறி இனங்காணப்படும் எயிட்ஸ் நோயாளிகள் உள்நாட்டிலேயே HIV கிருமித் தொற்றினை பெற்ற வர்களாகக் காணப்படுகின்றார்கள். இந் நிலைமை ஓர் ஆபத்தான நிலைமையாகும்.

**எயிட்ஸ் நோய் தொடர்பான சில தகவல்கள்.**

1.எயிட்ஸ் என்பது பெற்ற நீர்ப்பீடனக் குறை பாட்டுச் சிக்கல் (ACQUIRED IMMUNO DEFICI ENCY SYND RO ME) எனப் பொருள்படும், எயிட்ஸ் என்பது HIV எனப்படும் ஒருவகை வைரஸ் கிருமியினால் ஏற்படும் நோயாகும், HIV கிருமித்தொற்றுக்கு உள் ளான ஒருவர் பல வருடங்கள் வரை நோய் அறி குறிகளை வெளிக்காட்டாமல் பலருக்கு நோய்க்கிருமியை பரப்பிக் கொண் டிருப்பார், HIV




கிருமி தொற்றி எயிட்ஸ் நோய்க்கான அறிகுறிகள் தோன்ற பல வருடங்கள் எடுக்கும். இது வளர்ந்தவர்களில் 8 தொடக்கம் 12 வருடங்களாகவும், சிறிய வர்களில் 2 தொடக்கம் 5 வருடங்களாகவும் இருக்கும், HIV கிருமியானது மனிதனது நோயெதிர்ப்புச் செயற்பாட் டிற்கு பொறுப்பாகவுள்ள நிணநீர்த் தொகுதி யினைத் தாக்கி நோயெதிர்ப்புச் சக்தியினை அழித்து ஏனைய தொற்று நோய்களை உண்டாக்குகின்றது. உடலால் அவற்றை எதிர்க்கமுடியா திருக்கும்.

**HIV** கிருமியானது ஒருவரில் இருந்து இன்னொருவருக்கு தொற்றக் கூடிய சந்தர்ப்பங்களாவன, பாதுகாப்பற்ற ஒழுக்கம் மீறிய பாலியல் தொடர்பு மூலமாக, HIV தொற்றுள்ள தாயிலிருந்து அவரின் வயிற்றில் வளரும் குழந்தைக்கு, வேறொருவருக்குப் பாவித்த அல்லது தொற்று நீக்கம் செய்யாத சிலவகை உபகரணங்களைப் பாவிப்பதனால். உதாரணமாக மருந்தேற்றும் ஊசி, சவர அலகு போன்றன, தொற்றுள்ளதா எனப் பரிசோதனை செய்யப்படாத இரத்தத்தை ஏற்றுவதனால் அல்லது உறுப்புக்களை மாற்றுவதனால், போதைப்பொருள் பாவனையாளர்களிடையே, **HIV** கிருமியானது ஒருவரில் இருந்து இன்னொருவருக்கு தொற்றுதலடையாத சந்தர்ப்பங்களாவன-

கை குலுக்கு வதனால் அல்லது தொடுவதனால், சாதாரணமாகக் கட்டியணைப்பதனால், ஒன்றாகச் சேர்ந்து வாழ்வதனால், ஒன்றாகச் சேர்ந்து விளையாடுவதனால், ஒரே பாவனைப் பொருட்களைப் பயன் படுத்துவதனால், உடைகள், துவாய்கள் என்ப வற்றைப் பரிமாறிக் கொள்வ தனால்,ஒரே மலசல கூட இருக்கையைப் பாவிப்பதனால்.

தும்மல் இருமல் மூலமாக, நுளம்பு, மூட்டைப் பூச்சி மூலமாக, ஒன்றாக நீந்துதல் அல்லது நீராடுதல் போன்றன வாகும்

எமக்கு ஏற்படுகின்ற பெரும்பாலான சுகாதாரப் பிரச்சினைகள் நடத்தை சார்ந்தவையாகவே காணப்படுகின்றன. இவ் எயிட்ஸ் எனப்படும் பாலியல் சார்ந்த நோயும் கூட ஒரு நடத்தை சார்ந்த சுகாதாரப் பிரச்சினையாகவே காணப்படுகின்றது. ஒருவரின் பிறழ்வான நடத்தைகளே இந் நோய் ஏற்படக் காரணமாக அமைகின்றது.

எனவே நமது பிறழ்வான நடத்தைகள் எவ்வாறு இந் நோய் தொற்றுவதில் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதனை விளங்கிக் கொண்டு செயற்பட வேண்டும்.

எனவே பாடசாலை மாணவர்கள் அனுகூலமான நடத்தைகளையும், பழக்க வழக்கங்களையும் மேலும் விருத்தி செய்துகொள்ள வேண்டும். அதாவது 10 வாழ்க்கைத் தேர்ச்சிகளையும் விருத்திசெய்துகொள்ள வேண்டும்.

## சர்வதேச எயிட்ஸ் தினம் இன்றாகும்

**தகவல்**
**யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை**

உலகச் செய்திகள்

வாள், வெடி பொருட்களால்

# சீனாவில் தீவிரவாதத் தாக்குதல் 15 பேர் பலி; 14 பேர் காயம்

(பீஜிங்)

சீனாவின் ஜின்ஜியாங் மாகாணத்தில் பொது இடத்தில் புகுந்த தீவிரவாதிகள் வாளால் வெட்டியும், வெடிபொருட்களை வீசியும் திடீர் தாக்குதல் நடத்தினர். இதில், பொதுமக்கள் உட்பட 15 பேர் பலியாயினர். 14 பேர் படுகாயமடைந்தனர்.

கடந்த ஜூலை மாதம் சாசே நகரில் புகுந்த தீவிரவாதிகள் வாள் மற்றும் கோடாரியால் சரமாரியாக வெட்டியதில் 37 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

இதில் பிடிபட்ட 27 தீவிரவாதிகளுக்கு மரண தண்டனை விதித்து உள்ளூர் நீதிமன்றம் கடந்த மாதம் தீர்ப்பளித்தது. இந்நிலையில், நேற்று முன்தினம் உள்ளூர் நேரப்படி மதியம் 1.30 மணிக்கு சாசே கவுன்டி நகரத்தின் பரபரப்பான பகுதியில் இரு சக்கர வாகனத்தில் வந்த தீவிரவாதிகள், வாள் மற்றும் வெடிபொருட்களை கொண்டு தாக்குதல் நடத்தினர்.




இதில் பொதுமக்களில் 4 பேர் பலியாயினர். 14 பேர் படுகாயமடைந்தனர். பொலிஸ் விரைந்து வந்து, பதில் தாக்குதல் நடத்தி 11 தீவிரவாதிகளையும் கொன்றதாக அந்நாட்டு அரசு செய்தி நிறுவனமான ஜின்ஹுவா தகவல் வெளியிட்டுள்ளது. சம்பவம் நடந்த பகுதியில் ஏராளமான வெடிபொருட்களும், வாள்களும், கோடரிகளும் மீட்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

## இராணுவத் தளபதியாக ஐஸன்கோட் தெரிவு



இஸ்ரேல் நாட்டு இராணுவத்தின் புதிய தலைமைத் தளபதியாக ஜெனரல் காடி ஐஸன்கோட் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அந்நாட்டின் தற்போதைய இராணுவத் தலைமைத் தளபதி பென்னி கான்ட்ஸ் பெப்ரவரி மாதம் பணி ஓய்வு பெறவுள்ளார்.


இதனைத் தொடர்ந்து, அடுத்த இர்ராணுவத் தலைமைத் தளபதியைத் தேர்வு செய்யும் பணிகள் கடந்த சில நாள்களாக தீவிரமாக நடைபெற்று வந்தன.

இந்நிலையில், புதிய இராணுவத் தலைமைத் தளபதியாக ஜெனரல் காடி ஐஸன்கோட் தேர்ந்தெடுக்க பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹூ முடிவு செய்தார்.

இதைத் தொடர்ந்து, பிரதமர் நெதன்யாஹுவை, மேஜர் ஜெனரல் காடி ஐஸன்கோட்டை கடந்த வெள்ளிக்கிழமை இரவு சந்தித்துப் பேசினார்.

தலைமைத் தளபதி நியமனம் குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு ஓரிரு நாட்களில் வெளியாகும் என அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## 10 இலட்சம் நாணயங்களால் பிரமிட் அமைத்து சாதனை



லித்வேனியா நாட்டு வாலிபர் ஒருவர் 10 இலட்சம் லிட்டாஸ் நாணயங்களை வைத்து பிரமிடு அமைத்து உலக சாதனை படைத்துள்ளார்.

லித்வேனியாவில் எதிர்வரும் ஜனவரி 1ஆம் திகதி முதல் யூரோ பயன்படுத்தப்பட உள்ளதால், அந்நாட்டின் நாணயமான லிட்டாஸ் இனிமேல் பயன்படுத்தப்படமாட்டாது.

இந்நிலையில் 26 வயது வாலிபர் டாமஸ் ஜோகுபாவ்ஸ்கிஸ், தமது நாட்டின் பணம் உலக அளவில் நினைவில் இருக்க வேண்டும் என்று லிட்டாஸ் நாணயங்களை கொண்டு பெரிய பிரமிட்டை உருவாக்க எண்ணியுள்ளார். இதற்காக ஒரு மில்லியன் நாணயங்களை சேகரித்து ஒருவாரம் செலவழித்து 1 மீற்றர் உயரமுள்ள பிரமிட்டை உருவாக்கி சாதனை படைத்துள்ளார்.

## மரத்தை திருமணம் செய்த விநோத மனிதர்



பெரு நாட்டை சேர்ந்த நபர் ஒருவர் மரத்தை திருமணம் செய்து கொண்ட சம்பவம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

பெரு நாட்டை சேர்ந்த சுற்றுச்சூழல் ஆர்வலர் ரிச்சர்ட் டோரஸ் (Richard Torres) கொலம்பிய நாட்டின் பொகோடாவில் (Bogota) உள்ள தேசிய பூங்காவில் உள்ள மரம் ஒன்றை, தனது நண்பர்கள் கூட்டத்துடன் சென்று திருமணம் செய்து கொண்டார்.

திருமண அடையாளமாக மணமகள் மரத்திற்கு மணமகன் முத்தமிட்டபோது, கூடி இருந்தவர்கள் கை தட்டி வாழ்த்து தெரிவித்துள்ளனர். மேலும் திருமணத்திற்கு பிறகு மரத்திற்கு கீழே சிறிய பழ விருந்தும் நடைபெற்றது.

இதுகுறித்து அவர் கூறுகையில், உலகம் முழுவதும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளை மனிதன் புரிந்து கொள்ள வேண்டும். விழிப்புணர்வு ஏற்பட வேண்டும் என்பதற்கே இத்திருமணம் நடந்தது என்றும், ஆயுதங்கள் மூலம் புரட்சி செய்வதை விட்டு மரங்கள் நட்டு புரட்சி செய்யுங்கள் எனவும் கூறியுள்ளார்.

## காங்கிரஸை பலப்படுத்துவேன்

### நடிகை குஷ்பு தெரிவிப்பு




(புதுடில்லி)

காங்கிரஸ் கட்சியை பலப்படுத்த வீதிவீதியாக சென்று மக்களை சந்திப்பேன் என்று அக்கட்சியில் இணைந்துள்ள நடிகை குஷ்பு கூறியுள்ளார்.

தி.மு.க.வில் இருந்து விலகியிருந்த குஷ்பு, கடந்த புதன்கிழமை புல்லியில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியை சந்தித்து அக்கட்சியில் இணைந்தார். மறுநாள் காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தியையும் சந்தித்துப் பேசினார். நேற்று முன்தினம் சத்தியமூர்த்தி பவனுக்கு வந்த குஷ்டி நிருபர்களிடம் கூறியதாவது,

காங்கிரஸ் கட்சியில் சேர்ந்திருப்பது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. சொந்த வீட்டில் இருப்பதுபோல உணர்கிறேன். எனது சொந்த ஊர் மும்பை. அப்போது இந்திராகாந்தி, சோனியா காந்தி போன்ற தலைவர்களைப் பார்த்துதான் வளர்ந்தேன். 5 ஆண்டுக்கு முன்பு வேறொரு கட்சியில் இருந்தேன். அதற்கு முன்பாகவே காங்கிரஸைப் பற்றி பேசியிருக்கிறேன். இடையில் திசை மாறி போய்விட்டேன். இப்போது மீண்டும் காங்கிரஸ் பக்கம் வந்துள்ளேன்.

காங்கிரஸ் கட்சி, இலங்கைத் தமிழர்களுக்கு எதிரானது அல்ல. அது தீவிரவாதிகளுக்கு எதிரான இயக்கம். மேலிடம் உத்தரவு பிறப்பிக்கும்போது, தமிழக மீனவர் பிரச்சினைக்காக குரல் கொடுக்கவும் தயாராக உள்ளேன் என்றார்.

## 39,083 வைர கற்கள் பதித்த காலணி

(டுபாய்)



டுபாய் உலக வர்த்தக மையத்தில் எதிர்வரும் 3ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை சர்வதேச நகை வாரம் 2014 என்ற பெயரில் சர்வதேச நகை கண்காட்சி நடைபெறவுள்ளது இதில் உலக அளவில் ஏராளமான நாடுகள் பங்கேற்கவுள்ளன.

இதில் உலகெங்கும் உள்ள நகை தயாரிப்பாளர்கள் தங்களின் அழகிய ஆபரண படைப்புகளை இங்கு பொதுமக்களின் பார்வைக்கு வைத்து விற்பனையை அதிகரிக்கவுள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் ஆட்டொ ஜுவல்ஸ் சார்பில் 39,083 வைர கற்கள் பொருத்தப்பட்ட உலகின் விலை மதிப்புமிக்க கண்ணை பறிக்கும் ஆடம்பர காலணி பார்வைக்கு வைத்து விற்பனை செய்யப்ப உள்ளது.இதன் இந்திய மதிப்பு 19 கோடி ரூபா அதிகமாகும்.

## முடிவுக்கு வந்தது ஜெயாவின் வழக்கு

(சென்னை)

அ.தி.மு.க. பொதுச் செயலாளரும், முன்னாள் முதல்வருமான ஜெயலலிதா, அவரது தோழி சசிகலா ஆகியோர் மீது தொடரப்பட்ட வருமான வரி தொடர்பான வழக்கு முடிவுக்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஓகஸ்ட் மாதம் நடை பெற்ற வழக்கு விசாரணையின்போது வருமான வரிக்கணக்கு கட்டாததற்கான அபராத தொகையை செலுத்த தயாராக இருப்பதாக வருமான வரித்துறை இயக்குனர் ஜெனரலுக்கு ஜெயலலிதா, சசிகலா சார்பில் மனு கொடுக்கப்பட்டது.

இந்த மனுவை வருமான வரித்துறை அதிகாரிகள் விசாரித்தனர்.

இந்த நிலையில் வருமான வரித்துறை சார்பில் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டது.

அதில் ஜெயலலிதா, சசிகலா ஆகியோர் தாக்கல் செய்திருந்த சமரச மனுவை ஏற்பதாகவும் வருமான வரி கட்டாமல் விட்டதற்காக வருமான வரித்துறை விதித்த அபராத தொகையை செலுத்தியதாகவும் கூறப்படுகிறது.

இதனால் 18 வருடமாக நடந்து வந்த வழக்கு முடிவுக்கு வருகிறது.



# கூட்டமைப்பின் நிர்வாகத்திலுள்ள சபைகள் மக்களுக்கு சேவையாற்றாது நித்திரை

## பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு



(பருத்தித்துறை)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிர்வாகத்திலுள்ள சபைகள் மக்களுக்கான சேவைகளை மேற்கொள்ளாமல் உள்ளமை அவர்களது உறுப்பினர்களே ஏற்றுக் கொண்டுள்ள விடயம். எனவே அத்தேவைகளை மத்திய அரசாங்கம் பொறுப்புடன் நிறைவேற்றி வருகின்றது. அதன் ஒரு செயற்பாடாகவே கிராமத்திற்கு ஒரு மில்லியன் ரூபா வேலைத் திட்டத்தின் நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்படுகிறது என பருத்தித்துறை பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவரும், ஈ.பி.டி.பி.யின் வடமராட்சி அமைப்பாளருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

கரவெட்டி, யாக்கரை முன்பள்ளி விளையாட்டு உபகரணம் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் சமாதான நீதவான் ஜெகதீஸ்வரன் தலைமையில் இடம் பெற்ற போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக குடாநாட்டில் மழை பெய்து வருகின்றது. குடிமனைகளுக்குள் மழை வெள்ளம் புகுந்துள்ளது. மழை வெள்ளத்தை வெளியேற்ற வேண்டிய கடமையும், பொறுப்பும் உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகத்தைச் சார்ந்தது. ஆனால் ஏதாவது முயற்சிகள் இடம்பெறுகின்றனவா? என்று பார்த்தால் எதுவுமே இல்லை. மாகாண சபைக்கு மத்திய அரசால் ஒதுக்கப்பட்ட நிதியில் மாகாண மந்திரிகளுக்கான சொகுசு வாகனத்திற்கு செலவழிக்கப்பட்ட நிதியுடன் சேர்த்து 31 வீதமான நிதிகளே இதுவரை செலவு செய்யப்பட்டுள்ளன. 69 வீதமான நிதி செலவு செய்யப்படாமல் திறைசேரிக்கு திரும்பி உள்ளன.

ஆனால் மாகாணசபை நிர்வாகமோ தங்களுக்கு நிதி இல்லை என மக்களுக்குப் பொய் கூறி வருகின்றார்கள். உண்மையில் மாகாண சபையிடமோ உள்ளூராட்சி மன்றத்திடமோ மக்களுக்கான அபிவிருத்திக்கான தீர்க்கமான திட்டங்களோ, தீர்மானங்களோ ஆர்வமோ இல்லை என்பதே வெளிப்படையான உண்மை. எனவே அத்தேவைகளை மத்திய அரசாங்கம் பொறுப்புடன் நிறைவேற்றி வருகின்றது என்றார்.

# யாழ்.சிறைக் கைதிகள் எயிட்ஸ் விழிப்புணர்வு ஊர்வலம்



(யாழ்ப்பாணம்)

சர்வதேச எயிட்ஸ் தினத்தினை முன்னிட்டு, யாழ். சிறைச்சாலை கைதிகளினால் எயிட்ஸ் தின ஊர்வலம் நேற்று நடைபெற்றது.

யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ்.பி. பெரேரா தலைமையில், யாழ். சிறைச்சாலை கைதிகள் யாழ். சிறைச்சாலையில் இருந்து இந்தப் பேரணியினை ஆரம்பித்து பிரதான வீதி வழியாக சத்திரத்து சந்தி சென்று அங்கிருந்து, யாழ். பஸ் நிலையம் வரை சென்று அங்கிருந்து, யாழ். ஆஸ்பத்திரி வீதி வழியாக சிறைச்சாலையைச் சென்றடைந்தது.

யாழ். மாவட்டத்தில் தற்போது எயிட்ஸ் நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ள நிலையில், பாடசாலை மாணவர்கள் மற்றும் சிறுவர்களை எயிட்ஸ் நோயில் இருந்து, பாதுகாத்துக் கொள்ளும் நோக்கத்துடன், இந்தப் பேரணி நடைபெற்றது. (25)

# ‘என் எழுத்தாயுதம்’ நூல் அறிமுக விழா

மூத்த ஊடகவியலாளர் ந. வித்தியாதரன் எழுதிய ‘என் எழுத்தாயுதம்’ (ஒரு பத்திரிகையாளனின் பட்டறிவுப் பகிர்வு) நூல் அறிமுக விழா நேற்று யாழ்ப்பாணம் இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் பிற்பகல் 4.30 மணிக்கு இடம்பெற்றது.

திசைகாட்டி குழுமத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற இந்நிகழ்விற்கு உதயன் நாளிதழின் பிரதம ஆசிரியர் ம.வ. கானமயில்நாதன் தலைமை தாங்கினார்.

வாழ்த்துரைகளை கொழும்பு மாநகர சபை உறுப்பினர் சி.பாஸ்கரா, யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார், வடமாகாண சபை உறுப்பினர் சித்தார்த்தன், ரெலோ இயக்கத்தின் தலைவர் அடைக்கலநாதன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா ஆகியோர் வழங்கினர்.

நூல் மதிப்புரையை கவிஞர் சோ.பத்மநாதன் வழங்கினார். ஆய்வுரைகளை அரசியல் பத்தி எழுத்தாளர் ஆ.யசீந்திரா, மூத்த ஊடகவியலாளர் அ.நிக்ஷன் ஆகியோர் வழங்கினர்.

## ஜனாதிபதி...

தனது முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களே நான் உங்களை தனிப்பட்ட ரீதியில் எதிர்க்க வில்லை. உங்கள் குடும்பத்தை தனிப்பட்ட ரீதியில் எதிர்க்க வில்லை.

நாட்டில் அதிகரித்துள்ள இலஞ்சம், ஊழல், வீண்விரயம், நிறைவேற்று அதிகாரம் மற்றும் குடும்ப ஆட்சி என்பவற்றையே நான் எதிர்க்கின்றேன்.

மகிந்த ராஜபக்ஷ நாட்டில் உள்ள சகல அரசியல் கட்சிகளையும் அழிக்க தயாராகி வருகிறார். அவர் மூன்றாவது முறையாக ஆட்சிக்கு வந்தால், நாட்டில் உள்ள சகல அரசியல் கட்சிகளையும் தரைமட்டமாக்கி விடுவார்.

நான் அனைத்தையும் அறிந்திருக்கின்றேன். எனக்கு தெரிந்த விடயங்களை நான் எதிர்காலத்தில் கூறுகிறேன்.

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வைத்துக்கொண்டு அரசாங்கம் நாட்டிற்கு என்ன செய்தது.?

விவசாயிகளுக்கு ஓய்வூதியத்திட்டத்தை முன்னெடுப்பதாக உறுதியளித்திருக்கிறேன். தான் பதவிக்கு வந்ததும் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள் கடன்களை இரத்துச்செய்வேன்.

அரசாங்கத்திலிருந்து தான் விலகியதன் காரணமாக ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரப் பொறிமுறை பாதிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையாக பதவிக்கு வந்தால் அவர் நிச்சயமாக சர்வாதிகாரியாகவே விளங்குவார்.

விடுதலைப்புலிகள் என்னைக் கொலைசெய்ய முயன்றனர் ஆனால் தற்போது என்னை அரசாங்கம் புலி என்கிறது.

நான் நாட்டிற்காக உயிரைத் தியாகம் செய்யத் தயாராகவுள்ளேன், பதவிக்குவந்தால், எவரையும் பழிவாங்காமல் கௌரவமாக நடத்துவேன், என்றும் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க, கருஜயசூரிய, சஜித் பிரேமதாச, அத்துரலிய ரத்னதேரர் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

## அமைச்சர்....

ரீதியாக விலகிக் கொள்வ தாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தனது பதவி விலகல் முடிவுக்கு அவர் சில காரணங் களையும் முன்வைத்துள்ளார்.

நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான தன்னால், அங்கு தேவையானதை நடைமுறைப்படுத்த முடியவில்லை என்றும், தனக்குப் போதிய நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படவில்லை என்றும், அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நிறைவேற்று அதிகாரத்தை இல்லாதொழிப்பதற்காக பணியாற்றுவோருடன் தான் இணைந்து கொள்வதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

ஐ.தே.க.வின் முன்னாள் தலைவர் காமினி திசநாயக்க வின் மகனான நவீன் திசநாயக்க, ஐ.தே.க். சிரேஷ்ட தலை வர்களில் ஒருவரான கருஜெயசூரியவின் மருமகன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வெள்ளம்...

மாறும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வீடுகளைச் சென்று பார்வையிட மறுத்த மாவை சேனாதிராசா பின்னர் வந்து பார்வையிடுவதாகக் கூறிச் சென்றுள்ளார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை உடனடியாக வந்து பார்வையிடாது வெள்ளம் வடிந்த பின்பு வந்து பார்வையிட்டு என்ன பயன்? என பாதிக்கப்பட்ட மக்கள் நேற்றுத் தெரிவித்தனர். (116)

## மைத்திரியை...

னவர். ஆனால் மைத்திரிபால சிறிசேன அவ்வளவாக அறியப்படாதவர்.

இந்தியாவின் தலைமை புலனாய்வு அதிகாரியும், பாதுகாப்பு நிபுணருமான அஜித் டோவல், மைத்திரிபால சிறிசேனவின் ஆளுமையைத் தெரிந்து கொள்ளும் முயற்சியில் நிச்சயமாக ஈடுபடுவார்.

ராஜபக்ஷவின் அரசாங்கம் பொருளாதார மற்றும் மூலோபாய ரீதியாக பீஜிங்கை நோக்கிச் சார்ந்துள்ள நிலையில், இந்திய - இலங்கை உறவுகள் தொடர்பாக மைத்திரிபால சிறி சேன மற்றும் சந்திரிகா குமாரதுங்கவின் நிலைப்பாடுகளையும் அஜித் டோவல் அறிந்து கொள்ளவுள்ளார்.

மைத்திரிபால சிறிசேனவின் கீழ் கொழும்பு எவ்வாறு வேறுபட்ட வகையில் செயற்படும் என்பதையும் அவர் அறிந்து கொள்ளும் முயற்சியில் ஈடுபடுவார்.

மேலும், தமிழ்பேசும் மக்கள் அதிகம் வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு கூடுதல் அதிகாரப்பகிர்வை வழங்கும் வகையில், 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் மைத்திரிபால சிறிசேன எந்தளவுக்கு முயற்சிகளை மேற்கொள்வார் என்பதை அறிந்து கொள்வதிலும் அஜித் டோவல் ஆர்வம் காட்டுவார் என்றும் இந்தியன் எக்ஸ்பிரஸ் மேலும் தெரிவித்துள்ளது.

## எவர் வந்தாலும்...

கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

முதுகெலும்பு அற்ற சிலரை தலைவர்களாக்கும் தேவை, சில வெளிநாட்டுச் சக்திகளுக்கு ஏற்பட்டுள்ளது.

அவர்கள் அடிக்கும் தாளத்துக்கேற்ப ஆடுபவர்களை நியமிக்க வேண்டும் என்பதே அந்தச் சக்திகளின் நோக்கமாகும்.

இருப்பினும், எமது மக்கள் அவ்வாறானவர்களுக்கு இடமளிப்பதில்லை பேய்க்கு பயந்தவர்கள், மயானத்தில் வீடு அமைக்கக் கூடாது என அவர்களுக்கு நான் சொல்ல விரும்புகின்றேன் என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

## புலமைப்பரிசில்...

மணித்தியாலத்திற்குரியது எனவும் அவர் கூறியுள்ளார்.

இதற்கமைய வினாத்தாள் தயாரிப்பு தொடர்பில் ஆசிரியர்களைத் தெளிவுபடுத்தும் நடவடிக்கை அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தேசிய கல்வி ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் லக்ஷ்மன் ஜெயதிலக மேலும் தெரிவித்துள்ளார்.

## அன்னப்பறவை...

பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டு பொது வேட்பாளராக போட்டியிட்ட சரத் பொன்சேகா குறித்த கட்சியின் கீழ் ‘அன்னப் பறவை’ சின்னத்தில் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன ‘எங்கள் தேசிய முன்னணி’ (Our National Front) கட்சியின் கீழ் தொலைபேசி சின்னத்தில் போட்டியிட உள்ளதாக தகவல்கள் வெளியான போதும், எதிர்க்கட்சித் தலைவர்கள் அதற்கு விருப்பம் தெரிவிக்காத காரணத்தினால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## நிறைவேற்று...

தேர்தல் ஒன்றின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவர். இது இவ்வாறிருக்கையில், அதிக அதிகாரத்தை வழங்கத் தகுதியானவர் முழு நாட்டினாலும் தெரிவு செய்யப்படும் ஒருவரா? அல்லது ஒரு பிரதேசத்தை மாத்திரம் பிரதிநிதித் துவப்படுத்தி நாடாளுமன்றத்துக்கு வரும் ஒருவரா? எனவும் அவர் வினாத்தொடுத்துள்ளார். நிச்சயமாக பெரும்பான்மை மக்களினால் தெரிவு செய்யப்படும் ஒருவரே இதற்குப் பொருத்தமானவர். இதனால், ஜனாதிபதி முறைமையை பிரதமர் முறைக்கு மாற்றுவது காத்திரமான தீர்வாக கருத முடியாது எனவும் கலாநிதி தயான் ஜயதிலக்க மேலும் கூறியுள்ளார்.

# ஜனாதிபதி - முஸ்லிம் காங்கிரஸ் அலரிமாளிகையில் சந்திப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்களுக்கும் இடையில் முக்கிய சந்திப்பு ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

வரும் ஜனவரி மாதம் நடக்கவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவை உறுதிப்படுத்திக் கொளளும் நோக்கில், நேற்று முன்தினம் மாலை அலரி மாளிகையில் இந்தச் சந்திப்பு நடந்துள்ளது.

அமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம், கட்சியின் செயலாளரும் எம்.பி.யுமான ஹசன் அலி உள்ளிட்டோர் அடங்கிய குழுவினரை, அமைச்சர்கள் பசில ராஜபக்ஷ, அனுர பிரியதர்சன யாப்பா ஆகியோருடன் இணைந்து ஜனாதிபதி சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பின்போது, முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், கிழக்கு மாகாண சபை குறித்த கவலைகள் மற்றும் ஏனைய அரசியல் விவகாரங்கள் குறித்து விரிவாகப் பேசப்பட்டதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அடுத்த கட்டம் குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீடம் முடிவு செய்த பின்னர், அரசாங்கத் தரப்புக் குழுவுடன் தொடர்ந்து பேசவும் இணக்கம் காணப்பட்டுள்ளதாக முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

# பேச்சை கேட்கமறுக்கும் ஜனாதிபதி அழுதுகொண்டு கூறிய ஜனக பண்டார

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எதனோல்காரர்களுக்கும் ஹெரோயின் காரர்களுக்கும் அடிமைப்பட்டுள்ளதாக காணி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.

கலேவெல ரி.பீ.தென்னக்கோன் மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

நான் சுத்தமான இலங்கையன். எனக்கு நடந்த அநியாயங்களை நான் ஜனாதிபதியிடம் கூறியுள்ளேன். நாமல் மகனிடம் தம்புள்ளையில் வைத்தே இதனைக் கூறினேன். அவர்கள் எவரும் எனது பேச்சை கணக்கில் எடுக்கவில்லை. எனது தந்தை கட்டியெழுப்பிய, நாம் போஷித்து வளர்த்த இந்தக் கட்சிக்கு நடக்கும் விடயங்களை அவர்கள் நம்பத் தயாரில்லை.

நான் பழைய பொலிஸ்காரன். எனக்கு அந்தப் பகுதியும் தெரியும். இன்னுமொரு பக்கமும் இருக்கின்றது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை எதிர்காலத்தில் யாரும் அடிமைப்படுத்திக் கொள்ள விடமாட்டேன். கட்சியை சரிசெய்து கொண்டு தான் தேர்தலொன்றுக்குச் சென்றிருக்க வேண்டும். இது எனது நிலைப்பாடு எனவும் அவர் கூறியுள்ளார்.

இவர் தனது உரையின் போது சுமார் ஐந்து நிமிடங்கள் அழுதுகொண்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

## இணையத்தள நுழைவிசைவு திட்டம்

# இந்தியாவின் புறக்கணிப்பு கவலையடையும் இலங்கை

(கொழும்பு)

இந்திய அரசாங்கத்தினால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இணையத்தள நுழைவிசைவு திட்டத்தில் இலங்கை உள்ளடக்கப்படாதது குறித்து, இலங்கை வெளிவிவகார அமைச்சு கவலை வெளியிட்டுள்ளது.

இந்திய அரசாங்கம் கடந்த வியாழக்கிழமை முதல், 43 நாடுகளின் குடிமக்களுக்கு இணையத்தள நுழைவிசைவு முறையை அறிமுகப்படுத்தியுள்ளது.

62 டொலர் கட்டணத்தைச் செலுத்தி, 30 நாட்களுக்கான இந்த நுழைவிசாவை இணையத்தளம் மூலம் பெறமுடியும்.

இந்தியாவின் சென்னை உள்ளிட்ட 9 விமான நிலையங்களின் ஊடாக இந்த நுழைவிசைவுடன் இந்தியாவுக்குள் நுழைய முடியும்.

இதில் அமெரிக்கா, அவுஸ்ரேலியா, ஜப்பான், இஸ்ரேல், ஜேர்மனி, சிங்கப்பூர் உள்ளிட்ட 43 நாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

எனினும், இலங்கை, ஆப்கானிஸ்தான், சோமாலியா, ஈராக், பாகிஸ்தான் உள்ளிட்ட 8 நாடுகளின் குடிமக்களுக்கு இந்த நுழைவிசைவு வழங்கும் திட்டம் பரிசீலிக்கப்படாது என்று இந்தியா ஏற்கனவே அறிவித்திருந்தது.

இந்தநிலையில் இலங்கையை இந்த இணையத்தள நுழைவிசைவு திட்டத்தில் உள்ளடக்கப்படாதது குறித்து இலங்கை வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்தியாவிலுள்ள இந்த நுழைவிசைவு வழங்கப்பட்டால் பௌத்த ஆலயங்களுக்குச் செல்லும் பக்தர்களுக்கு வசதியாக இருக்கும்.

இந்தியா இந்த திட்டத்தில் இலங்கையை புறக்கணித்திருந்தாலும், இந்தியர்களுக்கு இலங்கை தொடர்ந்தும் வருகை நுழைவிசைவை வழங்கும் என்று வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# மைத்திரியின் 100 நாள் திட்டம் நம்ப மறுக்கிறது ஜே.வி.பி.

மைத்திரிபால சிறிசேன நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இரத்து செய்வார் என்பதில் நூறு வீத நம்பிக்கை கிடையாது என ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

தொலைக்காட்சி அரசியல் விவாதமொன்றில் பங்கேற்ற போது ஜே.வி.பி. பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் இதனைத் தெரிவித்துள்ளார். நிறைவேற்று அதிகாரம் இரத்து செய்யப்படும் என உறுதிமொழிகள் அளிக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களிலும் இவ்வாறான உறுதிமொழிகள் அளிக்கப்பட்டிருந்த போதிலும் அவை நிறைவேற்றப்பட்டதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். இதன் காரணமாகவே மைத்திரிபால சிறிசேனவிற்கு நேரடியாக ஆதரவளிக்க ஜே.வி.பி. தயங்குவதாகத் தெரிவித்துள்ளார்.

# ஆணைக்குழு பரிந்துரை அமுல்; மைத்திரியுடன் முரண்படும் சம்பிக்க



(கொழும்பு)

தாம் ஆட்சிக்கு வந்தால் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்தப் போவதாக, எதிரணியின் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேன கூறியிருப்பது குறித்து, ஜாதிக ஹெல உறுமய அதிருப்தி வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க,

தாம் தேர்தலில் வெற்றி பெற்றால், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தப் போவதாக, மைத்திரிபால சிறிசேன வெளியிட்டுள்ள கருத்துடன் உடன்பட முடியாது.

நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நாம் முற்றாக எதிர்க்கிறோம் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

உள்நாட்டில் பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்துவதற்கு நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்தப் போவதாக மைத்திரிபால சிறிசேன கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மைத்திரிக்கு சரத் ஆதரவு?

ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா, பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்க்கட்சியின் பல கட்சிகள் இன்று மைத்திரிபால சிறிசேனவுடன் ஒப்பந்தமொன்றை கைச்சாத்திடவுள்ளன.

இந்த நிகழ்வில் சரத் பொன்சேகாவும் பங்கேற்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க, ஜாதிக ஹெல உறுமயவின் அதுரலிய ரதன தேரர், உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வில் பங்கேற்கவுள்ளனர்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது என்பது குறித்து ஜனநாயகக் கட்சி இதுவரையில் உத்தியோகபூர்வ தீர்மானம் எதனையும் அறிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது

## விற்பனையாளர் தேவை

**வாராந்த, நாளாந்த பத்திரிகைகளை யாழ். நகரம், கிளிநொச்சி நகரம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள பொது இடங்களில் விற்பனை செய்ய ஆர்வம் உள்ளவர்கள் தேவை. நகரத்தை அண்மித்த பகுதியில் வசிப்பவர் விரும்பத்தக்கது.**

**தொடர்புகளுக்கு-0775224573,**
**0772627710**

**(இ)**

# 17 முறைப்பாடுகள் பதிவு

(கொழும்பு)

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலான 17 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

இவற்றில் தேர்தல் வன்முறை நடவடிக்கைகள் தொடர்பில் மூன்று முறைப்பாடுகளும், தேர்தல் விதிமுறைகளை மீறியமை குறித்து 14 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன.

# பாகிஸ்தானுக்கு எதிரான தொடரை சமன் செய்தது நியூஸிலாந்து



பாகிஸ்தானுக்கு எதிரான 3 ஆவது டெஸ்ட் போட்டியில் நியூஸிலாந்து இனிங்ஸ் மற்றும் 80 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று தொடரை சமன் செய்தது.

பாகிஸ்தான் - நியூஸிலாந்து அணிகளுக்கு இடையிலான 3 ஆவது டெஸ்ட் போட்டி சார்ஜாவில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்று துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான், முதல் இனிங்ஸில் ஹபீஸ் (197) சதத்தால் 351 ஓட்டங்கள் குவித்தது. நியூஸிலாந்து அணியின் கிரேக 7 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பின்னர் தனது முதல் இனிங்ஸை தொடங்கிய நியூஸிலாந்து அணி மக்கலம் (202), வில்லியம்சன் (192) ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தில் 3 ஆவது நாள் ஆட்ட முடிவில் 8 விக்கெட் இழபபிற்கு 637 ஓட்டங்களைக் குவித்தது.

நான்காவது நாள் ஆட்டம் நேற்று தொடங்கியது. தொடர்ந்து விளையாடிய நியூஸிலாந்து அணி 690 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. கிரேக் 65 ஓட்டங்கள் எடுத்தார். பாகிஸ்தான் தரப்பில் ரஹத் அலி, யாசீர் ஷா தலா 4 விக்கெட்டுக்கள் வீழ்த்தினார்கள்.

இதனையடுத்து 339 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2 ஆவது இனிங்சை தொடங்கிய பாகிஸ்தான் அணி, நியூஸிலாந்து பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் 63.3 ஓவர்களில் 259 ஓட்டங்களை எடுத்து அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

நியூஸிலாந்து அணியின் போல்ட் 4, கிரேக் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்கள்.

இதனால் நியூஸிலாந்து இனிங்ஸ் மற்றும் 80 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் 1-1 என சமநிலையில் முடிந்தது.

போட்டியின் ஆட்டநாயகனாக ஹபீஸ், தொடர்நாயகனாக கிரேக் தெரிவாகினர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 டிசம்பர் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.